# கலை மலர்

கோப்பாய்
அரசாங்கமகளிர் ஆசிரியர்
கலாசாலை வெளியீடு

1966

University of Jaffna
378.05
KOP
247164(AR; MAIN)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ்ப் பயிற்சி மாலைகள்

*

இனிய தமிழில் — செந்தமிழில் ஆக்கப்பட்டவை.

மாணவரது மொழி வளமும், இலக்கிய நயமுஞ் சிறக்க உதவுபவை.

கல்விமுறைப் புலமையாளரினதும், மொழி வல்லாரினதும் பாராட்டுக்குகந்தவை.

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபையின் அங்கீகாரம் பெற்றவை.

நூலாசிரியை:

செல்வி. க. சௌ. சந்தனநங்கை அவர்கள்

*

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் புத்தகம் (வாசிப்பு) | | | 1-25 |
| மூன்றும் | ,, | ,, | 1-25 |
| மூன்றும் | ,, | எழுத்துப்பயிற்சி | 1-15 |
| நான்காம் | ,, | (வாசிப்பு) | 1-50 |
| ஐந்தாம் | ,, | ,, | 1-25 |
| ஆறும் | ,, | மொழிப்பயிற்சி | 1-75 |
| ஏழாம், எட்டாம் பொதுத்தராதரப் பத்திர ஆயத்த வகுப்புக்கள் | | | 3-00 |
| செந்தமிழ்ச் சிறுவர்களே சேர்ந்து பாடுவோம் | | | 1-25 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை மலர்

வாழக் கல்வி

அரசாங்க மகளிர் ஆசிரியர் கலாசாலை
கோப்பாய்

1966

UNIVERSITY OF JAFFNA LIBRARY
378.05 KOP AR

UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA

ARCHIVES

Donated by:-
PROF. K. KAILASAPATHY

University of Jaffna
247164
Library

247164

247164

STACKS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நகர மக்களைக் கவர்ந்த
சிறந்த தயாரிப்புகளுக்கு

# லைடன்

லைடன் *Leyden*

- பெனியன்கள்
- ஸ்போட் சேட்டுகள்
- ரீ சேட்டுகள்
- கால் மேசுகள்

தரத்தில் உயர்ந்தவை! விலையிற் குறைந்தவை!!

எங்கும் கிடைக்கும்

ஒருதரம் உபயோகித்துப் பாருங்கள் உண்மை விளங்கும்.

'லைடன்' என்று கேட்டு வாங்குங்கள்.

## லைடன் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்,

7, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

---

போன்: 585 தந்தி: 'மன்சூரு'

நவ நாகரிக நங்கையர் விரும்பி அணியும்
நகைகள், வைரங்களுக்கு

## கே. என். எம். மீரான் சாஹிப்

### தங்கப்பவுண் நகை மாளிகை

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை மலர்

கோப்பாய்
மகளிர் அரசினர்
ஆசிரிய கலாசாலை
வெளியீடு

1966

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| இதழாசிரியர் குழு | 1 |
| கழக வாழ்த்துப்பா | 2 |
| பேராசிரியர் குழு | 3 |
| அணிந்துரை | 4 |
| தமிழ்த் தாய் வாழ்த்து | 5 |
| கலைமலர் வாழ்த்து | 6 |
| இதழாசிரியர் உரை | 7 |
| அதிபர் ஆசியுரை | 8 |
| The Indian High Commissioner Hon. Beamson Sachaar's Speech at the Teacher's Training College, Kopay, Jaffna | 9 |
| சச்சார் ஆங்கில உரையின் தமிழாக்கம் | 10 |
| குழந்தை இலக்கியம் | 12 |
| வீரமாமுனிவர் தமிழ்ப்புலவரான இவரின் வாழ்வின் குறிக்கோளும் தமிழிலக்கிய வளனும் | 18 |
| A Social Bias in Education | 26 |
| காலைக்காட்சி | 29 |
| அந்த நாள் இனி வருமோ? | 30 |
| கற்றலில் முதிர்ச்சியும் பயிற்சியும் | 34 |
| உண்மை முதிரும் | 38 |
| சொல்வதெழுதுதல் கவர்ச்சிக்குரிய பாடமாகுமா? | 45 |
| கவிதை பிறந்ததையா | 48 |
| கண்ணன் காட்டிய வழி | 50 |
| குடியியற் பண்புகளை ஆரம்பபாடசாலை மாணவரிடம் வளர்ப்பதெங்ஙனம்? | 54 |
| இசையில் ஒன்றிய எருமை | 59 |
| Story Telling as a Speech Device in the Teaching of English as a Second Language | 62 |
| பேரிடியை வீழ்த்திவிட்டுப் பிரிந்ததேனோ! | 65 |
| எனது கற்பித்தல் அனுபவங்கள் | 67 |
| எண்பாடமும் கற்பிக்கும் ஆசிரியரும் | 70 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கலாசாலை நினைவுகள் 74
என்னிலை விளங்க உரைப்பீர் ! 76
தொல்காப்பியரின்
இலக்கணக் கொள்கைகள் 78
அந்த நாள் இனி வருமோ ? 89
(முன் தொடர்ச்சி)
இங்கு இவ்வருடத்திலே 93
எங்கழக ஆளுமன்றம் 98
தமிழ் மன்றம் 99
நுண்கலை மன்றம் 101
சமூக இயல் மன்றம் 102
இந்து சமய மகளிர் மன்றம் 103
கிறீத்தவ மகளிர் மன்றம் 105
விளையாட்டு மன்றம் 106
அருணா இல்லம் 108
இராதா இல்லம் 109
சுவர்ணா இல்லம் 110
1965-ம் ஆண்டு பயிற்சி பெற்று
வெளியேறிய மாணவிகள் 111
1966-ம் ஆண்டு பயிற்சி பெற்று
ஆசிரியராக வெளியேறும்
மாணவிகள் 112

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் குழு

ஆலோசனையாளர் :

செல்வி. க. சௌ. சந்தனநங்கை

திருவாட்டி. சு. செல்வத்துரை

திருவாட்டி. ஜீ. கூல்

இதழாசிரியர் :

திருவாட்டி. மனோன்மணி நடராசா

உப-இதழாசிரியர் :

செல்வி. சீதாதேவி கணபதிப்பிள்ளை

செயற்குழுவினர் :

திருவாட்டி. மேரி திரேசா அல்விறெட்

திருவாட்டி. விமலாதேவி கைலாயநாதன்

திருவாட்டி. பொன்னரியம் சோமராஜேந்திரம்

திருவாட்டி. பரிமலர் சின்னத்துரை

செல்வி. நேசம்மா இராமலிங்கம்

செல்வி. மனோரஞ்சிதம் இராசரத்தினம்

செல்வி. சாருகாசினி வேலாயுதம்

செல்வி. இரத்தினபூபதி நமசிவாயம்

செல்வி. பார்வதி ஆறுமுகம்

செல்வி. கமலாம்பிகை வேலுப்பிள்ளை

எங்கள் கலாசாலைக்குத் தங்கள் சஞ்சிகைகளை அனுப்பி வைத்த கல்லூரிகளுக்கு எமது உளங்கனிந்த நன்றிகள் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழக வாழ்த்துப்பா

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

யாழ் நகர் மீதமர் கோப்பாய் மகளிர்
ஆசிரிய கலாசாலை வாழ்க.

அநுபல்லவி

அறிவொளி பெருக்கியே வாழ்க
ஆசிரியர் மாணவர் வாழ்க (யாழ்)

சரணங்கள்

1. அறிவியற் கலையுடன் அழகியற் கலைகள்
அறிந்திடும் பான்மையை அறிவோம்
அருந்தமிழ் அகநூல் அறிவுறு கணிதம்
ஆவன நிறைந்திடப் பயில்வோம். (யாழ்)

2. ஒழுக்கமும் நேர்மையும் உடலுறுபலமும்
உண்மையில் ஓங்கிடப் பயில்வோம்
ஓரிரண்டாண்டாய் ஓர்ந்திடும் கலைகள்
உலகினில் ஓங்கிடப் பயில்வோம். (யாழ்)

3. தண்டமிழ் ஓங்கவே தொண்டுகள் புரிந்து
தரணியிற் காப்போம் எம் மானம்
எண்டிசை புகழ எம்கலாசாலை வாழ்க
இயன்ற நற்பணிகளைப் புரிவோம். (யாழ்)

4. அரசினர் ஆசிரியர் ஆற்று நல்லுதவி
அகிலத்தில் என்றென்றும் மறவோம்
அதிபரும் ஏனைய ஆசிரியர் குழாமும்
ஆண்டவனல் என்றும் வாழ்க. (யாழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் குழு

திருவாட்டி. இ. ஆனந்தக்குமாரசாமி, M.A., MSC.

திருவாட்டி. ஜெ. தே. பெரேரா, 1st Class Eng. Trd.

திருவாட்டி. சு. செல்வத்துரை, B. A. Dip. in Edu.

திருவாட்டி. ஜீ. கூல், B. SC. First Class Hon's (Lond.)

திருவாட்டி. மி. தாஸ், B. A.

செல்வி. க. சௌ. சந்தனநங்கை, 1st Class T. Trd.

திருவாட்டி. பொ. பத்மநாதன்—சங்கீதபூஷணம்

திருவாட்டி. லூ. லூ. ஜேக்கப், Art. Teach. Cert.

திருவாட்டி. டெ. தருமராசா, P. T. I.

திரு. சி. பொன்னம்பலம், Health Educator.

எழுது வினைஞர்

திருவாட்டி. ம. சின்னக்கோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி

நீதியரசர் H. W. தம்பையா Q. C. அவர்கள்

உவந்தளித்த

# அணிந்துரை

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கழகமாணவிகள் தமது கழக வருடாந்தக் கலைமலர் வெளியீட்டுக்கு அணிந்துரை வழங்குமாறு கேட்டு என்னை மதித்தமைக்கு எனது உளமார்ந்த நன்றியை அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

இவ் வருடாந்த மலர் மிகவும் பாராட்டக் கூடிய முறையில், மொழியின்பம் ததும்பும் மதுரமான தமிழில், மாணவிகளின் கனிந்த கவிகள், கனியுறு கட்டுரைகள், சிறந்த கதைகள் என்பன மிளிரும் இதழாகத் துலங்குகின்றது. இத்தோடு மாணவிகள் எடுத்த விழாக்களின் விபரங்களையும் சிறப்பாய் இந்த இதழ் மூலம் நாம் அறிகின்றோம்.

இப்பயிற்சிக் கழக மாணவிகள் எமது கம்பன் கழகம் நடாத்தும் வகுப்புக்களில் மகிழ்ச்சியோடு பங்கு பெறுவதைக் கண்டு மகிழ்கின்றோம். அவர்களின் பெரும் முயற்சியை வியந்து, ''நாளொரு மேனி பொழுதொரு வண்ணம்'' என்றபடி இம்மகளிர் கழகம் வளரவேண்டும் என்று, என்றும் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து

காதொளிர் குண்டலமும் கைக்குவளை
யாபதியும் கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடைக்கு
மேகலையும் சிலம்பா ரின்பப்
போதொளிர் பூந்தாமரையும் பொன்முடிச்
சூளாமணியும் பொலியச்சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடுவாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமலர் வாழ்த்து

திருவர வுயர்கலை தருமொரு பெருமைத் தெய்வச
காயமுளாய்!
மருவிய பவமற உயர்வழி புகலும் மதியினர் நேயமுளாய்!
அருமறை தழுவிய கோவைக் கழகத் தஞ்சன நீராடி
வருகலை மலரே! யிணையறு மணியே! வாழிய வாழியவே.

— பழைய மாணவி

# கலைமலரே வருக

வருவாய் வருவாய் கலைமலரே
வளம்பெற உன்புகழ் பாடிடவே
தருவாய் சங்கத் தமிழினையே
தரணியில் உன்னைப் போற்றிடவே
கருவாய் உருவாய்க் களிப்புடனே
கன்னிகை யாயினை இருபதிலே
திருவாய்க் கதிராய்த் திகழ்மலரே
திருவே மலரே வருகவே.

அருள்வாய் பெருகும் கவின்கலையே
அறிவுக் கலையை அருள்வாயே
தெருள்தேர் தெய்வக் கலைதனையே
தெய்வத் தமிழே தருவாயே
மருளை நீக்கிடும் மலர் மணியே
மங்கையர் நாங்கள் மகிழ்ந்திடவே
பொருளே போற்றும் உலகினிலே
புகழே பரப்பி வருகவே.

— செல்வி. வே. சாருகாசினி

# எங்கழகம் ஓங்க மலர்ந்தனையே

அங்கண்மா ஞாலத் திருளகற்றும் ஞாயிறுபோல்
எங்கழகம் ஓங்க மலர்ந்தனையே — தங்குபுகழ்
நானிலத்தோர் ஏத்தும் நன்கலைக ளத்தனையும்
நான்சுவைக்க வைத்தாய் நயந்து.

— திருவாட்டி. சி. பரிமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் உரை

தேனூறு பாயுமொரு கலைமலரை உங்கள்
திருக்கரத்து வைக்கின்றோம் கரைகடந்து பாயுங்
காணுறு கண்டிடுவீர் கலையமுத முண்டு
களிப்படைவீர் உலகோரே இதயநிறை நன்றி.

இம்மலர் வழக்கம்போல அறிஞர், ஆசிரிய மாணவர் என் போரது கைவண்ணம் திகழ மலர்கின்றது.

இஃது ஆண்டுக்கொருமுறைதான் மலர்வதானாலும், அழகின் எழிலுருவாய், கருத்துக் கருவூலமாய், பேரறிவுப் பேழையாய் விளங்கி மணம் பரப்புகின்றது.

இம்மலர் கருத்துயர் கட்டுரைகள், கவினுறு கவிதைகள், அறிஞர் பலரின் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கிய அரிய உரைகள், இன்பம் நல்கும் இலக்கியப் படைப்புக்கள், புதிய கல்வி முறைகள் என்னும் பல சிறப்பு இயல்புகளைத் தாங்கிக் கலை மணங்கமழும் கமலமெனப் பொலிந்து விளங்குகின்றது.

இக்கலை மலரைச் சிறப்புடன் வெளியிடுவதற்கு விடயங்கள் தந்துதவிய அறிஞர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய மேலவர்க்கும், ஆலோசனைகள் பல கூறி, ஆக்கமும், ஊக்கமுமளித்த அதிபர், விரிவுரையாளருக்கும், விளம்பரங்கள் தந்துதவிய அன்பர்களுக்கும், புகைப்படத்துறையினர்க்கும், மனஞ்சலியாது ஒத்துழைத்த மலர் வெளியீட்டுச் செயற்குழுவினருக்கும், அழகுபெற அச்சேற்றி உதவிய அழுத்தகத்தாருக்கும் எம் உளம் கனிந்த நன்றி உரித்தாகுக.

திருவாட்டி. ம. நடராசா,
இதழாசிரியர்.

ம. அ. ஆ. க.
கோப்பாய்,
29-9-66.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் ஆசியுரை

எம்மை எதிர் நோக்கியிருக்கும் புதிய கல்வி அமைப்பில், ஆசிரியர்களுடைய பணி மிக முக்கியமானது. மாணவர்களை அவரவராற்றல், ஆர்வநிலைக்கேற்பத் தரம்பிரித்துக் கல்வியூட்டுதல், தொழிற்கல்வி அளித்தல், அதற்கடிப்படையான தகுதியான மனப்பாங்கினை வளர்த்தல் போன்ற கருமங்களைச் சீரான முறையில் நிறைவேற்றும் பொறுப்புக்கள் ஆசிரியர்களுடைய முக்கிய கடமைகளாகும்.

இவ்வாருன சேவைகளுக்கு ஆசிரியர்கள் அனைவரும் சிறப்பாக எமது ஆசிரிய கழகத்திற் பயிற்சி பெற்று வெளியேறியுள்ள, வெளியேற விருப்பவர்களும் பூரண ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என்பது எனது அவா.

எமது கழக வெளியீட்டில் ஆசிரிய மாணவர் கல்வி, கலை சம்பந்தமான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்கள். வருங்காலத்தில் இவர்கள் இத்துறைகளில் சிறந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு நாடு நலன்பட வாழ்வார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்



திருவாட்டி. இ. ஆனந்தக்குமாரசாமி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், விரிவுரையாளருடன் எங்கழக ஆளுமன்ற உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*The Indian High Commissioner Hon. Beamson Sachaar's*

# Speech at the Teacher's Training College, Kopay, Jaffna on 23-8-66.

I do not have to assure you how thrilled my wife and I feel to be in your midst.

I am one of those fortunate persons who had the privilege of sitting at the feet of Mahatma Gandhi and gaining inspiration from him. You are all teachers. We have been told by the scripturers, cultural servants, sages and seers that the role of the teachers is the loftiest of all. The concept of a teacher is common to the cultures of both India and Ceylon. The status of a teacher is among the highest. You may be aware of the sanskrit verse: that is the three persons, the mother, father and the teacher—all three go to build up the future of a child, which means the future of the country—which in effect the future of the whole world.

The first thing I want to tell you is that you must be fully aware or conscious of your status. That consciousness should not be for promotion of one's right, but for the observance of one's duty.

Gandhiji did not believe in any right. He believed only in duty or deeds. He said if everyone of us do our duty properly, the results will follow automatically. What is the responsibility of a teacher? His or her first responsibility is to develop the undeveloped mind of a child entrusted to his or her care. What would a mother like a child to be? Would she like the child to be a good for nothing person or would she like the child to grow into a person of noblest and highest character. You are all very experienced persons to be told that a teacher who only preaches but does not practise will not cut much ice with her pupil. Children unconsciously imbibe the spirits of their parents. I hope most of you know that when a child is entrusted to the care of a preceptor he is supposed to enter his second birth.

You all know that the real strength of the country is her sons and daughters. Therefore in the process of educating the children you have to make them most patriotic children of your country. You have to fill them with patriotism of the highest order. You have also to tell them that the world today is a large family and no country can live in isolation. All countries, whether India, Ceylon or any other country in the world, have all to live in co-operation with one another. Therefore on the international plane you have to teach your pupils the good verse that SARVE SUKHINO BHAVANTHU.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டு ஆவணித்திங்கள் இருபத்திமூன்றும் நாள் செவ்வாய்க்கிழமை காலை கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கழகத்தில் நடந்த பழையமாணவர் மன்ற நிகழ்ச்சியின்போது,

ஈழத்தின் இந்திய உயர் ஆணையாளர்,

**உயர்திரு. பீம்சென் சச்சார் அவர்கள்**

நிகழ்த்திய

# ஆங்கில உரையின் தமிழாக்கம்

இன்று நானும், என் பாரியாரும் உங்கள் விழாவிற் கலந்து கொள்வதை எண்ணி மிக்க மகிழ்வெய்துகிறோம். மகாத்மாகாந்தியடிகளின் பாதத்தருகிருந்து அவருடைய உயர்ந்த கருத்துக்களால் ஈர்க்கப்படும் வாய்ப்பினைப் பெற்றுள்ள அதிஷ்டசாலிகளுள் நானும் ஒருவன்.

நீங்கள் எல்லோரும் ஆசிரியர்கள். ஆசிரியப்பணி எல்லாவற்றினும் உயர்ந்ததென்று வேதங்களை உணர்ந்த முனிவர்களும், கல்விமான்களும், ஆராய்ச்சியாளர்களும் கூறுகின்றனர். இந்தியாவினதும், ஈழத்தினதும் பண்பாடுகள் ஆசிரியரைப்பற்றி ஒரே கருத்துடையனவாக இருக்கின்றன. ஆசிரியன் அந்தஸ்து உலகில் மிகவும் உயர்ந்தது. வடமொழியில் உள்ள ஒரு சுலோகம் தாய், தந்தை, ஆசிரியன் ஆகிய மூவரும் ஒரு குழந்தையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றனர் எனக் கூறுகின்றது. அதாவது நாட்டின் எதிர்காலம் இவர்களிலேயே தங்கியுள்ளது. இறுதியில் உலகத்தின் வருங்காலமும் இவர்களையே சார்ந்தது என்பது இதன் பொருளாகும்.

உங்கள் அந்தஸ்தைப்பற்றி நீங்கள் பூரண உணர்வுடையோராக இருத்தல்வேண்டுமென்பதை முதற்கண் உங்களுக்குக் கூற விரும்புகிறேன். இவ்வறிவு ஒருவருடைய உரிமைகள் எவையென்பதை அறிந்து உத்தியோக உயர்வைப் பெற்றுக் கொள்வதற்காக மட்டுமன்று. ஆசிரியர் கடமை உணர்வோடு செயலாற்றுவதையே இது வலியுறுத்துகின்றது. காந்தியடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர் தினத்தில்...



இலங்கையில் இந்தியத் தூதுவர் உயர் திரு. பீம்சென் சச்சார் அவர்களை மங்கள ஆரத்தியுடன் பழைய மாணவர்கள் வரவேற்கின்றனர்.



பழைய மாணவர் தினத்தில், 'ஆசிரியர் பணி' பற்றி திரு. பீம்சென் சச்சார் அவர்கள் உரையாற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித உரிமைகளிலும் நம்பிக்கையுடையவரல்லர். அவர் கடமையுணர்வுடன் செயலாற்றுவதிலேயே நம்பிக்கையுடையர். ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்வாராயின் அவற்றுக்குரிய பயன் தாமாகவே அமையும் என்பது அவர் கருத்தாகும்.

ஓர் ஆசிரியன் பொறுப்பு யாது? அவருடைய முதலாவது பொறுப்பு அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்ட ஒரு குழந்தையின் வளர்ச்சியடையாத உள்ளத்தை வளர்ச்சியடையச் செய்வதேயாம். ஒரு குழந்தை எவ்வாறாக வளரவேண்டுமென ஒரு தாய் விரும்புவாள்? அப்பிள்ளை உயர்ந்த பெருந்தன்மையுள்ள குணவாளாக விளங்குவதைத்தானே அவள் விரும்புதல்கூடும்.

ஓர் ஆசிரியர் சாதனை செய்யாமல் வெறும் போதனையையே செய்வாராயின், அவர் மாணவர்களிடத்து எதனையுஞ் சாதிக்க இயலாதவராவரென்பதை நான் உங்களுக்குச் சொல்லவேண்டுவதில்லை. நீங்கள் மிக்க அனுபவம்வாய்ந்தவர்கள் பிள்ளைகள் தங்களை அறியாமலே தங்கள் பெற்றோரது தன்மையைப் பெற்றுக்கொள்ளுகின்றனர். ஓர் ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் ஒரு குழந்தை ஒப்படைக்கப்படும்போது அவன் இரண்டாவது பிறப்பை அடைந்தவனாகின்றான் என்பதை நீங்கள் எல்லோரும் உணரவேண்டும்.

ஒரு நாட்டின் உண்மையான பலம், அந்நாட்டின் குழந்தைகள் தாம்; எனவே, அவர்களுக்குக் கல்வியூட்டும்போது நாட்டுப்பற்று உடையவர்களாக ஆக்குவதோடு, உயர்ந்த தேசப்பற்றினையும் அவர்களுக்கு ஊட்டவேண்டும். அன்றி, இன்றைய உலகம் ஒரு பெரிய குடும்பம் போன்றதென்பதையும், எந்த ஒரு நாடும் தனித்து நிற்க இயலாது என்பதையும் அவர்களுக்கு விளக்குவதும் அவசியம். எல்லா நாடுகளும் அதாவது ஈழமோ, இந்தியாவோ அன்றி உலகில் உள்ள வேறு எந்த நாடோ ஒன்றுடன் மற்றொன்று தொடர்புகொண்டதாக வாழவேண்டும். எனவே, சர்வதேச அடிப்படையில், உங்களுடைய மாணவருக்கு **'எல்லோரும் சேமமாக வாழட்டும்'** என்னும் பொருளமைந்த பின்வரும் அடியைக் கற்பிப்பீர்களாக.

**''சர்வ சுகினோ பவந்து''.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை இலக்கியம் (கவிதைகள்)

—இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள்

"ஏடுதூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே
நாடுகாக்குந் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்"

என்று குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பாடியுள்ளார். உண்மை. "தலைவராய் நாளை விளங்கப் போகும் குழந்தையின்" பண்பாடான கல்வியில் அக்கறை செலுத்துவது ஆசிரியரதும், பெற்றோரதும் முக்கியமான கடமைகளில் ஒன்றாகும். பெற்றோர் கள் குழந்தைகளைப் பார்த்துப் "படி, படி" என்கிறார்களே யொழிய அவர்கள் என்ன படிக்கிறார்கள் என்பதை அவதானிக் கிறார்களில்லை. குழந்தை படிக்கிறது என்பது முக்கியமானது அன்று. எதைப் படிக்கிறது? என்பதுதான் முக்கியம்.

பாடசாலைகளிலே படிக்குங் குழந்தைகள் அங்கே படிப்பிக்கும் இலக்கியப் பாடல்கள், அபிநயப் பாடல்கள், கிராமியப் பாடல் கள், சிறுகதைகள் என்பவற்றோடு திருப்தியடைந்து விடுவ தில்லை. வீடு திரும்பியதும் பாட்டியிடமோ, தாத்தாவிடமோ கதைகளையும், பாடல்களையும் கேட்கப் பிரியப்படுகின்றார்கள். சிறிது வாசிக்கத் தெரிந்த பிள்ளைகள் அகப்பட்ட புத்தகம், பத்திரிகைகளை வாசிக்கத் தொடங்கி விடுகின்றனர். கல்லூரி களிற் படிக்குஞ் சிறுவர்கள் பத்திரிகைக் கடைகளிலே தொங்கும் ஆபாசப் பத்திரிகைகளையும் அவர்களுக்கென ஏமாற்றி விற்குங் கொலை, கொள்ளை என்பன பற்றிய துப்பறியுங் கதைகளையும் ஆர்வத்தோடு படிக்கிறார்கள். பொதுவாகத் தமிழ்'சினிமா'வில் பாடப்படும் ஆபாசக் காதல் பாட்டுக்களையும் நாகரிகமானவர், வாயில் பேசக்கூசும் சொற்களையுடைய அங்கதப் பாடல்களையும் பாடும் சிறுவர் சிறுமியரை எல்லா வீடுகளிலும் இன்று நாங் காணலாம். இதைக் கேட்டு மனமகிழும் பெற்றோரையும், அவை களையே பாடும்படி தூண்டும் நாகரிகக் குடும்பஸ்தர்களையுங் கண்டு கொண்டு தான் இருக்கிறோம். சிறுவர்களின் உடல் நலத் தைப்பற்றிக் கவலைப்படும் பெற்றோர்கள், அவர்களின் உளப் பண்பாடு இவற்றால் பாதிக்கப்படும் என்ற உண்மையை அறி கின்றார்களில்லை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவிலே திரியும் சிறுவன் முதல், பாடசாலையிற் படிக்கும் குழந்தைகள் வரை சினிமாப் பாடல்கள் பாடுவதைக் கேட்கிறோம். பாடசாலையிற் படிக்கும் பாடல்கள் வேப்பங்காயைப் போலக் கசக்க, சினிமாப்பாடல் கற்கண்டுபோல் அவனுக்கு இனிப்பானேன்? இதைப்பற்றி யாராவது யோசித்ததுண்டா? பொருள் விளங்காத கர்ணகடூரமான சொற்களுள்ள பாடல்களைக் கூட அவன் மனப்பாடஞ் செய்து விடுகிறானே! காரணமென்ன? இதை மாற்றுவதற்கு வழியென்ன வென்பதைப்பற்றி ஆசிரியர்களுஞ் சிந்தித்து செயலாற்றாது விட்டால் ஒழுக்கம், பண்பாடு என்று வெறுமனே கூச்சல் போடுவதாற் பயனொன்றும் இல்லையே.

எவற்றைப் படியாதே, எதைச் செய்யாதே யென்று குழந்தைகளிடம் வற்புறுத்துகிறோமோ அதனை விடாப்பிடியாய்ச் செய்வது குழந்தையின் இயல்பு. எனவே, அவர்களின் இரசனைத் திறனை வளர்க்கக் கூடிய— விரும்பிப் படிக்கக்கூடிய பாடல்களைச் சுலபமான மெட்டுகளில் நாம் ஆக்கல் வேண்டும். குழந்தைகளுக்காக எழுதப்படும் கதைகள், கட்டுரைகள், நாடகங்கள் கவிதைகள் எல்லாம்,

1. அவர்களின் மனத்தைக் கவரவேண்டும்.
2. பண்பாட்டை உயர்த்த வேண்டும்.
3. படைப்புத்திறனை ஊக்க வேண்டும்.
4. கற்பனையைப் பெருக்க வேண்டும்.
5. அறிவை வளர்க்க வேண்டும்.
6. ஆசையைத் தூண்ட வேண்டும்.

என்னும் நோக்கங்களை யுடையவர்களாய் இருத்தல் வேண்டும் என்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடியது. குழந்தைகளுக்காகப் பாடும் கவிஞர்கள் இன்னும் சில விடயங்களை ஞாபகத்தில் வைத்திருத்தல் நன்று. அவை :

1. இலகுவான சொற்கள்.
2. எளிமையான மெட்டு.
3. தாளம் போட்டுப் பாடக்கூடியனவாய பாடல்கள்.
4. சூழலில் கண்டும் கேட்டும் அனுபவிக்கும் பொருள்.
5. நல்ல கதைகள்.
6. வந்த சொற்களே மீண்டும், மீண்டும் வருதல்.
7. அபிநயம் செய்யக்கூடிய பதங்கள் என்பன அவற்றிற் சிலவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான குழந்தைப் பாடல்களை நாம் படிப்பித்தால், அடிக்கடி ஞாபகம் செய்வித்தால், காணும் இடங்களிலெல்லாம் எழுதிப் படங்களுடன் தூக்கினுல் சினிமாப்பாடற் பைத்தியத்தை ஓரளவு ஒழித்துக்கட்ட முடியும். இவ்வளவு வருடங்களாக நாம் இலக்கிய அபிநயப்பாடல்கள் என்பனவற்றைப் படிப்பிக்கவில் லையா? 'அம்மா மெத்தப் பசிக்கிறது' தொடக்கம் அழ. வள்ளி யப்பாவரை படிப்பித்து விட்டோமே! என்று நீங்கள் கூறுவது என் காதில் விழுகிறது. உண்மை. ஆனுலும் இன்னும் சிறப்பாக, உண்மையான அக்கறையுடன் செய்ய வேண்டுமென்பதுதான் என் ஆசை, அவா. அதற்கு ஆசிரியர்களும், பெற்ருேர்களும் என்ன செய்தல் வேண்டும்? பழைய பாடல்களிலேயே சுற்றிச் சுற்றி வராமல் புதிய பாடல்களைச் சொல்லிக் கொடுத்தல் வேண்டும். தேசிகவிநாயகம்பிள்ளையோடும், அழ. வள்ளியப்பாவோடும் குழந் தைப் பாடல்கள் முடிந்துவிடவில்லை. பாரதியார் கவிதைகளுக் குப் பிறகு 350 கவிதைத் தொகுதிகள் வரை வெளிவந்திருக் கின்றன. (350 கவிதைத் தொகுதிகளை நானே வைத்திருக்கின் றேன்.) அவற்றுள் அறுபது நூல்கள் குழந்தைப் பாடல்கள். (அவற்றின் அட்டவணையை விரிவஞ்சிக் கொடுக்க முடியவில்லை). அவற்றை நீங்கள் தேடிப்பிடித்து, இன்ன வயதுக் குழந்தைக்கு இந்த இந்தப் பாடல்கள் ஏற்றவை என்று அட்டவணை செய்து படிப்பிக்க வேண்டும். ஒவ்வொருவராலும் இப்படிச் செய்ய முடியாவிட்டால் விடுமுறைக் கழகங்கள் மூலம் முயற்சிக்க வேண் டும். பழைய பாட்டுகளோடும், வாசிப்புப் புத்தகப் பாடல்க ளோடும் திருப்தியடைந்து விட்டால் சிறுவர்கள், தமது மனப் பூரிப்புக்காகப் பாடும் பாடல்களை நாம் முறியடிக்கவே முடியாது.

ஈழத்துப் பிள்ளைகட்கு இங்குள்ள சூழ்நிலையில் இங்கு வழங் கும் சொற்களை வைத்துப் பாடிய குழந்தைப் பாடல்களே இரசனை யைக் கொடுக்கும். இது அநுபவ உண்மை. லட்டு, ஓடம், முறம் அண்டை, றெயில், கோலிக்குண்டு, சாவி, கடிகாரம் முதலிய சொற்கள் சிறு பிள்ளைகட்கு விளங்காதவை. இச்சொற்கள் வரும் பாடல்களைப் படிப்பித்துப் பார்த்தால் கஷ்டம் தெரியும். அது போலவே ஆடிப்பிறப்பும், கத்தரி வெருளியும் தமிழ்நாட்டுக் குழந்தைகட்கு இரசிக்காது என்பதும் உண்மை. எனவே, எங்கள் நாட்டுக் குழந்தைகட்கேற்ற பாடல்கட்கு நாமே முயற்சிக்க வேண்டும்.

அப்படியான முயற்சிகள்— கவிதைத் தொகுதிகள்— ஈழத் தில் இல்லையா? இருக்கின்றன. ஆனல், குறிப்பிட்டுக் காட்டக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவைகளாகப் பெருந் தொகையிலில்லை. ஐம்பது வருட காலத்திலே இருபது குழந்தைத் தொகுதிகளையும், சிதறுபூக் களைப்போலப் பத்திரிகைகளில் சில பாடல்களையும் நாம் பெற்றிருக்கின்ருேம். ஆனுல், அப்பாடல்களில் தெரிந்து ஐம்பது பாடல் களை எடுத்தால் அவை ஈழம் பெருமைப்படக் கூடியவையாக இருக்குமென்பதில் ஐயமில்லை. வேந்தனுரின், "காலைத்தூக்கிக் கண்ணில் ஒற்றி" என்ற சிறந்த குழந்தைப் பாடலுக்கு இணையான ஒன்று தமிழ் நாட்டிலேயே வெளிவரவில்லையே. நாம் சோம்பேறிகளாக, தூங்கு மூஞ்சிகளாக இருந்து கொண்டு யாதொரு முயற்சியும் செய்யாமல் தமிழ்நாடே நமக்குக் கதி என்றிருந்தால் நம் மாணவர்களின் இரசனைத் திறன் என்னுவது!

ஆசிரிய கலாசாலைகளிற் படிக்கும் மாணவ, மாணவிகள் இத் துறையில் நன்கு முயற்சிக்கலாம். வெளி வந்திருக்கும் ஈழத்துக் குழந்தைப் பாடல் தொகுதிகளிலிருந்தும் பத்திரிகைப் பரவையுட் புதையுண்டிருக்கும் பாலர் பாடல்களிலிருந்தும் பாடல்களை வரிசை செய்து, வருடம் ஒரு நூலோ, மூன்று வருடத்துக்கு ஒரு நூலோ வெளியிடுதல் தக்க பிரயோசனத்தையளிக்கும். உண்மையான தொண்டாகவும் இருக்கும். இப்படியான குழந்தைப் பாடல் தொகுதிகளை ஈழத்துச் சான்ருேர்கள் தொகுத்து ஏற்கனவே வெளியிட்டு நமக்கு வழிகாட்டியிருக்கிருர்கள். 1918-ம் ஆண்டிலே, இற்றைக்கு 48 வருடங்களுக்கு முன்பே, வித்தியாதிகாரி அவர்களின் விருப்பத்தின்படியும், அனுமதிப்படியும் இலங்கை அரசாட்சியாரின் பிரதான தமிழ் முதலியாராகிய ச. வைத்தியநாதரால் "தமிழ்ப் பாலபோதினி" என்ற குழந்தைப் பாடல்களின் அபிநயப்பாடல்களின் தொகுதியொன்று தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு இத்துறையில் கால் எடுத்து வைக்க எத்தனையோ வருடங்கட்கு முன்பே ஈழம் முயற்சித் துள்ளது பெருமைப்படத்தக்க தொன்ருகும்.

இந்தத் தமிழ்ப் பாலபோதினியைப் பற்றிச் சில குறிப்புக் கள் தரவேண்டியது அவசியம். "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு", "கைவீசம்மா கைவீசு" "கையின் விரல் ஐந்துமொன்ருய்", "என் தாயே என் தாயே", "குண்டிடுக்கி குடுகிடுக்கி" முதலிய சிறந்த பாட்டுக்களை உள்ளடக்கிய இருபத்தைந்து பாட்டுக்கள் இந்நூலில் இருக்கின்றன. சில பாடல்கள் எக்காலத்திற்கும் புளிக்காமல் பாடக்கூடிய அருமையான பாடல்கள். அவற்றை நாம் மீண்டும் வழங்கச் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தமிழ்ப் பாலபோதினி முயற்சியைப் போலவே வட பெரும்பாக வித்தியாதரிசியாக கே. எஸ். அருணந்தியவர்கள் இருந்த காலத்தில் ஆசிரிய சங்கங்களின் உதவியுடன் போட்டி யொன்றை ஏற்படுத்தி 1935இல் 'பிள்ளைப்பாட்டு' என்ற தொகு தியைக் கொண்டு வந்தார்கள். 'ஆடிப் பிறப்பு', 'கத்தரி வெருளி' முதலிய சிறந்த சோமசுந்தரப்புலவர் பாடல்களையும், மா. பீதாம்பரம் அவர்களதும், பிறநல்ல ஆசிரியர்களதும் பாடல் களையும் அத்தொகுதியிற் காணலாம்.

இந்த இரண்டு தொகுதிகளையும் அடுத்து கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகிய சந்தனநங்கை அவர்களது "செந்தமிழ்ச் சிறுவர்களே சேர்ந்து பாடுவோம்" என்ற நூலை அவசியம் குறிப்பிட வேண்டும். அருமையான, தேவையான முயற்சி அது.

இப்படியான தொகுதிகளை வெளியிட விரும்புபவர்களின் உபயோகத்துக்காகப் பின்வரும் அட்டவணையை — ஈழத்துக் குழந் தைப் பாடல்களின் அட்டவணையைக் கொடுத்துள்ளேன். இந் நூல்கள் என் பார்வையுள் அகப்பட்டவைகள். அகப்படாத சில வும் இருக்கலாம்.

1. தமிழ்ப் பாலபோதினி [அரசாங்கம்] (1918).
2. பிள்ளைப்பாட்டு வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கம் (1935)
3. நவராத்திரிப் பாக்கள் [சில பாடல்கள்] தா. சுவாமிநாதன், (1936)
4. அபிநயப் பாட்டு— க. இராசையா (1939).
5. வளர்பிறை [சில பாடல்கள்] மு. செல்லையா (1942)
6. பாலர் கீதம்— யாழ்ப்பாணன் (1948)
7. சேர்ந்து பாடுவோம் — க. சௌ. சந்தனநங்கை (1954)
8. சிறுவர் செந்தமிழ்— சோமசுந்தரப்புலவர்
9. இளைஞர் விருந்து— முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி (1958)
10. கவிதைக் குவியல்— கோசுதா (1955)
11. பாலர் பாடல்— கோசுதா (1957)
12. நன்மொழி வாழ்த்து— யூ. எல். ஏ. மஜீத் (1961)
13. குழந்தை இலக்கியம்— சாரணகையூம் (1963)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. அறவழிக் கீதம் [சில பாடல்கள்] தொகுப்பாசிரியர் எல். பக்கீர்த்தம்பி (1963)

15. செந்தமிழ்க் கீதமாலை [சில பாடல்கள்] அ. கி. ஏரம்பமூர்த்தி (1964)

16. கவிதைப் பூம்பொழில் [குழந்தை மொழி] வித்துவான் க. வேந்தனார் (1964)

17. பாலர் பாமாலை— வெ. விநாயகமூர்த்தி (1964)

18. மழலைச் செல்வம் [தொகுப்பு நூல்] (1964)

19. குருமோகன்— பாலர் பாடல் [தொகுப்பு நூல்] இ. வள்ளிநாயகி (1965)

20. கனியமுது [தொகுப்பு நூல்] திமிலை. மகாலிங்கம் (1965)

இந்த நூல்களைத் தவிர, மா. பீதாம்பரம், சச்சிதானந்தன், திமிலைத் துமிலன், அம்பி, இ. நாகராசன், சோ. தியாகராசன், செ. கதிரேசர்பிள்ளை, வ. இளையதம்பி (இதம்) பண்டிதர் வீரகத்தி, தம்பு உபாத்தியார் என்ற பத்துப்பேர் குறிப்பிடக் கூடிய குழந்தைப் பிள்ளைப் பாடல்களை எழுதியுள்ளார்கள். பத்திரிகைக் குவியலுள் இவற்றைத் தேடிப் பிடித்து வெளியிட்டால் எங்கள் குழந்தைகள் ஆனந்தமாய்ப் பாடுவார்கள். அகம் மகிழுவார்கள். சாகித்திய மண்டலம் போன்ற அழைப்புக்களும் தங்கள் கடைக்கண் பார்வையைக் குழந்தை எழுத்தாளர்மீது செலுத்தி வருடா வருடம் பரிசு தந்தால் நிச்சயம் பலன் ஏற்படும். குழந்தைப் பாடல்கள் சிறக்கும்.

மக்கள் தெய்வத்தைத் தேடுவதும், பராசக்தியை நாடுவதும் ஓர் இயற்கை வேகம். காந்தம் இரும்பை இழுப்பதுபோல், கற்பூரம் நெருப்பைத் தேடுவது போல், மின்சக்தி எப்போதும் பூமியில் குதித்து மறையக் காத்திருப்பது போல், உயிரானது தான் பிரிந்த தெய்வத்தைத் தேடுகிறது. இதுவும் இயற்கைப் பசி.

—ராஜாஜி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமாமுனிவர்—தமிழ்ப் புலவரான இவரின் வாழ்வின் குறிக்கோளும் தமிழிலக்கிய வளனும்

வண. கலாநிதி. சிங்கராயர் டேவிட் அடிகள்

முதன் முதல் கி. பி. 1947ஆம் ஆண்டின் ஆரம்பத்திற் காலஞ் சென்ற யாழ்ப்பாணத்து நல்லூர் ஞானப்பிரகாச சுவாமியார், கி. பி. 1747-ம் ஆண்டின் ஆரம்பத்திலே பரமகதி யெய்திய, அஃதாவது சரியாய் 200 ஆண்டுத் தூரமான, இம் முன்னேடியைக் குறித்துக் கூறுவது யாதென நோக்கற்பாற்று. வடஇந்தியராகிய முனிவர்களும், தமிழகத்தின் வடக்கிலிருந்து இறங்கி வந்தோரான சமணக் கொள்கையாளரும் பௌத்தரும் எமது இனிய மொழிக்குப் புனைந்திருக்கின்ற காப்பியங்களாகிய ''சிலப்பதிகாரம்'', ''மணிமேகலை'', ''சீவகசிந்தாமணி'' முதலியனவற்றை அணிகளாய் உவந்தேற்றுப் போற்றுவர் தற்போதைய தமிழ் மக்கள். இஃதும் நியாயமானதே. ஆனால், வியப்புக்குரியது யாதெனில் இவருட் சில்லோர், ''தேம்பாவணி'' ''திருக்காவலூர்க் கலம்பகம்'' ''கித்தேரியம்மாள் அம்மானை'' முதலான வீரமாமுனிவரின் செவ்விய நூல்களையோ, மேனாட் டாரான கிறீஸ்த நாவலர்கள் அவற்றை இயற்றினர் என்றமை ஒன்றினையே குறித்து ஒதுக்கிவைப்பதே. உதாரணமாகப் பேரா தனைச் சர்வகலாசாலை நூல்நிலையத்தில் தமிழ்ப் பனுவல்கள் ஏராளமாய் அமைக்கப்பெறினும், வீரமாமுனிவர் சிறப்பாயியற் றிய ''தேம்பாவணி'' கூட அந்நிலையத்திற் காண்பதற்கில்லை யென்று அநேக சர்வகலாசாலை மாணுக்கர் எமக்கு இயம்பியுள் ளனர். வடநாட்டாராயிரென்? மேனாட்டாராயிரென்? சமணர் பௌத்தர்கள் ஆயிர் என்? கிறீஸ்தவராயிரென்? எமது தாய் மொழியைக் கசடறக் கற்று, அதற்கு அணிகலனுகத் திகழும்படி செய்த பனுவல்கள் உளவாயின், அவற்றைப் பொன்னேபோற் போற்றுவதன்றோ புலவர்க்கு ஏற்புடையதாகும். தலைசிறந்த ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், நடுநிலைமையான அன்ன தோர் நோக்கையே மேற்கொண்டு, இத்தாலியிற் பிறந்த அன் னியரும், தாம் ஒவ்வாத சமயத்துறையிற் படிந்த ஒரு கிறீஸ்த வருமான வீரமாமுனிவர் இயற்றிய இரு செய்யுள் தொகுதிகளை அடியோடு ஆராய்ந்து, அவற்றிற் பொதிந்துள்ள அழகுகளை எடுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோதியிருக்கின்றனர். உண்மைத் தமிழ் அன்பரே, தமிழின் இனிமை எவ்வெந் நூலிற் செறிந்திருப்பினும், அவ்வந் நூலை ஆராய்ந்து மகிழ்வர். புரைதீர்ந்த புலமைபடைத்தோரே பிறர் மாட்டுத் துலங்கும் புலமையை மதிக்க வல்லவர் ஆவர். வீரமா முனிவர் இசைத்த செய்யுள்நடை நூல்களுள் தலைசிறந்தது 'தேம்பாவணியே'. இதனைக் குறித்துச் சற்றுப்பின் ஆராய் வோம். இப்பொழுது இவரின் குறுகிய பனுவல்களைக் குறித்துக் கூறுதும்.

குறிப்பு: புலமிக்கவரைப் புலமை தெரிதல், புலமிக்கவர்க்கே புலனும். பொதுமக்கட்கு ஆகாதே, பாம்பறியும் பாம்பின் கால். (பழமொழி 7)

"திருக்காவலூர்க் கலம்பகம்", "கித்தேரியம்மாள் அம்மானை" என்னும் இரண்டு செய்யுள் தொகுதிகளும், கனிந்த உள்ள நெகிழ்ச்சியால், கடினமில்லாப் பாவினங்களின் ஓசை நயத்தால் மேம்பட்டவை. முந்தியது, கலம்பகத்துக்குரிய பல உறுப்புக்கள் விரவி, உலகமீட்பரின் திவ்விய அன்னையரது ஒப்பில் மேன்மைகளைப் போற்றுவது. பொன்னியாற்றின் வடகரையில் நறுமணங்கமழும் பூஞ்சோலையின் நடுவே, திருக்காவலூர்க் கோவில் அமைந்துள்ளது. அங்குள்ள அடைக்கலமாதா, கதிரொளி திகழும் கலையுடுத்து, மின்னார் முடிபுனைந்து, அங்கையில் மணிமாலை தாங்கி, கருணைபொழியுங் கண்களோடு வட திசை நோக்கிநின்று காட்சி தருகின்றனள்.

"திருக்காவ லூரகத்துந் திகளொளிவாய் மணிக்கோயில்
அருட் காவல் இயற்றி நமை அளிப்பது நின்தயையாமோ"

என்று அம்மாதாவை முனிவர் பாடித் தொழுதனரன்றோ!

"நதி வழங்கு காவலூர்ப் பதிவழங்கு காவலே;
நன்னையாக முன்னையாள் என்னையாளும் அன்னையே"

என்று தொண்டரனைவரும் சேர்ந்து அழுது இசைத்த தொழுகுரல் நாற்றிசையும் பரந்தொலித்ததன்றோ!

பிந்தியது, நாடோடி அம்மானைகளைப் போலாது, இயற்றமிழை மிகத்தழுவி இன்பந்தருவதாய் மிளிர்வது. கிறீஸ்துவின் மறைக்காய் உயிர்நீத்த கித்தேரியம்மாளின் உண்மைச் சரிதையைப் பாட எடுத்துக்கொண்ட முனிவர், பழந்தமிழ்க் கதை நூல்களின் பான்மையையடியொற்றி, உயர்வு நவிற்சியாய்ப் பல வரலாறுகளை விரித்துரைத்துப் போந்தார். இவற்றுல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கித்தேரியம்மாள் அம்மானை'' படிக்கப் படிக்கத் தெவிட்டாத மகிழ்ச்சியை ஊட்டுகின்ற பல பாகங்கள் கொண்டதாய், மணியிடைப் பவளம்போல் ஒளிர்கின்றது. பௌத்த மதக் கன்னி மணிமேகலையைப்போல், கித்தேரியம்மாளும் ஒரு முனிவரின் பேருதவியாற் பொறிவாயில் ஐந்தடைத்துப் பெருந்தவம் புரிந்து, பொறையினுக்கு அணியாய், நிறையின் நிலையமாய் இலங்கினளன்றே!

''நீதியர்க்குப் பொய்யா விளக்கானாள்''. பின்பு காமனைக் காய்ந்த கன்னியைப் பாங்கியர் கண்ணுற்றார். மானினம்போலவும், மயிலினங் கடுப்பவும், மருங்கே சூழ்ந்துநின்றவரைப் பரிந்து நோக்கிய பாவை,

**''வீணாய் உடல்பேணி வெந்துலையும் என்னுயிரைப்**
**பேணார் ஒருவரும் இப்பேருலகில் என்றழுதாள்.''**

அன்றியும், அவள் இறைவன் திருக்கோயிலை மனமாரப் புகழ்ந்து போற்றிய இத்திறத்தைக் கண்டு இன்புற்று மகிழ்மின்:

**''ஒண்தவஞ்சேர் ஆலயமே! ஒன்னலர் வெல் போர்க்களமே!**
**விண்தவஞ்சேர் செல்வழியே! வெற்றிதரும் பொம்பேரே!''**

இது நிற்க.

வீரமாமுனிவர் இசைத்த அநேக பனுவல்களுள் தலைசிறந்தது ''தேம்பாவணியே''. இஃது அதன் பெயரின் பிரகாரம் ஓர் உன்னத ''வாடாமாலை'' யாய்த் திகழ்கின்றது. ''சிந்தாமணி'' யின் செழுஞ்சுவையும், ''கம்பராமாயணத்தின்'' கவிச்சுவையும், ''திருக்குறளின்'' தெள்ளிய நலனும் ''தேம்பாவணி'' யில் அமைந்து திகழும் நலத்தினை ஆராய்ந்து அறிவது தமிழ் மாணவர்க்கு நல்விருந்தாகும். உலகுய்ய ''அவதரித்த நாதனைக் கைத்தாதையாய் வளர்த்த சூசையென்னும் வளன் சரிதையை'' மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து விருத்தப் பாக்களால் அந்நூல் விரித்துரைக்கின்றது. இத்துடன், ''சீவக சிந்தாமணி'' யின் 3145 விருத்தப் பாக்களையும் ஒப்பிடுக. முன்னோர் மொழி பொருளேயன்றி வீரமாமுனிவரின் மொழியும் பொன்னேபோல் ''தேம்பாவணியின்கண் போற்றப்பட்டுள்ளன.'' யேசு நெறியை மேற்கொண்ட மக்களால், இக்காப்பியம் பெரிதும் பாராட்டப்படுகின்றது. வேதாகம நியாயங்களை விரித்து, விரோத சங்கைகளை யறுத்து, மெய்ஞ்ஞான போதகங்களை விளக்கி, அஞ்ஞான மார்க்கங்களையகற்றி, அநேகவித சரிதைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடக்கிச் சிறந்த கட்டுரையாய், தெவிட்டாத மதுரமாய், தெளிந்த கருத்தாய், செப்பரும் பொருளாய்ச் சகல அலங்காரத் தோடு தொகுத்து, எமது முனிவர் இப்பெருங் காவியத்தைப் பாடியிருக்கின்றனர்; இதனைப் படித்துங்கேட்டும் உணர்ந்தோர் கடவுள் அளித்த மெய்மறை தெரிந்து, அறவழிநடந்து, கசடெல் லாங் கடந்து கதிபெற்று வாழ்வரன்றோ!

Baumgartem Says: "It is the noblest poem in honour of St. Joseph written in any literature of the East or West. In one of the most difficult languages of Southern India and Ceylon, Constantine Girseppe Beschi (1680—1747) produced a poem which for richness and beauty of language, for elegance of metre, popular treatment and true poetical conception and execution is the peer of the native classics. Bishop Caldwell, the famous Dravidian Philologist and comparative grammarian states;" Beschi poems in the classical dialect, especially his great poem, the Thembavani, a long and highly wrought religious epic in the style of the Jivaka Cintamani, are so excellent in the point of View of Oriental excellence, that is, they are so elaborately correct, so highly ornamented and so variably harmonious, that, I have no doubt he may fairly claim to be placed, by the vote of impartial native critics themselves in the very first rank of the Tamil Poets. Only the Kural, Naladiyar, Cintamani and the Ramayanam surpass it. It seems to be wonderful, the more I think of it, that a foreigner should have achieved so distinguished a position."

இனித் தேம்பாவணியைச் சற்று ஆராய்வாம். நிகழும் யாண்டு ஆடித் திருத்தொண்டனிலே இக்காவியத்தின் இரண் டாஞ் செய்யுளை, வித்துவான் ச. சிவஞானப்பிரகாசர் நுட்ப மாய்ப் பரிசோதித்து விளக்கினர். இப்பாவுக்கு ஒப்புமையாக வும் இதனில் முனிவர் சாற்றும் பொருள்களையே ஏற்கனவே கூறியதாகவும் 18 மேற்கோள்களைச் சுட்டிக்காட்டினர். இவற் றில் ஆறு கம்பராமாயணத்திலிருந்தும், ஐந்து சீவகசிந்தாமணி யிலிருந்தும், ஒவ்வொன்று சிறுபாணாற்றுப்படை, புறநானூறு, வில்லிபுத்தூரர் பாரதம் முதலிய நூல்களிலிருந்தும் எடுத்தா ளப்பட்டிருக்கின்றன. மேலும், கம்பராமாயணம் 5-ம் பாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், தேம்பாவணி 4-ம் செய்யுளையும் ஒப்புநோக்குங்கால், இவற்றினுள் அநேக பொதுவர்ணனைகள் துலங்குகின்றதைக் காண்கின்றனம். உதாரணமாக, ஓசைபெறுதல், பாற்கடல், பூசை (=பூனை) பாற்கடலை நக்கப் புகுதல் புலவர் கதையை அறையலுறுதற்கு உவமை :

"ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற்றேன் மற்றிக்
காசில் கொற்றத்து இராமன் கதையரோ".

கம்பரா. 5.

"சூசையுற்றன வரங்கள் தூய்கடல் கடக்கவில்லால்
ஓசையுற்று ஒழுகு அமிர்தம் உடைகடல் என்ன நண்ணி
பூசையுற்று அதனை நக்கப்புக்கென உளத்தைத் தூண்டும்
ஆசையுற்று ஊமனேனும் அருங்கதை அறையலுற்றேன்."

தேம்பா. 4.

அஃதேபோல் கம்பரா. 7-ம் பாவையும், தேம்பாவணி 5-ம் பாட்டையும் படித்து அவை ஒரே கருத்துடையவையா யிருப்பதையும் பல்வேறு இடங்களில் வீரமாமுனிவர், கம்பரைச் செறிவாய்ப் பின்பற்றுவதையும் யாம் கண்டுழி, எமது முனிவர், இராமாயணத்தைப் பன்முறை ஓதியுணர்ந்து அதிலே தமது அகத்தைத் தோய்த்திருத்தல் வேண்டுமென எமக்குப் புலனுகின்றது. அவ்வண்ணமே இவர் திருக்குறள், சீவகசிந்தாமணியாகிய இவ்விரு நூல்களையும் கசடறக்கற்று ஐயந்திரிபற உணர்ந்திருந்தனர் என யாம் கூறுவதற்குத் "தேம்பாவணி" யின் சொற்றொடர்களே எமக்குப் போதிய சான்றாகும். ஈற்றில் இந் நூலின் பாயிரத்தின் பாவின் மூன்றும் பாவில் முனிவர் அர்ச். சூசையப்பரைக் குறித்துக் கூறுவது அப்புலவராகிய முனிவருக்குமே பொருந்துமெனக் கண்டு இன்புறுமின் :

"வளஞ்செயும் வரங்கள் தம்மால் வரைவில வளர்வமைந்த
உளஞ்செயும் அரியமாட்சி உடையவன் ஆயதன்மை
நளஞ்செயும் வடநூலோர்கள் நவின்று இவற் சூசை என்ப
தளஞ்செயும் தமிழ்ச்சொல்லானும் அவன்வளன் என்ப
தொத்தே."

மேலும், தமிழறிஞர் வீரமாமுனிவரை உரைநடைத் தந்தை என அழைப்பர். இவருக்குமுன் சில்லோர் மாத்திரமே உரைநடையைப் பாவித்தனர். இவர்கள் அந்நடையில் வரைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்த நூல்களும் மிகச்சொற்பமே. இம்முனிவரோ, "வேத விளக்கம்", "வேதியர் ஒழுக்கம்", நகைச்சுவை ததும்பும் "பரமார்த்த குருக் கதை"—இவைபோன்ற அநேக வசனநடை நூல்களை இயற்றித் தமிழ்மக்களுக்கு வழங்கினர். இது மாத்திரமன்றி, யாம் இன்று உபயோகிக்கும் எ, ஒ, ஏ, ஓ என்னும் எழுத்துக்களை முன்னைட் பாவனையினின்றும் இவர் திருத்தித் தந்தமை எம் அனைவராலும் போற்றப் பாற்று.

இந்நூற்ருண்டின் முதற்பகுதியில், மொழி நூற்புலமையிலே தலைநின்று சொற்பிறப்பு ஒப்பியல் தமிழகராதியை இயற்றிய பேராசிரியர் ஞானப்பிரகாச சுவாமியை யாவரும் அறிவர்; ஆனல், இச்சுவாமியார் தமது விழுமிய பணியாற்றியது வீரமாமுனிவரது நெறியிலே நின்றே; அம்முனிவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றியே. வீரமாமுனிவரே முதன்முதல் தமிழகராதியை இயற்றியவர். இதன்முன் தமிழர் நிகண்டுகளைமட்டுமே கையாண்டனர். இத்தனித் தமிழகராதியுடன் தரியாமல் தமிழ்—இலத்தீன்—போர்த்துக்கீசு என்னும் இன்னுமிரு அகராதிகளைத் தமது அயரா முயற்சியினல் எமக்கு இம்முனிவர் தந்தருளினர். மேலும், இலத்தீனிலும், தமிழிலும், தமிழிலக்கணங்கள் இரண்டை இயற்றினர். முந்தியது கொடுந்தமிழையும், பிந்தியது செந்தமிழையும் சிறப்பாய் விளக்கின. பிந்தியதான "தொன்னூல் விளக்கம்" ஆனது வீரசோழியம், நன்னூல், நேமிநாதம் போன்ற இடைக்கால இலக்கணங்கள் நடுவண் எம்மதிப்பில் வைக்கற்பாற்று. இவர் மேல்நாட்டுப் பொதுவான மொழியாய இலத்தீனில் கொடுந்தமிழிலக்கணத்தை மட்டுமன்றி, திருவள்ளுவனர் இயற்றிய திருக்குறளின் முதலிரு பாக்களையும் மொழிபெயர்த்தருளினர். இன்னளில் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் வழங்கும் பன்னிரு பாஷைகளின்கண் வள்ளுவர் வாய்மொழி வளமுறத் திகழுமாறு வழிகாட்டிய பெருமை எம் முனிவருக்கேயுரியது. இனிய தமிழ்மொழியின் தனிச்சிறப்புக்களை—அதன் அருமை பெருமைகளை ஐரோப்பிய மொழிகளிலும் அமெரிக்க நூல்களிலும் தற்போது தனிநாயகமடிகள் பரப்பிவருகின்றனர். ஆனல், இரு நூற்ருண்டுகட்கு முன்னதாகவே இத்துறையில் படிந்தனர் வீரமாமுனிவர். இவற்றை முதல் எடுத்தோதிய சிறப்பு இவரையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்ஙனம் எம்முனிவர் சுவாமி ஞானப்பிரகாசருக்கு முன்னோடி யாய் வாழ்ந்தனரோ அங்ஙனம் மற்றொரு துறையில் தனிநாயக மடிகளுக்கு முன்னோடியாய்ச் செயலாற்றினர். இவ்வாற்றல்கள் யாவும் நுண்ணிய புலமையுடனும் சிறந்த கற்பனுசக்தியுடனும் செய்யுளியற்றிய பெருங்காவிய கர்த்தாவாகிய வீரமாமுனிவ ரின் கண் ஒருங்கே திகழ்வதை யாம் நோக்குங்கால் 18-ம் நூற் ருண்டின் இத்தனிப் புலவரை வியந்து பாராட்டி, அவரைப் பின்பற்றுவது எமது கடமையன்றோ! தாழாதே இக்கவிஞனை எம்மாலியன்றளவு பின்பற்றுவோமாக! இதுநிற்க, இப்பொழுது வேறுமொரு விஷயத்தை ஆராய்வோம். சென்ற நான்கு நூற் ருண்டுகளில் அநேக மேனுட்டினர் இந்தியா, இலங்கையாகிய எம் நாடுகளிலே கிறீஸ்தவசமயத் தொண்டாற்றும் நோக்கத் துடன் தம் ஆயுள் முழுவதையும் அர்ப்பணித்தனர். இத்துணை யோர் நடுவண் வீரமாமுனிவர் மாத்திரமே இவ்வளவாய்ச் சிறந்த தமிழ்ப்புலவர் ஆயினமைக்குக் காரணங்கள் யாவை? இவற்றை எம்முள்ளப்படி ஆராய்ந்து உணர்வோமாயின், எம் மத்தியிலிருந்தும், இவரைப்போன்ற திறல்வாய்ந்த கவிஞரும் ஒருவேளை தோன்றலாம்.

முதன்முதல் இவர் ஓர் இத்தாலியனுய்ப் பிறந்தமை இவ ருக்கு இத்துறைகளிற் படிவதற்கு மிக உதவியாய் இருந்தது. இத்தாலிய மொழி, தன் மென்மையான உச்சரிப்பினுலும், வல் லினங்களை விலக்கி, மெய்யெழுத்திரணைகளைக் குறைத்து, மெல் லினம், இடையினம், உயிரினங்கள் இவற்றையே சிறப்பாய்த் தழுவுதலினுலும், வடஐரோப்பிய மொழிகளுக்கு முற்றும் முர ணுக இருப்பதுமன்றி, தென்இந்திய மொழிகளாய தமிழ், தெலுங்குவுக்கு மிக அண்மையதாயிருக்கின்றது. மேலும், அண் மையிற் காலஞ்சென்ற பன்னிரண்டாம் பத்திநாதரைப்போல், இத்தாலியர் அந்நியரைத் தழுவுதல், அவரின் பாஷைகளைக் கற் றல் இத்துறைகளில் நிபுணராய் விளங்கிவருகின்றனர். இதன் மர்மம் அவர்களின் தாழ்ச்சியிலும் உதாரகுணத்திலும் தங்கி யிருக்கின்றது. ஆங்கிலேயர் தமது சாம்ராச்சியத்தை ஆசியாக் கண்டத்தின் அநேக பிரதேசங்களில் நிறுவினபடியினுல் தங்களை மேன்மக்களாகவும் ஆசியரைக் கீழ்மக்களாகவும் மதித்து, இந்தி யரின் பண்டைப் பண்பாடு கமழும் மொழிகளை அவமதித்தனர். அங்ஙனமல்லர் இத்தாலியர். இவர்கள் தமது ஆதிக்கத்தை ஆசியாவில் நிறுவினரல்லர். ஆகையினுலே, கீழைத்தேயத்து நாகரிகங்களையும் அவற்றினின்றும் பிரிக்கவொண்ணு இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளேயும் மனமார மெச்சினர் இத்தாலிய குருக்கள். இம் மதிப்பினுலன்றே, தமக்குக் கிடைத்த மேல், கீழ்க் கணக்கு நூல்கள், சிலம்பு, சீவகசிந்தாமணி, மணிமேகலே, கம்பராமாயணம், வில்லிபுத்தூரர் பாரதம் இவற்றையும் கசடறக்கற்றனர்.

வீரமாமுனிவர் இரண்டாவதாக யேசுசபையைச் சேர்ந்தமை, இவர் தமிழ்க் காவியத்திறன் பெற்றமைக்கு ஒரு காரணம். மேனுட்டிலும், கீழ்நாட்டிலும் இச்சபையோரின் இல்லங்களில் யான் வசித்தமையால் இவ்வகுப்பினரை யான் அறிவேன். இவர்களில் யார் யார் 64 கலேத்துறைகளில், எதில் சாதுரியத்தைக் காட்டுவரோ, அதில் அவரின் சிரேஷ்டர் அவரை முழுதாக உய்த்து, அவரின் ஊக்கத்தை மேலுந்தூண்டுவர். மேலும், இச்சபையோரின் சுயாதீனத்தின்படி, இவர்தம் வாழ்வின்பண்பை முழுவதாக மாற்றக்கூடியதா யிருந்தது. இவர் தம் உடை, உணவு, வாழும்முறை அனேத்தையும் தமிழ்ப் பண்பாட்டுடன் இணேத்ததினுல் 'Beschi' என்னும் பெயரும் பிறிதாகி "வீரமாமுனிவரா" ஞர். மற்றைய தமிழ்ப் புலவருடன் நெருங்கிப் பழகித் தாமும் சிறந்த தமிழ்க் கவிஞன் ஆயினரன்றே எம் தகைசான்ற வீரமாமுனிவர்!

நாம் ஒவ்வொருவரும் பிரயாணத்திலேயே இருக்கின்றேம். நாம் தூங்கும் போதும் இருக்கும் போதும் பிரயாணம் நடந்துகொண்டேதான் இருக்கின்றது. அந்தப் பிரயாணம் விரைவாகவும் போய்க்கொண்டிருக்கிறது. "சாமாறே விரைகின்றேன்" என்பார் மணிவாசகர். நெடுந்தூரம் போகின்றவர்கள் நல்ல துணேயுடன் போவது நல்லது. "துணேயோடல்லது நெடுவழியேகேல்" என்கின்ருர் ஔவையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Social Bias in Education

—A. S. Kanagaratnam.
former President of the A. C. U. T.

To illustrate my thesis I shall repeat one of the traditional tales of our people, one that most of us have read as children years ago in our primary classes, and perhaps forgotten by now. It is a simple story in a rustic setting. But as a social parable it has few equals.

The aged farmer was planting fruit trees in his garden. The young men watching him, could not understand why an old man, well on his way to his grave, should be taking all that trouble to plant trees, the fruits of which, he must surely know, he was not going to enjoy. He would be dead by the time that his trees began to bear. Was he that stupid, the old fool, the young people wondered.

And so, youth, sophisticated and cocksure in its worldly wisdom, sneered at the old man. To labour at anything that gives one no return, no profit, is just so much waste of one's time. To plant for posterity ! How ridiculous !

But the old farmer in the maturity of his wisdom begotten of years of labour close to the bosom of the bountiful earth, rebuked youth's attitude of arrogant selfishness: "All these years I have enjoyed the fruits planted by my Forefathers. It is my duty to enrich with my labour, the generations to come after me. Why should I think it amiss that others are going to enjoy the fruits of my labour and that I shall never share in that enjoyment ? The certainty that I am going to contribute to the happiness of the next generation, is in itself a thought that fills me with happiness".

In a society where selfishness is the normal attitude to life, where even religious institutions are not free from greed where a profit-motive pervates our most elementary thinking, this simple story of that aged farmer who took so much pleasure in planting



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for posterity, comes to us across the generations like a whiff of country fragrance from its garden setting many thousand years ago.

From whence did spring that old farmer's sense of duty to posterity? Where did he learn to identify his well-being so closely with the well-being of his community? How did he come to feel pleasure at the thought of increasing through his own labour the happiness of the generations to come?

370.5 KAL AR

These are questions that should interest all educators? To train men to take thought for the generations to be, or for people beyond their own immediate circle, ought to be one of the major aims of education. "Think of the well-diggers when you drink the water", is a Chinese proverb that spotlights the farmer's point of view in a rather milder form. "Love thy neighbour as thyself", is again the same ideal in its Christian garb.

To forget one's own personal advantage in fighting for a public cause, is admittedly the peak of social behaviour. A teacher who has successfully implanted a social bias in his pupils, may well feel proud of that achievement.

When a child learns to evaluate, control and regulate his actions according to their effect on other people, he is thinking socially, and in that process he is also forming sentiments and setting up standards of behaviour for him to follow. These govern his attitude, and ultimately his conduct. His sense of honour, respect, loyalty, duty, his religious belief even, and a host of other sentiments are born and developed through the social influences in his normal, day to day intercourse with his community. His personality develops under the impact of his environment. It is a quiet unobtrusive process.

All sentiments are socially nurtured. No person is ever born with all his ideas and sentiments readymade. His teachers, his friends and other human beings, without even being aware of it, shape and mould his mind; and unconsciously the growing child

247164



ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

absorbs the ideas and sentiments of his society. It is the basis of all social tradition.

But tradition is not above criticism. New ideas, new concepts, new sentiments assail the old ones. Throughout his life, a man is forming sentiments using, testing and discarding some of them and taking on new ones to replace those he has thrown away.

To come back to the old farmer of our story: the traditionally recognised sentiments of those days, obviously had a social bias. The farmers sense of values gave a greater importance to what he owed to the next generation than to his personal gain. Then as now, there were those who ridiculed this sense of duty to posterity, this inner compulsion that makes one labour for those one has never seen, never known.

Teachers owe a duty to society in that they have to instill and develop a social bias in the generation at school. Like that farmer of old, people should develop a sense of duty that can reach out beyond this immediate present to all mankind. The teacher may rightly feel that his influence is negligible as a force shaping social sentiments in competition with the film, the radio, T.V., comics, the press, commercial advertisements etc. with their scientific aids for mass persuasion. But within the limits set by modern inventions, it is possible for teachers to educate children into men and women with the worthy social sentiments. Shall our children leave our schools without any social bias just worshipping wealth and success—'finished and finite clods, unkindled by a spark'; or shall the teachers educate them to go out into life with the disturbing conviction that life's finest possessions are not those that give a profitable return: that all human endeavour need not, as now, be a prayer 'for our daily bread': nor that thousands should be compelled to starve in 'poverty, hunger and dirt', that a few might live in affluence ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைக்காட்சி

—திருவாட்டி. அ. ஆறுமுகம்,
விடுகை வருடம்.

கூரை யிலே நின்று சேவல்
கொக்க ரக்கோ என்குது
கூடு விட்டுப் பறவைக் கூட்டம்
குதுகல மாய்ப் பறக்குது.

ஏரைத் தோளில் ஏந்தி உழவர்
இன்ப மாகச் செல்கிறார்
எங்கும் முற்றம் தோறும் பெண்கள்
இனிய கோலம் இடுகிறார்.

கோயில் தோறும் மணியின் ஓசை
கொள்ளை இன்பம் கூட்டுது
குளிர்ந்த காற்று வீசி எங்கும்
குளு குளுப்பு மூட்டுது.

வண்ணப் பூக்கள் வாச னையை
வாரி வாரி வீசுது
வண்டு வந்து தேனை உண்டு
வட்ட மிட்டுப் பாடுது.

ஆயர் மந்தை மேய்ப்ப தற்கு
அழைத்துக் கொண்டு போகிறார்
அழகுப் பூக்கள் சூடிப் பெண்கள்
ஆல யங்கள் ஏகிறார்.

கிழக்கு வானில் சிறப்பு வண்ணம்
கிழி ருந்து கிளம்புது
விளக்க ணைத்து மாந்தர் வேளை
விடிந்த தென்று எழும்புறார்.

காலை வேளை சூரியன் தன்
கதிரைப் பாய்ச்சிக் காய்கிறான்
வேலை செய்ய மாந்தர் எங்கும்
விரைந்து செல்லத் துடிக்கிறார்.

பள்ளிக் கூடம் நோக்கிப் பாலர்
துள்ளித் துள்ளிப் போகிறார்
படித்து நல்ல மனித ராக
வருவ தற்கு விரைகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள் இனி வருமோ!

—செல்வி. க. சீதாதேவி,
விடுகை வருடம்.

என்னுடன் படித்த மாணவிகளெல்லாம் இன்னமும் கல்லூரி மாணவிகளாகச் சுதந்திரப் பட்சிகளாகப் பறந்துதிரிய, நான்மட்டும் சிரேஷ்ட பாடசாலைத் தராதரத்துடன் வீட்டில் அடைபட்டுவாழ்வதா? என் நெஞ்சில் நிலைத்துவிட்ட ஏக்கமிது. இவ்வேக்கத்திலிருந்து என்னை விடுவித்தது எனக்குக் கிடைத்த ஆசிரியப்பணி. கல்லூரிக்குச்சென்று மாணவரின் முகம்காணும் போதெல்லாம், "இந்த மாணவ வாழ்க்கை மீண்டும் ஒருமுறை என்வாழ்விலே கிடைக்குமா?" என்ற ஒரு தவிப்பு என் இதயத்திலே. இந்நினைவுகளின் பிரதிபலிப்போ என்னவோ! ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தைந்தாம் ஆண்டு தைத்திங்கள் பதினைந்தாம்நாள் நான் ஒரு மாணவியாகிவிட்டேன். ஆசிரியை என்ற போர்வையை அகற்றிவிட்டு, மாணவி என்ற மனத்துடன் கழக வாயினில் நுழைந்தேன்.

மேடைக்காட்சிபோல் ஓராண்டு கழிந்தது. எனது கழக வாழ்க்கையில் இரண்டாவது ஆண்டு ஆரம்பமாகின்றது. தைத் திங்கள் ஏழாம்நாள் விருந்தினர் பலர் வருகின்றனர்; நாம் விருந்தினராக நின்ற நாளினும், இந்த விருந்தாளிகளை விருந்தோம்பும் நாள் சிறப்புடையதென ஓர் எண்ணம். அவர்களை இன்முகத்துடன் எமது இல்லங்களுக்கு அழைத்துச் சென்று விருந்தோம்புகிறோம். பெற்றோரையும், உடன் பிறந்தோரையும் பிரிந்துவந்த வாட்டமொருபுறம்; புதியஇடத்து அக்காமார் எப்படி இருப்பார்களோ என்ற ஏக்கம் மறுபுறம்; இவ்வகை நிலைகள் ஒன்றுசேர்ந்து மடைதிறந்து பாயமுடியாத வெள்ளம் குளத்தினுள்ளே நிரம்பித்தளம்புவதுபோல் நயனமடை மேவாக் குறையாகக் கண்கள் குளமாக நிற்கின்றனர் நம் புதிய சகோதரிகள்.

நாள்கள் உருண்டோடுகின்றன. கலாசாலைச் சூழ்நிலைக்கேற்ப மாணவிகள் தங்களை மாற்றி அமைத்துக்கொள்கின்றனர். மாசித் திங்கள் பதினெட்டாம்நாள் மகாசிவராத்திரி, மாதோட்ட நன்னகரின்கண்ணே உறைந்தருளும் மாதொருபாகனைத் தொழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் விழாவில்...



"பவள உலக்கை கையாற்பற்றி தவள முத்தம் குறுவாள்
செங்கண் குவளை அல்ல கொடிய கொடிய"
எனக் கோவலன் யாழ் மீட்டுகிறான்.



இளவரசே! யாழினைத் தழுவி, சிந்தையைப் பறிகொடுத்து
ஓவியமாக அமைந்து விட்டீர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



" அடிகளே, தங்கள் நாவில் விளைந்த இச் சொல்லமிழ்தம் எம் நெஞ்சிற்குப் பேராறுதலளிக்கின்றது" என்கின்ருள் பௌத்த பள்ளியில் மாதவி.



பாரகம் அடங்கலும் பசிப்பிணி போக்க ஆதிரையிடம் அன்னமேற்கிருள் மணிமேகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பித் திருக்கேதீஸ்வரம் புறப்படுகின்றோம். எமது வண்டி மோட்டார்வண்டிதான். ஆனால், கிராமப்புற மாட்டுவண்டிக்கு அஃது எந்தவகையிலும் உயர்ந்ததன்று. வண்டி நகர, நகர எமது முந்தையோர் வாழ்க்கை எனது மனத்திரையில் நிழலிட்டது. போக்குவரத்துச் சாதனங்களற்ற காலத்தில் மக்கள் மாட்டுவண்டியிற் பிரயாணஞ்செய்த காட்சி என் கண்முன்னே தோன்றி மறைந்தது. நாமும் ஒருவிதத்தில் அவர்களையே ஒத்திருக்கிறோமா? இல்லை. நாம் சென்றுகொண்டிருக்கும் வண்டிக்கு, மாட்டுக்குப்பதில் இயந்திரம் இருக்கிறது அவ்வளவுதான் வித்தியாசம். அதிகாலை ஏழுமணிக்குப் புறப்பட்டு ஒருவழியாக மாலை ஏழுமணிக்குக் கேதீஸ்வரநாதனைத் தரிசிக்கும் பேறுபெற்றோம். அங்கே பக்தகோடிகள் பரமனை வாழ்த்தும் ஒலி விண்ணையும் மண்ணையும் நிறைக்கின்றது. நாமும் அவர்களுடன் ஒன்றி விடுகின்றோம். மறுநாட் காலை கலையகம் திரும்புகிறோம்.

வழக்கம்போல் இல்லங்களிடையே நாடகப்போட்டி, பேச்சுப்போட்டி எனப் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் விறுவிறுப்பாக நடைபெறுகின்றன. பங்குனித்திங்கள் இருபத்தைந்தாம் நாள் கைதடியிலுள்ள குருடர், செவிடர் பாடசாலையைக்காணும் வாய்ப்பைப் பெறுகின்றோம். அச்சிறார்களின் வதனங்கள் எம் அனைவரினதும் உள்ளங்களை உருக்குகின்றன. சிறிதுநேரத்தால் நமது சிந்தனையில் ஒரு மாற்றம். இவர்களா குருடர்! செவிடர்! எக்குறையினையேனும் காண இயலாதவாறல்லவா இவர்கள் திறமையுடன் விளங்குகின்றனர்! கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறந்துளோமென எண்ணும் நாமே அவர்கள்முன் ஊமையராய்ச் செவிடராய்க் குருடராய் நின்றோம்.

ஒருநாள், ஓரிரவில் எமக்கு நூற்றுக்கான நண்பர்கள் வந்து சேருகின்றனர். தெற்கிலிருந்து வடக்கிலிருக்கும் நம்மை நாடி வரும் இவ்விருந்தினர் நம் சிங்களச் சகோதரிகளேயாவர். அவர்களுடன் எமதுள்ளத்துணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்கு மொழி பெரிய தடையாகின்றது. எனினும், அன்பு எனும் கயிற்றூற் பிணிப்புண்டு ஒரு தாயின் சேய்களாக உறவாடுகின்றோம். விருந்தாளிகளை வழியனுப்பும் அதேசமயத்தில் இரண்டாம் வருட மாணவிகளாகிய நாமும் எமது கல்விச் சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பிக்கின்றோம்.

சுற்றுப்பிரயாணத்தில் நாம் கண்டவைபற்றி விபரிக்கின், கட்டுரை விரியுமென அஞ்சிச் சுருக்கமாகவே கூறிவிடுகின்றேன். சிகிரியா மலைக்கோட்டையும், டம்புல்ல குகைக் கோவிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லநறுவை, அனுராதபுரியிலுள்ள பாழடைந்த கட்டிடங்களும் என் கண்முன்னே எத்தனை எத்தனையோ பழைய வரலாறுகளைக் காட்சியாக நிறுத்துகின்றன. இவை அனைத்தையும் பார்த்தபோது, "நான் ஒரு தொல் பொருளாராய்ச்சியாளராக மாறினால் என்ன?" என்ற எண்ணம் என் உள்ளத்திலுதிக்கின்றது. இது பிறிதொரு காட்சியைக் கண்டதும் மாறிவிடுகின்றது. மலைநாட்டு வளம் காணுந்தோறும் கவிஞனாக இருந்திருக்கக் கூடாதா? என்ற ஏக்கம். இயற்கை எழில்களைக் காணும்போதெல்லாம் ஓர் ஓவியனாக இருந்தால்......என்ற கற்பனை. இந்த மனக்குரங்கு இப்படி எத்தனையைத்தான் எண்ணுது; ஆனால், எமது தலைவிதிதான் நிர்ணயிக்கப்பட்டு விட்டதே.

ஆனித்திங்கள் இருபத்திநான்காம் நாள் வழக்கம்போல எங்கலையகத்தில் கோதையர் ஒன்றுகூடிக் கன்னித்தமிழ் அன்னைக்கு விழா எடுக்கின்றனர். இதனை அறிகின்றார்கள் நங்கழகப் பழைய மாணவிகள். அதிற் குதூகலமாகக் கலந்துகொள்ளுகின்றனர் சிலர். அன்னைக்கெடுக்கும் விழாவில் நேரிற் கலந்துகொள்ள இயலாத நேரிழையார் பலர், கூடை கூடையாக மலர்களனுப்பித் தம் மனக்கனிவை வெளிப்படுத்துகின்றனர்.

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் மங்கல விளக்கேற்றி முத்தமிழ்க் கொடியை உயர்த்துகின்றார். ஓங்கி உயர்ந்த கம்பத்தின் உச்சியிலே பட்டொளி வீசிப்பறக்கும் அக்கொடி முத்தமிழ் உயர்வையும், நம் முந்தையோரின் உள்ளத்துயர்வையுமல்லவா பறைசாற்றுகின்றதெனக் களிக்கின்றோம். உரையரங்கு நடைபெறுகின்றது. அதனையடுத்துக் கலையரங்கை ஆரம்பித்துவைக்கிறார் கலையரசு சொர்ணலிங்கமவர்கள். அழகுசெய்யும் அணிகளின் பெயரைக்கொண்ட ஐம்பெருங் காப்பியங்களிலிருந்து சில காட்சிகளை அபிநயம் பிடிக்கின்றனர் ஆடலரசிகள். மாதவியுடன் சென்ற கோவலன், தலைவன், தலைவியர் தம் கனவுக் காதலைப் பொருளாக வைத்து யாழிசைக்கின்றான்.

> "புன்னை நீழற் புலவுத் திரைவாய்
> அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
> கொன்னே வெய்ய கூற்றம் கூற்றம்".

இதனைச் செவிமடுக்கின்றாள் மாதவி; மறுகுகின்றாள் உள்ளம்: மறுமாற்றம் இசைக்கின்றாள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கைதை வேலிக் கழிவாய் வந்தெம்
பொய்தல் அழித்துப் போனார் ஒருவர்
மையல் மனம்விட் டகல்வா ரல்லர்".

விதி சதிசெய்கின்றது. வாழ்வினை நுதலிய மங்கலத்து நாளே தாழ்வினையும் கொடுக்கின்றது. "பொழுது இங்குக் கழிந்த தாகலின் எழுதும்" என்றவன், திங்கள் முகத்தாளைத் திகைக்க விட்டுத் தான் மட்டும் நீங்குகின்றான். இன்பத்தின் எல்லைகாண வந்தவன் துன்பத்தின் முடிவிற்கே போய்விடுகின்றான். இவன் துன்பத்தைப் பொறுக்கமுடியாத நிலையை உணர்த்துவது போலத் திரையும் இழுக்கப்படுகின்றது.

அடுத்து, பௌத்தப் பள்ளியொன்று காட்சிதருகின்றது.

"புத்தஞ் சரணம் கச்சாமி
சங்கஞ் சரணம் கச்சாமி
தர்மஞ் சரணம் கச்சாமி"

என்ற ஒலியால் மண்டபம் நிறைகின்றது. "இந்தப் பௌத்த பிக்குகள் எந்த விகாரையில் இருப்பவர்களோ"! இது பார்வையாளர்களின் கண்களில் தோன்றும் கேள்விக்குறி. இங்கு மாதவியும், மணிமேகலையும் அறவண அடிகளின் அறிவுரை கேட்கின்ற காட்சி மனத்தை உருக்குகின்றது. முற்பிறவியின் தொடர்பால் மணிமேகலையை அடைய விழைகிறான் உதயகுமரன். இதற்கிடையில், அட்சயபாத்திரம் ஏந்திய கைகளால், உயிர்களின் பசிப்பிணியைப் போக்கும் பணியே பேரறம் என்பதை வற்புறுத்துகிறாள் மணிமேகலை. இக்காட்சிகளனைத்தும் காண்போருள்ளங்களிற் பற்பல உண்மைகளை உணர்த்துகின்றன. நாடகம் பார்க்கிறோமென்ற உணர்வின்றியே மக்களத்தனைபேரும் உண்மை நிகழ்ச்சியொன்றிலே தம்மை மறந்தோராகக் காணப்படுகின்றனர். திரையிழுப்பவர்கள் மக்கள் மனத்திரையையும் இழுத்துக் காட்சிகளில் ஒன்றவைக்கின்றனர்; விழாவும் முடிவடைகிறது.

(தொடர்ச்சி 89-ம் பக்கம் பார்க்கவும்.)



UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலில் முதிர்ச்சியும் பயிற்சியும்

—செல்வி. கோகிலம்,
விடுகை வருடம்.

கற்றல் என்ருல் என்ன? ஒருவனின் நடத்தைக் கோலத்தில் அவனது வளர்ச்சிக்கு உதவும் வகையில் மாற்றங்களை ஏற்படுத்தி அவன் எச்சமூகத்திலும் பொருத்தப்பாடுடையவனுகத் தன்னை அமைத்துக் கொள்ளச் செய்வதே கற்றலாகும். கற்பித்தல் நடைபெறும் இடங்களிலெல்லாம் இவ்வகைக் கற்றல் நடைபெறுமென எதிர்பார்க்க முடியாது. ஆசிரியர் முயற்சி மாத்திரம் கற்றலை ஏற்படுத்துவதன்று. மாணவன் முயற்சியே கற்றலுக்குக் காரணமாகின்றது. முயற்சிக்குத் தேவையான முதிர்ச்சியும், அதுதரும் ஆயத்த நிலையும் உடையவனுக மாணவன் இருக்கும் போது உரிய பயிற்சியளிக்கப்படின் கற்றல் சிறப்பாகவும், பயன் தருவதாகவும், ஆர்வத்தை அளிப்பதாகவும் அமையும்.

முதிர்ச்சி நிலை என்ருல் என்ன? முதிர்ச்சி என்று சொல்லும் போது, அது உடல் முதிர்ச்சியையே அதிகம் குறிப்பதாக இருப்பினும், உளமுதிர்ச்சியையும் அடக்கியுள்ளது. எனவே, மாணவனின் உடலும் உளமும் முதிர்ச்சியடைந்த விடத்துக் கற்றலுக்குரிய, அல்லது பயிற்சி பெறுதலுக்குரிய முதிர்ச்சி நிலை தோன்றுகிறது. ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு பாடங்களுக்குமுரிய முதிர்ச்சி நிலை ஒன்ருக இருக்க முடியாது. உதாரணமாக ஒரு குழந்தை நடப்பதற்கேற்றவகையில் அதன் கால், எலும்பு, தசை நார் போன்றவை முதிர்ச்சியடைந்த நிலையிற்ருன் நடத்தலாகிய செயல் நிகழும். சாதாரணமான குழந்தைகள் 10 மாதத்தில் நடத்தலாகிய செயலைச் செய்வதற்குரிய முதிர்ச்சியை அடைகின்ருர்கள் என்று சொல்லப்படுகின்றது. எனவே, சராசரிக் குழந்தையொன்று (1 Average child) 10 மாதத்தை அடைந்ததும் அதற்கு நடப்பதற்குரிய பயிற்சியை அளித்தல் நன்று. முதிர்ச்சியடைந்த நிலையில், பயிற்சி அளிக்கப்படுமாயின் பயிற்சியினுல் பயன் அதிகம் ஏற்படும். அதாவது, கற்றல் நல்ல முறையில் நடைபெறும். குழந்தை ஆனந்தமாக நடக்கப் பயிலுகின்றது. நடத்தல் இன்பத்தைக் கொடுக்கின்றது. ஏனெனில், குழந்தை சிறிதளவு முயற்சியுடன் அதிகம் முன்னேறிச் செல்ல அதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைப்பயிற்சிக்கேற்ப முதிர்ச்சிநிலை பற்றிய அறிவு பெற்றோருக்கு மிக அவசியம். இவ்விடத்துக் குறிப்பிடப்படும் முதிர்ச்சி நிலை உடல் முதிர்ச்சியையே குறிக்கின்றது. அப்படியிருந்துங் கூட, எல்லாக் குழந்தைகளும் ஒரே சமயத்தில் நடைப்பயிற்சி பெறுவதற்குரிய முதிர்ச்சிநிலையை அடைவதில்லை. சராசரிக் குழந்தை 10 மாதத்தில் அடையும் முதிர்ச்சிநிலையைச் சில குழந்தைகள் 8 மாதத்திலும், சிலர் 12 மாதத்திலும் அடையலாம். எனவே, குழந்தைகளை ஒரு தொகுதியாக வைத்துப் பார்க்காமல், தனிப்பட்ட முறையில் அவர்கள் எப்போது ஒரு செயலுக்குரிய முதிர்ச்சிநிலையை அடைகின்றனரோ, அப்போது பயிற்சியை அல்லது கற்பித்தலை ஆரம்பிக்க வேண்டும். சராசரிக் குழந்தைகளிலும் பார்க்க, ஒரு சில குழந்தைகள் கூடிக் குறைந்த நிலையிலிருப்பது கண்கூடு. எனவே, பெற்றோர் அனாவசியமான பயங்களை யெல்லாம் தவிர்த்துத் தமது குழந்தைகள் முதிர்ச்சியடையும் வரை காத்திருந்து பயிற்சி கொடுத்தல் விரும்பத்தக்கது.

குழந்தையின் வீட்டில் பெற்றோர் வகிக்கும் இடத்தைப் பாடசாலையில் ஆசிரியர்கள் வகிக்கின்றனர். இங்கே மாணவர்கள் பல முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். பல பாடங்களிற் பயிற்சி பெறுகின்றனர். எல்லாப் பாடங்களுக்கும் உரிய முதிர்ச்சி நிலையை ஒரே காலத்தில் அடைந்துவிட மாட்டார்கள். உதாரணமாக எழுத்துப் பாடத்தைக் கற்பதற்குரிய முதிர்ச்சிநிலையை ஒருவனின் மனோவயது 6½ ஆக இருக்கும்போதும், வாசிப்புக்குரிய முதிர்ச்சிநிலையை மனோவயது 6 ஆக இருக்கும்போதும் அடைகின்றானென உளநூலறிஞர் கூறுகின்றனர். அதாவது, ஒரு சராசரி மாணவனின் காலவயது 6½ ஆக இருக்கும்போது அவன் எழுத்துப் பாடத்திற்குரிய முதிர்ச்சி நிலையையும் 6 ஆக இருக்கும் போது வாசிப்புப் பாடத்திற்குரிய முதிர்ச்சி நிலையையும் அடைகின்றான் என்பதே. இங்கு குறிப்பிட்ட முதிர்ச்சி நிலை உடல் உள முதிர்ச்சிகளைக் குறிக்கின்றது. எழுத்துப் பாடத்திற்குதவும் கை, தசைநார் போன்றவையும் மாணவனின் உளமும் இப்பாடத்தைக் கற்பதற்குரிய முதிர்ச்சியை அடையுங்கால் அப்பாடத்திற்குரிய பயிற்சி ஆரம்பமாக வேண்டும். எனவே, சராசரி மாணவர்களாயின் 6½ வயதில் அவர்களுக்கு எழுத்துப் பயிற்சியளித்தல் நன்று. முதிர்ச்சி நிலையை அடைவதற்கு முன்னர், இப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டால் எதுவித பயனும் ஏற்பட மாட்டாது. இன்னும் இப்பயிற்சி மாணவனின் கற்றல் நிலையைப் பாதிக்கும். கற்றல் இன்பமான ஒரு நிகழ்ச்சியாக இருக்க மாட்டாது. கற்றலில் தேய்வுதான் ஏற்படுமேயொழிய முன்னேற்றம் ஏற்படாது. மாணவனும் ஊக்குவிக்கப்பட்ட நிலையில் இருக்க மாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, மாணவன் வாசிப்பதற்கோ அல்லது எழுதுவதற்கோ உரிய முதிர்ச்சி நிலையையடைந்து பல நாட்களின் பின்னர் பயிற்சியை ஆரம்பிப்பதாயின், மாணவன் முன்னரே பெற்றுக் கொள்ள வேண்டிய பல அனுபவங்களைப் பெருமையால் அவனது முன்னேற்றம் தடைப்படுகின்றது. ஒத்த வயதினையும், ஒத்த ஆற்றலையுமுடைய வேறு மாணவருடன் போட்டியிட முடியாமற் போய்விடுகின்றது. எனவே, இவ்விடத்தில் ஆசிரியர் ஒரு பெரிய குற்றவாளியாய் விடுகின்றார். உற்ற காலத்திலே உரிய பயிற்சியையளியாது விடுதல் ஆசிரியர்கள் செய்யக்கூடாத தொன்றாகும்.

இன்னும் எல்லா மாணவர்களும் 6 வயதில் வாசிப்புப் பாடத்திற் பயிற்சி பெறுவதற்குரிய முதிர்ச்சியையும், $6\frac{1}{2}$ வயதில் எழுத்துப் பாடத்திற்குரிய முதிர்ச்சியையும் அடைவதில்லை. சராசரி மாணவனிலும் பார்க்கக் கூடிய விவேகமுள்ள மாணவர் சிலர் 5 வயதிலும், குறைந்த விவேகமுள்ளவர் சிலர் 7 அல்லது 8 வயதிலும் எழுத்துப் பாடத்திற்குரிய முதிர்ச்சி நிலையையடையலாம். ஏனெனில், 100 விவேக ஈவுடைய மாணவன்தான் $6\frac{1}{2}$ வயதில் வகுப்புக்குரிய முதிர்ச்சி நிலையை அடைகின்றான். இவனின் காலவயதும், மனவயதும் ஒரேயளவு இருக்கும். ஆனால், விவேக ஈவு 85 உடைய மாணவனின் காலவயது 7 வயதும் 8 மாதங்களுமாக இருக்கும்போது தான் அவனின் மனோ வயது $6\frac{1}{2}$ ஆக இருக்கும். 115 விவேக ஈவுடைய ஒருவனின் காலவயது 5 வயது 4 மாதமாக இருக்கும்போதே அவன் $6\frac{1}{2}$ மனோ வயதுடையவனாகின்றான். எனவே, இந்த இடத்திலே தனிப்பட்ட மாணவரின் முதிர்ச்சிநிலை பற்றி ஆசிரியர் அறிந்து பயிற்சியை அளித்தல் முறையாகும். ஒரு வகுப்பிலே சராசரி மாணவர்கள் அதிகமாக இருப்பர். ஒரு சிலர் மிகவும் விவேகிகளாகவும், ஒரு சிலர் விவேகத்திற் குறைந்தவர்களாகவும் இருப்பர். இவர்களுள் சராசரி மாணவர்களை மத்தியாக வைத்துக் கொண்டுதான் பயிற்சியளிக்கப்படுகின்றது. இது சிறந்த முறையன்று. மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்டவர்களின் முதிர்ச்சி நிலையையும் ஆசிரியர் தவறாது அறிந்து, அதற்கேற்ற முறையிற் பயிற்சியளிக்க வேண்டும். அவர்களையும் மற்ற இருவகுப்பினரையும் ஒரே நிலையில் உள்ளவர்களென வைத்துக் கொண்டு பயிற்சியளிப்பதாயின் சராசரி மாணவர்களிலும் பார்க்க அதிகம் குறைந்த மாணவர்கள், காலப் போக்கில் பிற்போக்கு மாணவர்களாகவோ, பிரச்சினை மாணவர்களாகவோ மாறிவிடக் கூடும். எனவே, கற்பித்தலுக்கு முன் முதிர்ச்சிநிலை பற்றி ஆசிரியர் அறிந்துகொள்ள வேண்டும். அதுவும், ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள்தான் முதிர்ச்சி நிலைபற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் கவனித்தல் வேண்டும். ஏனெனில், கீழ்வகுப்பு மாணவர்கள் படிப்படியாகத்தான் முதிர்ச்சியடைகின்றனர். ஆரம்ப வகுப்புகளிற் பேச்சு, வாசிப்பு, எழுத்து, எண், சூழல் போன்ற பாடங்களிற் பயிற்சி பெறுகின்றனர். குடியியல், சரித்திரம், விஞ்ஞானம் போன்றவற்றைக் கற்பதில்லை. ஏனெனில், இவற்றிற் பயிற்சி பெறுவதற்குரிய உள முதிர்ச்சியை இவர்கள் பெறவில்லையென்பதே. எனவே, அந்தந்தப் பாடங்களுக்குரிய முதிர்ச்சி நிலையை எப்போ மாணவர் அடைகின்றனரோ, அப்பொழுது அப்பாடங்கள் கற்பிக்கப்பட்டால் அது சாலவும் நன்று.

முதிர்ச்சியேற்பட்ட விடத்தும் உரிய பயிற்சி அளிக்கப்படாவிடின் கற்றல் நடைபெறாது எனலாம். உதாரணமாக, ஒரு குழந்தை ஒரு காட்டில், மிருகங்களின் மத்தியில் வளருகின்றது எனக் கொள்வோம். அதன் கால், கை ஆதியன வலுவடைந்து அது அசையத் தொடங்குகின்றது. தவழ்ந்து திரிந்த குழந்தை நடப்பதற்கேற்ற முதிர்ச்சி நிலையையடைகின்றது. பின்னரும் மிருகங்களைப் போன்று கால்களையும், கைகளையும் நிலத்திற் பதிய வைத்தே நடக்கின்றது. ஏன்? அது வாழும் சூழலிலிருந்து அது பெற்ற பயிற்சியின் பயனே. திருத்தமான பயிற்சி மனித சமூகத்திலுற் கொடுக்கப்பட்டிருப்பின் அது மனிதரைப் போன்று நடக்கப் பயின்றிருக்கும். இன்னும், அக்குழந்தை பேசுவதற்குரிய முறையில் அதன் பேச்சுறுப்புக்கள் முதிர்ச்சியையடைந்த விடத்தும் அது மனிதரைப் போன்று பேசாமல், சில ஒலிகளை மாத்திரம் எழுப்புவதாக இருக்கலாம். ஏனெனில், அதற்குப் பேசுவதற்குரிய பயிற்சியளிக்கப்படவில்லை. இயற்கைக்கு மாறான வகையில் மனிதக் குழந்தை மிருகங்களின் மத்தியில் வாழ்கின்றது. எனவே, அது வாழும் சூழல் அதற்கு வேண்டிய பயிற்சியை அளிக்க முடியாது. உரிய பயிற்சியைப் பெறக்கூடிய நிலையில் அது இருந்தாற்றான் பேசுவதற்குக் கற்றுக் கொள்ள முடியும்.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது யாது? மாணவன் சிறப்புறக் கற்கவேண்டுமானால் அவன் எதைக் கற்கப் போகின்றானோ, அதற்குரிய முதிர்ச்சியை அடைதல் வேண்டும். முதிர்ச்சியடைந்த நிலையிலேதான் கற்றலுக்கு மாணவன் ஆயத்தமாகின்றான். கற்றல் விதிகளுள் ஒன்றாகிய ஆயத்தவிதி (Law of readiness), மாணவன் கற்றலுக்குரிய ஆயத்த நிலையிலிருக்கும் போது கற்பித்தலை நடத்த வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது. இந்த ஆயத்த நிலையை அடைவதற்குப் பல காரணிகள் உதவுகின்றன. அவற்றுள், முதிர்ச்சிநிலை மிக மிக முக்கியமானது. முதிர்ச்சியும், பயிற்சியும், அல்லது கற்பித்தலும் பிணைந்து செல்லுதல் முறையாகும். அப்பொழுது கற்றல் மாணவனின் விருப்பத்திற்குரிய முயற்சியாகி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை முதிரும்

— திருவாட்டி. அ. மேரி திரேசா,
முதலாம் வருடம்.

அன்பு என்பது தியாகமே. அஃது எதையும் எடுத்துக் கொள்வதில்லை. கொடுத்துக்கொண்டே இருப்பது. ஆம், இது எத்துணை உண்மை என்று சொல்லிக்கொண்டாள் கலைச்செல்வி. அவளோ முப்பத்தேழு வயது நிறைந்தவள். வாழ்க்கையென்னும் காட்டாற்றில் அடிபட்டு, அல்லல் பல வுற்று அமைதியை நாடியுள்ள இடமோ ஒரு செவிடர் - குருடர் பாடசாலை.

கலைச் செல்வியைத் தேடி வந்த வாய்பேசாச் சிறுமியான வேணி, அவள் கையிலிருந்த மலரைத் தலையிற் சூடி விடும்படி குறிப்பால் உணர்த்தினாள். கலைச்செல்வி அப்படியே செய்ய, அன்றலர்ந்த தாமரையன்ன முகம் மலர்ந்த வேணி, நன்றியை நாவால் உரைக்க இயலாதவளாக நயனங்களால் தெரிவித்தாள். கலைச்செல்வியின் கண்கள் பனித்தன. உச்சிமோந்தனுப்பினாள் வேணியை. பல நூற்றுக்கணக்கான பச்சிளம் பாலகரின் பாசத்தை ஒருங்கே தனதாக்கியவளாயினும் அவளுக்கு வேணி யின்பால் வேணவா. ஏன்? தன் மைந்தன் அன்பழகன் பிரதி பிம்பமாக அவள் இருந்ததுதான். அவள் மனக்கூண்டுக்குள் இருந்த சிந்தனைப் பறவையும் அவளையறியாமற் பறக்கத் தொடங்கியது.

இற்றைக்குப் பதினேழு வருடங்களின் முன், கள்ளங் கபட மற்ற உள்ளமுடைய கலைச்செல்வி ஆசிரியப்பயிற்சியை முடித்து வெளியேறினாள். சிரேஷ்ட பாடசாலையொன்றில் அவளுக்குப் பதவியும் கிடைத்தது. அவள் இன்பமாகத் தன் வாழ்க்கையை நடாத்தினாள். ஆண்டொன்று உருண்டோடியது. அறிவழகன் அவள் கரம் பற்றினான். பெயருக்கேற்ற அறிவும், அழகும் ஒருங்கேயமையப்பெற்றவன். அவன் இலங்கை வங்கியொன் றில் கண்ணியமான தொழில் வகித்தான். பொருத்தமான சோடி. சிறப்பான இல்வாழ்க்கை. கணவன் அன்பில் தன்னை மறந்து அக மிக மகிழ்ந்தாள் கலைச் செல்வி. இதைக் கண்டு பொறுமை கொண்ட உள்ளங்கள் பல. இளமையிலேயே கண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனை இழந்து வாழ்வில் இன்பங்காணாத அயல்வீட்டு அலமேலு வும் ஒருத்தியாவள். இவர்கள் இல்வாழ்வின் இன்பத் தீங்கனி யாக வந்து உதித்தான் அன்பழகன். சதிபதிகளின் களிப்பிற் குக் கங்குகரையுண்டோ!

வாழ்வு ஏட்டில் இரண்டு ஆண்டுகள் கிழிக்கப்பட்டன. அன்பழகன் தன் மழலை மொழியாலும், தளர் நடையாலும் மனையை மகிழ்ச்சியில் மூழ்கவைத்தான். இந்நிலையில் அறிவழக னுக்குத் தொழில்மாற்றம் திருக்கோணமலைக்கு வந்தது. பிரி வின் வேகத்தை இதுகாறும் உணராத கலைச்செல்வி கண்ணீர் விட்டுக் கலங்கினள். கண்ணீரைத் துடைத்த கணவன், "கவ லைப்படாதே கண்ணே, ஓரிரு மதிகளில் உன்னையும் அங்கே அழைக்கின்றேன்", என வாக்குறுதி அளித்து விடை பெற்றான். வருடங்கள் இரண்டு கழிந்தனவேயொழிய, கலைச்செல்வி கணவ ருடன் திருக்கோணமலையில் வாழும் வாய்ப்பைப் பெற்றாளில்லை. ஆனால், அறிவழகனோ மாதமொருமுறை தன் இல்லக்கிழத்தியை யும், இன்பக்கனியையும் கண்டு இன்புறத் தவறினான் அல்லன்.

காலதேவனின் போக்கைத் தடைசெய்ய முடியுமா? தென் றல் வீசிய அவள் வாழ்வில் சூறாவளி வீசத்தொடங்கியது. கணவ னுடன் வாழ இயலாத நிலையை நினைந்து வருந்திய கலைச்செல்வி தனிமையில் வயோதிப மாது ஒருத்தியின் துணையுடன் வாழ்ந் தாள். கலைச்செல்வியின் உயிர்த்தோழி பாலராணி. அவளைப் "பாலா" என்றே அழைப்பாள் கலைச்செல்வி. அவ்வழைப்பில் இருந்தது ஆலகாலவிடம். இவ்விரு எழுத்துக்களுமே தன் வாழ்க்கைப்படகைக் கவிழ்த்துத் தன்னை ஆறாத்துயருள் அமிழ்த் தும் என்பதை அன்று அறிந்திலள் கலைச்செல்வி.

ஒருநாள் அயலில் உள்ள அலமேலு வீட்டுக்கு அன்பழக னுடன் சென்ற பணிப்பெண், 'பாலா' வந்திருப்பதையும், பாலா வும் கலைச்செல்வியும் தம்மை மறந்து வெகுநேரமாகப் பேசிக் கொண்டிருப்பதையும் தெரிவித்தாள். கலைச்செல்வியில் களங் கம் கற்பிக்கக் காத்துக்கொண்டிருந்த அலமேலுவுக்கு இச்செய்தி மிக்க மகிழ்ச்சியை அளித்தது. காற்றிலும் வேகமாகப் பறந்தது கலைச்செல்வியின் மானம். பரோபகார சிந்தையிற் கருத்துள்ள யாரோ புண்ணியவான் அறிவழகனுக்கு அனுப்பிவிட்டான் செய்தியை. அவனுள்ளத்தில் சந்தேகமெனும் விஷ விதைகள் விதைக்கப்பட்டன. அவை முளை கொள்ளுமுன் உண்மையை அறியத் துடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடோடியும் ஊருக்கு வந்தான். வீட்டினுள் விரைவாக நுழைந்தான். யாரோ ஒருவரின் பேச்சுக்குரல் வித்தியாசமாக ஒலித்தது. அஃது அவனை உள்ளே செல்லாதவாறு தடுத்து நிறுத்தியது. கலகலவென்ற சிரிப்பொலி கலைச்செல்வியுடையது. "எனக்கு அறிவியாது அவர் வரவேமாட்டார். இன்று இரவு இங்குதான் நீ உணவும், உறக்கமும் வைத்துக்கொள்ள வேண்டும். நிம்மதியற்ற எனக்கு உனது வருகை எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது. பாலா மறுக்காதே ........." இப் பேச்சுக்களைக் கேட்டு அறிவழகன் குமுறினான். ஊழிக்காலக் கடல்போலப் பொங்கினான். எனினும், அறிவு அவனைத் தடுத்து நிறுத்தியது. வந்த சுவடே தெரியாது திரும்பினான். "நிம்மதி ... ... ... அவர் வரமாட்டார் ......... இன்று இரவு உணவும், உறக்கமும் இங்குதான் ......... மறுக்காதே பாலா ......... மானங் கெட்டவள்"......... என்று உமிழ்ந்தான். வீட்டை ஒருமுறை பார்த்து, "நிம்மதி உனக்கு ......... எனக்கு எங்கே நிம்மதி? ........." அலைமோதி நிலைமாறிய உள்ளத்துடன் அருமை மைந்தன் சிந்தனையையுந் துறந்து திருக்கோணமலைக்குத் திரும்பிவிட்டான் அறிவழகன். பாவம்! கலைச்செல்வி ஒன்றும் அறியாத பேதை! கணவனின் செய்தியையோ, வரவையோ காணாது கவலைக்கடலில் மூழ்கினாள். காதலன் ஒரு வேளை கடும் நோயால் பாதிக்கப்பட்டு உள்ளானோ என்று ஏங்கிய கற்புக் கடம்பூண்ட கலைச்செல்வி, மைந்தனுடன் கணவன் இருக்குமிடஞ் சென்றாள். அங்கு அவளை வரவேற்றது கணவனின் கடூரச் சொற்கள். கைப் பிடித்த காதலனின் சுடுமொழிகள் அவள் காதைத் துளைத்தன. தன் கணவனின் உளமாற்றத்தின் காரணமறியாது கலங்கினாள். தன் காதல் மனையாளின் இந்நிலை கண்டுஞ் சிறிதும் இரக்கமற்றவனாய், "உன் கண்ணீரைத் துடைத்து உனக்கு அமைதி அளிப்பவனிடம் செல்" எனக் கூறி அவர்கள் இருவருக்கும் அன்புப் பாலமாக அமைந்த அன்பழகன் "அம்மா! அம்மா!" என்று அலறவும் அதனைப் பொருட்படுத்தாது, கறவையினின்றும் கன்றைப் பிரிப்பதுபோல் அவனை இழுத்துச் சென்றான்.

கணவன் தன்னை வெறுத்த காரணத்தை அறியாது கலங்கிய கலைச்செல்வி என்றோ ஒருநாள் உண்மை முதிரும் எனக் காத்திருந்தாள். காலங்கடந்தது. கருத்து மட்டும் புரியவில்லை. கணவன் தன்னைக் கைவிட்ட நிலையை எண்ணி வருந்தியதோடு அன்பழகனின் பிரிவும் அவளை அனலிடை மெழுகாக்கியது. கணவன் இன்று மனம் மாறுவான், நாளை மாறுவான் என்று எண்ணியன யாவும் விழலுக்கிறைத்த நீராயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றொருநாள் காற்றிற் பறந்து வந்த செய்தித்தாள் கலைச் செல்விக்கு வாழ வழி வகுத்தது. சீதுவையிலுள்ள குருடர், செவிடர் பாடசாலையில் பணியாற்ற அன்பும், பொறுமையும் வாய்ந்த பெண்மணி ஒருத்தி தேவையென்பதே அச்செய்தி. இது கடவுளின் கருணையே என எண்ணிச் சீதுவைக்குச் செல்வதற்கு முடிவு செய்தாள். அங்கு புறப்படுமுன் தான்போகும் இடத்தைக் குறிப்பிடாது தன் கணவனிற்குக் கடைசியாக ஒரு கடிதத்தையும் எழுதிச் சென்றாள்.

சீதுவைக் குருடர், செவிடர் பாடசாலையில் பதவியேற்ற கலைச்செல்வி பத்தாண்டுகள் அங்கு ஆசிரியப்பணி ஆற்றியபின் அப்பாடசாலைக்குத் தலைவியுமாகி விட்டாள். பாலர்களைத் தம் அன்புள்ளத்தால் ஆட்கொண்டாள். அவள் முகம் கண்ட வாய் பேசாச் சிறுவர்கள், தத்தம் தாய்முகம் கண்ட சேய்களானார்கள். அவர்கள் மகிழ்ச்சியில் தன் மனக் கவலைகளைச் சிறிது மறந்தாள் எனினும், மகவின் எண்ணம் மனதைக் குடைந்தது. அவளிங்கு வந்து பன்னிரண்டாண்டுகள் பறந்துவிட்டன. நான்கு வயதில் தன்னிடமிருந்து பிரிக்கப்பட்ட அன்பழகன் குமரப்பருவத்தை அடைந்திருப்பான் என்றெண்ணுகையில் அவளுள்ளம் பொங்கிப் பூரிக்கும்.

அறிவழகன் தன் மைந்தனைத் தாயின் குறை தெரியாவண்ணம் வளர்த்தான். கலைச்செல்வி பிரிந்த இரண்டு வருடங்களின்பின் ஒருநாள் அவள் பெயருக்கு வந்த கடிதமொன்று அவனிடம் அகப்பட்டது. அது ஒரு திருமண அழைப்பிதழ். அத்துடன் ஒரு கடிதம், '' கலைச்செல்வி, எவ்வளவோ காலம் அன்புடன் பழகிய நீ என்னை மறந்தது மிக்க வியப்பையளிக்கின்றது. எனது மண விழாவிற்கு உன்னையும், அண்ணாவையும், அன்பழகனையும் எதிர் பார்க்கின்றேன்.'' உன் 'பாலா' மண அழைப்பிதழைப் பார்வையிட்டான் அறிவழகன். பாலராணி '' ஆ! பாலராணி. பாலராணி ஒருபெண். நான் பாவி என் செய்தேன் '' சந்தேகம் என்னும் விஷம் எத்துணை கொடியது! எங்கள் வாழ்வு இனியும் இணையுமோ! என ஏங்கிய உள்ளத்துடன் மனைவியைத் தேடி அலைந்தான் மன்னிப்புப் பெற. பலன் யாதொன்றுமில்லை.

ஒருநாள் சீதுவைப் பாடசாலையில் அனைவரும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். காரணம் ஒரு பாடசாலை மாணவர்கள் அங்கு வரப்போகிறார்கள் என்ற செய்தியை அவர்கள் அதிபர் அவர்கட்கு அறிவித்திருந்ததுதான். அந்த நேரமும் வந்தது. விருந்தினர் வரும் ஆரவாரம். கலைச்செல்வி விருந்தினரை வரவேற்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரானுள். ஓர் இளைஞன் முன்னேக்கி வருகின்ருன். அறிவழ கன் ..... என் கணவர் சாயல்...... ஆம் என் மகனே ..... அல்லன்! அல்லன்! அவள் உள்ளத்திற் கடுமையான போராட்டம். அரு கில் வந்த அவன் ''வணக்கம் அம்மா! தாங்கள் தானே அதி பர்?... அம்மா!'' அந்த அமுதமொழி அவளை விண்ணுல கிற்கு அழைத்துச் சென்றது. கண்கள் முத்துக்களை உதிர்க்கப் போகிறேம் என அவளை எச்சரித்தன. பேச மறந்தாள். சிலையை நிகர்த்து நின்ருள் சில நிமிடம். ''அம்மா'' மீண்டும் அதே அன்பழைப்பு அவளை இல்வுலகிற்குக் கொண்டு வந்தது. ஒரு வாறு தன் நிலையைச் சமாளித்துக் கொண்டு ''தம்பி! உமது பெயரென்ன?'' ''அன்பழகன் அம்மா!'' அணுவளவாக இருந்த சந்தேகமும் தீர்ந்துவிட்டது. நான்கு வயதில் ''அம்மா! அம்மா!'' என அழுதழுது பிரிந்த மகன்,.... ''மகனே'' என வாரியணைத்து உச்சி மோந்திட உந்தியது அவள் உள்ளம். சிரமப்பட்டுத் தன் ஆவலை அடக்கிக் கொண்டாள். சகஆசிரியை ஒருத்தியை விருந்தினருக்குப் பாடசாலையைச் சுற்றிக் காட்டும்படி பணித்துத் தன் அலுவலக அறையைச் சரணடைந்தாள்.

வந்தாரை மகிழ்விக்க, சிதுவை மாணவர்கள் சில கலை நிகழ்ச் சியைச் செய்து காட்டினர். வந்த மாணவர் சார்பில் அன்பழ கனே அன்பளிப்பைக் கொடுத்தான். அதிபரான கலைச்செல்வி ஓரிருசொல்லில் தனது நன்றி உரையை முடித்தாள். வந்தவர் விடைபெறும் நேரம். அன்பழகன் கறவையைத் தேடும் கன்று போல ஓடோடி வந்தான் கலைச்செல்வியிடம். ''அம்மா! எனக்கு அம்மா இல்லை, தங்களைக் கண்டதும் ஏனே அக்குறை தீர்ந்தது போல இருக்கிறது'' என்ருன். பாலனுகப் பிரிந்த மகன் பருவக் காளையாக முன் நிற்கிருன். அம்மா இல்லையாம்...? நான் குறை யைத் தீர்த்தேனும்... தடுமாறியது கலைச்செல்வியின் தாயுள்ளம். ''நானே உன் அம்மா'' என்று அரவணைக்க அவள் விரும்பினுள். ஆனுல், தன் வாழ்க்கையின் இரகசியத்தை அம்பலப்படுத்த விரும்பாமை அவளைத் தடுத்தது. தன் சூழ்நிலையை எண்ணித் தன் ஆவலுக்கு முற்றுப்புள்ளி இட்டாள். மீண்டும் அன்பழகன் ''அம்மா உங்கள் பெயர்?'' என வினவ, ''என் பெயரா? கலைச் செல்வி என்ரு கூறினேன்? இல்லை. என் பெயர்... என் பெயர்... அறிவழகி''. குரலில் காணப்பட்ட பதட்டம் அவள் கூறியது பொய்யென அறை கூவியது. பாசத்திற் கொடியதான பிள்ளைப் பாசம் தன்னை நிலைகுலைய வைத்ததை எண்ணித் தன்னைத்தானே நொந்து இரு சொல்லில் விடைகொடுத்து அவசரமாகச் செல்வது போல் சென்றுவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைத்து நின்ற அன்பழகன் தன்னுடன் வந்தோர் புறப் பட்டதைக் கண்டு செல்ல மனமின்றி அவர்களைத் தொடர்ந் தான். "மீண்டும் அந்த அன்புருவைக் காணும் ஆசையால்," அவன் கண்கள் அலைந்தன. பயனில்லை ... கலைச்செல்வியோ, அலுவலக அறையின் பலகணிவழியே அருமை மகன் போவதைப் பார்த்துக் குமுறிக்குமுறி அழுதாள். அவள் கண்கள் இருண்டன. கால்கள் தடுமாறின. நினைவிழந்து நிலத்தில் வீழ்ந்தாள். பாட சாலையே பரபரப்படைந்தது. இருப்பிடத்திற்குத் தூக்கிச் செல் லப்பட்ட அவள் வாய் ஏதோவெல்லாம் பிதற்றியது. "என் மகனே! அன்பழகா...... உன்னைக் கண்டேன் .. . பாவி! ...... மக னென்று .... கூப்பிடவில்லையே...... உன் அப்பா...... நான் தூயவளென உணரமாட்டாரா! ... வேணி! . என்கண்ணே! இதுகாலமும் அவள் வாழ்க்கை மர்மத்தை அறியத் துடித்த அப் பாடசாலை ஆசிரியர்கள், எதனையும் தெளிவாக அறிய முடியாதவ ராகித் தலைவியின் நிலைகண்டு துன்புற்றனர். இன்று வந்த அன் பழகன் இவள் மகனே என்னும் உண்மை மட்டும் எல்லோருக்கும் புலனாகியது.

வீடு சென்ற அன்பழகன் வாட்டமுற்று இருப்பதைக் கண்ட தந்தை, மனந்துடித்து நடந்ததென்னவென மைந்தனிடம் வினவி னான். அவன் சீதுவைப் பாடசாலையில் நடந்தவற்றைக் கூறினான். கலைச்செல்வி எனச் சொன்ன அதிபரம்மாள், பின் 'அறிவழகி' என ஏன் கூறவேண்டும். அறிவழகனுக்கு உண்மை புலனாயிற்று. உண்மையை உணர்ந்த நாள் தொடக்கம் தனது சட்டைப் பையிலேயே கொண்டு திரியும் கலைச்செல்வியின் புகைப்படத் தை எடுத்து மகனிடம் காட்டினான். இவரே தான் எனமகிழ்ச் சியால் கூவியே விட்டான் அன்பழகன். "மகனே, இவள்தான் உன் தாய் ..... என் சந்தேகம் பன்னிரண்டு ஆண்டுகள் எம்மைச் சித்திரவதை செய்த"தெனக் கூறிச் சீதுவையை நோக்கிப் பறந் தனர். அறிவழகனோ வீட்டைவிட்டுப் புறப்படுமுன் தன் மனைவி யெழுதிய இறுதிக் கடிதத்தை எண்ணி எண்ணிப் பயமும் பதட்ட மும் உடையவனாகக் காணப்பட்டான். கடிதத்திற் கண்ட சில வாக்கியங்கள் அறிவழகனின் மனத்தை உறுத்தத் தொடங்கின. "குற்றமற்ற என்மேல் .. நீங்கள் கொண்ட சந்தேகம் ஒழிந்து உண்மை முதிரும். தாங்கள் என்னைக் காண ஓடிவரும்போது நான் உயிருடன் இருப்பேனோ ....." என்ற இந்த வாக்கியங்கள் மீண்டும் மீண்டும் மனத்தை அலைக்க, துயரந்தாங்காத நிலையில் மகன் அன்பழகனோடு சீதுவையை நோக்கி விரைந்தான். அவர் கள் வந்த மோட்டார் வண்டி சீதுவைப் பாடசாலையில் நுழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், கம்பத்தில் கறுப்புக்கொடியேற்றவும் நேரஞ் சரியாகவிருந்தது. திகைத்தனர் இருவரும்; வேகமாக உட்சென்றனர். அங்கு பன்னூற்றுக்கணக்கான சிறுவர்கள் தமக்குத் தெரிந்த ஒரே சொல்லான ''அம்மா'' என்னும் பதத்தால் அழுது பிரலாபித்தனர். அவர்களை அன்புடன் அரவணைத்த கைகள் அசைவற்றுக் கிடந்தன. "அம்மா! அம்மா'' எனக் கதறி உயிரற்ற உடல் மீது உருண்டு புரண்டான் அன்பழகன். ''கலைச்செல்வி ..... உன் விரதத்தை நிறைவேற்றி விட்டாயே'' எனத் துடித்தான் அறிவழகன். அலறி ஏது பயன்? தொலைவானஞ் சென்று விட்ட அவள் இனியாருக்கும் தொலைவானந்தான்.

தான் இழைத்த தீங்கிற்குக் கழுவாயாக, கலைச்செல்வி விட்டுச் சென்ற பணியை ஏற்றுக் கொள்ளுதலே சிறந்தது என உணர்ந்த அறிவழகன் தன் வாழ்க்கையை அப்பாடசாலையின் நலனுக்காகவே அர்ப்பணித்தான்.

---

ஆண்டவனின் அருளைப்பெற விரும்பும் யாவரும் ஆண்டவனிடம் அன்பு செலுத்த வேண்டும். நாம் அன்பு செலுத்துவதற்கு நமது எண்ணங்களை ஒருமுகப்படுத்த வேண்டும். கடவுளை நினைந்து ஒரே மனதுடன் வழிபட்டால் ஆண்டவன் நமது வேண்டுதலுக்குச் செவிசாய்ப்பான்.

—கி. வா. ஜகன்நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்வதெழுதுதல் கவர்ச்சிக்குரிய பாடமாகுமா?

— திருவாட்டி. இ. பகவதி,
முதலாம் வருடம்.

இக்கால மாணவரின் எழுத்தாக்க வேலைகளில் எழுத்துப் பிழைகள் மலிந்து காணப்படுதல் கண்கூடு. இவற்றிற்குரிய காரணங்கள் பலவாயினும், சொல்வதெழுதுதல் என்னும் பாடத்தை முறைப்படி கற்பியாமையும் ஒரு காரணமென்க.

கற்குஞ் சிறுர்களின் மொழியாற்றல் வளம்பெறுவதற்குச் சொல்வதெழுதுதல் பேருதவி புரிகின்றது. அன்றி, மனக்கட்டுப்பாட்டின் அருமையை விளங்கவும், அவதானத்தை ஒருமுகப் படுத்தவும் இது பயிற்சி அளிக்கின்றது. சிறப்பான உரைநடைகளையும், செய்யுட் பாகங்களையும் மனனஞ்செய்வதற்கு உதவுவதோடு, பேச்சு, வாசிப்பு என்னும் பாடங்கட்கு மாதிரி காட்டுவதாகவும் இது அமைகின்றது.

கீழ் வகுப்புகளிலிருந்து மேல் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள் ஒருவரின் பேச்சைக் கிரகித்துக் குறிப்பெடுக்கும் ஆற்றலை வளர்ப்பதற்குச் சொல்வதெழுதுதல் துணைசெய்கின்றது. இப்பாடம் தற்போதைய கல்விக் கழகங்களில் சிறந்த இடத்தை வகித்து, சரியானமுறையிற் கற்பிக்கப்படாத காரணத்தால் இதன் முழுமையான பயனை மாணவர் பெறமுடியாதிருக்கின்றனர். மாணவர்களைப் பரீட்சிக்கும் முறையிலேயே இப்பாடம் அமைந்துவிடுவது வருந்துதற்குரியது. இப்பாடத்தைச் செவ்வனே நடாத்த ஆசிரியர்கள் முயற்சியெடுப்பின் பயன் உண்டாகுமென்பது எனது அபிப்பிராயம்.

மாணவர்களை முயற்சியிலீடுபடுத்தி இப்பாடத்தை நடாத்துதல் நன்று. உதாரணமாக, இப்பாடநேரத்தில் ஆசிரியர் மாணவரைக்கொண்டு ஒரு சில தொடர்பான வாக்கியங்களை ஆக்குவித்து அவற்றைச் சொல்வ தெழுதுதலுக்குரிய விடயமாகக் கொள்ளலாம். இந்தமுறையைக் கையாளுவதினுல் மாணவர் மகிழ்ச்சியுடன் கற்பர். மேலும் இப்பாடத்தில் ஊக்கமும் கொள்வர்.

247164



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கமுயற்சியும், சொல்வதெழுதுதலும் ஒரே பாடவேளை யில் நிகழ்த்தவேண்டுமென்பதில்லை. முன்னரே வேறு பாட நேரங்களில் மாணவர்களால் ஆக்கப்பட்ட கதைகளாகவோ, சிறு பந்திகளாகவோ இருக்கலாம். இவ்வாறு மாணவருக்கு முன்பு பழக்கப்பட்டபகுதிகளைச் சொல்வதெழுதுதலுக்கு உபயோ கிப்பதே விரும்பத்தக்கது. ஒருமுறை ஒரு மாணவன் பிழையாக எழுத நேரிடின், அப்பிழை அவன் மனத்திற் பதிந்துவிடுகின்றது. மாணவர்கள் பிழைகளை விடுவதற்கு வாய்ப்பளித்துப் பின்னர் அப்பிழைகளைத் திருத்த முற்படுவதிலும் பார்க்க, பிழைகள் விடாதவகையில் அவர்களை வழிநடத்துவதே சிறந்த முறையா கும். இம்முறையிற் கற்கச் செய்யவேண்டுமாயின் மாணவருக் குத் தெரியாத விடயங்களையும், கஷ்டமான விடயங்களையும் சொல்வதெழுதுதல் நேரங்களில் தவிர்க்கவேண்டும்.

இப்பாடத்தை நடாத்தும்போது ஆசிரியரும் முக்கிய இடத் தைப் பெறுகின்ருர். ஆசிரியரின் தேவையற்ற அசைவாட்டங் களும், அங்கசேட்டைகளும் மாணவரின் கவனத்தைச் சிதறச் செய்து அவர்தம் கிரகிக்கும் ஆற்றலை நன்கு தொழிற்படுவ தற்கு இடையூருகின்றன. சொல்வதெழுதுதலை நடாத்தும் போது ஆசிரியரின் உச்சரிப்பு, ஒலி என்பன நன்முறையில் எழும்பக்கூடியதாக அமைதல்வேண்டும். சொற்கள் புணரும் போது உண்டாகும் மாறுபாடுகளைத் தெளிவுபடுத்தக்கூடியதான முறையில் வாசிக்கப்படாமையும், எழுத்துக்களின் வேறு பாட்டை உணரச்செய்யாமையும் மாணவர்கள் எழுத்துப் பிழை களை விடுவதற்குக் காரணமாகின்றன என்பதை ஆசிரியர் மனத் திற் கொள்ளவேண்டியவராவர்.

உதாரணமாக, தமிழ் அரிச்சுவடியிலுள்ள லகர, ளகர, ழகர பேதங்களும், ணகர, னகர, ரகர, றகர பேதங்களும் தெளி வாக்கப்படவேண்டும். தொடக்ககாலத்திலேயே இவ்வெழுத்துக் களின் வேறுபாடுகள் தெளிவாக்கப்படாவிடின், குண்டுல, கொம்புள, மவ்ழ என்று சொல்லும் படித்தவர்களான சிலரின் சந்ததியே விருத்தியாகும். அடுத்து நோக்க வேண்டியவை 'ணகர, னகர, நகரங்'களாம். இவற்றுள் 'ணகரம்' உச்சரிப்பதா லும், சொற்களில் வைத்து உபயோகிப்பதினுலும், தெளிவுறுத் தப்படலாம். னகர, நகரங்கள் மிக நுண்ணிய வேறுபாடுடை யவை. இவற்றை உணர்த்துவது கடினம். எனவே, இவ்வெழுத் துக்கள் எவ்வெவ்விடங்களில் வருகின்றன என்பதை அவதா னித்தல் மூலமாகவும், உபயோகிக்கச்செய்தல் மூலமாகவும்



247154

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் வேறுபாட்டினைத் தெளிவுறுத்தலாம். 'நகர'ம் மொழி முதலிலும், மொழியின் இடையிலே 'தகரத்'த்தை அடுத்தும் வருமென்றும், 'னகர'ம் மொழி முதலில் வராதென்றும், மொழி இறுதியில் வருமென்றும், மொழியிடையில் 'றகர'த்தை அடுத்து வருமென்றும், பல்காலும் உதாரணங்களைக் காட்டி விளக்கிவரின் மாணவர் இவ்வெழுத்துக்களின் பிரயோகங்களை நன்கு உணர்வர்.

அன்றி, சொல்லப்படும் பந்தியில் மாணவர் கருத்துடையராக இருக்கவேண்டுமாயின், பொருள் அமைதி தோன்றக்கூடிய வகையில் சொற்றொடர்களை ஏற்றமுறையில் சேர்த்துவாசித்தல் அவசியம். பேச்சு, வாசிப்பு ஆகிய பாடநேரங்களில் உச்சரிப்புப் பயிற்சி சரியானமுறையில் அளிக்கப்படுமாயின், சொல்வதெழுதுதல் நிகழும்போது பிழைகள் மலிந்துகாணப்படமாட்டா.

அடுத்து, சொல்வது எழுதத்தொடங்குமுன் மாணவர் கற்றலுக்கு ஆயத்தமான நிலையிலிருக்கவேண்டும். பாடத்துக்குரிய உபகரணங்களாகிய எழுதுகோல், காகிதம் போன்றவற்றை எல்லா மாணவரும் வைத்திருத்தல் அவசியம். மாணவரின் இருக்கை இலகுவானதாய் இருப்பதற்கு ஆசனங்கள் நல்லமுறையில் அமைந்திருக்கப் பார்ப்பது ஆசிரியர் கடனாகும். மாணவரின் கவனம் பாடத்தில் ஒருமுகப்படுத்தப்பட்ட நிலையில் அதனை ஆரம்பிப்பதே சிறந்த முறையாகும். அப்பொழுதுதான் நல்ல முறையிற் கற்றல் நடைபெறும்.

எழுத்துப் பாடத்தில் சொல்வதெழுதுதல் முக்கியமான இடத்தை வகித்து, நல்ல பயனை மாணவருக்கு அளிக்கவேண்டுமாயின் இப்பாடம் மாணவரின் விருப்புக்குரியதாகவும், நல்ல முறையில் நடாத்தப்படுவதாகவும் இருத்தல் அவசியம். அவ்வாறமையின் பாடமும் கவர்ச்சிக்குரிய பாடமாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை பிறந்ததையா

— திருவாட்டி. ம. நடராசா,
விடுகை வருடம்.

சொல்லுபவர் சொல்லட்டும் எந்தன் பாட்டிற்
சுவையில்லைப் பொருளில்லை யென்று ஈதைத்
தள்ளுபவர் தள்ளட்டும் குறையொன் றில்லைத்
தாறுமாருகத் தானென்னை வையட்டும்
தெள்ளுதமிழ் யாப்பினைக் கற்றுளா என்று
திறமை மிகுபண்டிதர்க ளென்னைத் தாக்கட்டும்
எள்ளிநகை யாடட்டும் எனக்கு வெட்கம்
இல்லையையா இலக்கணத்தை அறியேன் நானே.

பாட்டெழுத வேண்டுமென்று பலநா ளாசை
பலவிதத்தில் முயற்சி செய்தேன் பலன்தானில்லை.
வீட்டினிலும் என்பாடு பெரிய மோசம்
விளக்கெரித்துப் பயிற்சி செய்ய வழியுமில்லை
நாட்டமுள்ள குழந்தைகளும் மூன்று ஐயா
நாள் முழுதும் வேலையுமோ குறையாதையா
கேட்டிடுவீர் என்கதையைக் கேட்ட பின்னும்
கெந்தகம்போற் பொங்காதீர் பொறுமை நன்று.

மலைநாட்டிற் சிலகாலம் சேவை செய்தேன்
மலைவளத்தைக் கண்டின்பங் கொண்டு நானோர்
சிலையாக நின்றிருப்பேன் என்ன லாபம்
சிறுகவிதை ஒன்றேனும் பிறக்க வில்லை
அலைமோதும் கடற்கரையில் அனேக நாட்கள்
அன்பான கணவருடன் அமர்ந்திருப்பேன்
கலையுள்ள மெனக்கில்லைப் போலு மையா
கவிதையொன்று பிறக்கவில்லைக் கவலை கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டியிலே கணவருடன் வாழ்ந்த போது
    கலவரத்தி லகப்பட்டுக் கலங்கி நின்றேன்
உண்டியின்றி உடையின்றி உயிராம் மக்கள்
    'உணவம்மா' என்றுமுகம் நோக்கிக் கேட்கக்
கண்டுள்ளம் வெதும்பிற்றுக் கவலை மிஞ்சிக்
    கதறிய அந்நிலையிலுந் தான்கவிதை யொன்று
விண்டெனக் குப்பிறக்க வில்லை வீண்முயற்சி
    வெகுதூரம் கவிதைக்கும் எனக்கு மென்றேன்.

இந்தவிதம் துன்புற்றுக் கவிதை செய்யும்
    எண்ணத்தைச் சிறிது மறந்திருந்த போது
வந்ததையா ஒருகடிதம் வாங்கிப் பார்த்தேன்
    வாரும்நீர் ஆசிரியர் பயிற்சிக் கென்ற
சிந்தைகுளிர் வாக்கியத்தைக் கண்டேன் கண்டும்
    சிறப்பான கவிதை யொன்று பிறக்கவில்லை
நொந்த உளத்தோடங் குச்சென்றேன் சென்று
    நுழைந்தேன் நம்மதிபரலு வலகத் துள்ளே.

இங்கதனை என்னென்று உரைப்பே னையா
    என்னிடத்தில் வார்த்தை வளமில்லை யையா
செங்கமல மொன்றென்முன் பூத்து நிற்கச்
    செவ்விதழ்கள் முறுவலிக்கச் சிரமுயர்த்திப்
பங்கயமா மவரிந்தப் பண்பற் றேனைப்
    பார்த்தாரே யொருபார்வை பால்நி லாவாற்
பொங்குகின்ற கடலைபோற் பொங்கிற் றையா
    புதுமைமிகு கவிதையுமே பிறந்த தையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன் காட்டிய வழி

— திருவாட்டி. மின்னற்கொடி இளையதம்பி,
விடுகை வருடம்.

பகவான் கிருஷ்ணனுடைய
பகவத் கீதை என்னும் ஞானநூல் பசுக்களில்
உபதேசங்களாகும். "உபநிஷதங்களாகிய
கோபாலனாகிய இடையனால் அர்ச்சுனனாகிய கன்றின் உதவியு
டன் தேவாமிர்தமாகிய பால் கறக்கப்பட்டது" என்று பெரியோ
ராற் கூறப்பட்டுள்ளது. குருக்ஷேத்திரப் போர்க்களத்திலே
முதலாவது நாளில் இருபுறத்தாரும் சந்திக்கின்றனர். அர்ச்சுனன்
கம்பீரத்துடன் தேரில் அமர்ந்திருக்கிறான். கண்ணன் அவனது
தேரைச் செலுத்துகின்றான். போர்க்களம் செல்லுமட்டும் பல்கிப்
பெருகிய அர்ச்சுனனது வீரம் களத்தைக் குறுகிய மாத்திரத்தே
வில்லுடன் சோர்ந்து வீழ்ந்தது. அர்ச்சுனன் சோர்ந்த காரணம்
அச்சம் பற்றியதன்று. பின் என்பற்றியோ எனின், போர்க்
களத்தை நோக்கிய அர்ச்சுனன் தனது குரவர்களைக் காண்கின்
றான். தனது உற்றார் உறவினரைக் கண்ணுறுகிறான். இவர்களைக்
கொன்றால் வரும் பழியை உன்னுகின்றான். பதைபதைக்கின்
றான். இவ்வாறு பழிமூலம் வரும் வெற்றியிலும் அழிந்துபடு
தலே மேலென்று கருதுகிறான். இத்தகைய நிலையிலிருந்த அர்ச்
சுனனுக்கு மீண்டும் வீரமும், உணர்ச்சியும் ஊட்டிய உபதேசங்
களே கீதையாகும். எனவே, கீதையினது போக்கு, "கடமையைச்
செய்; பலனை எதிர்பாராதே" எனும் கருத்தாய் அமைந்துள்ளது.
பகவத்கீதை எவ்வாறு அர்ச்சுனனது மனச்சோர்வைப் போக்கி
அவனது கடமையைச் செய்யத் தூண்டியதோ அவ்வாறே அக்
கண்ணன் உபதேசங்கள் மனித வாழ்க்கையைப் பண்படுத்தும்
மாமருந்தாக விளங்குகின்றன. மனச்சோர்வை அகற்றிக் கடமை
யுணர்ச்சியைத் தூண்டி எம்மை நற்பாதையிற் செல்லக் கட்டளை
யிடுகின்றது கண்ணனது வழி.

கண்ணனது உபதேசங்கள் எவ்வாறு வாழ்விற்கு வழிகாட்டி
யாக உள்ளன என்பதை ஆராயும்போது, மகாத்மாகாந்தி தனக்கு
உகந்ததாக, வேதவாக்காக, வாழ்க்கையின் தாரக மந்திரமாக
இவற்றை எண்ணியிருந்தார் என்ற ஒன்றேபோதும். என்றாலும்,
கீதையின் உட்கிடக்கையில் ஒருசில சுலோகங்களை எடுத்தாராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் மூலம் எவ்வாறு இது நம் வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றது என்பதை ஆராய்வாம்.

கடமையைச் செய்ய வெளிப்பட்ட அர்ச்சுனன், தனது கடமையை மறந்து கைசோர்ந்துவிடுகின்றான். காரணம் என்ன? அவனது கடமையைப் பாசமும் பந்தமும் மீறிவிடுகின்றன. நாம் சிற்சில வேளைகளில் கடமையை மறந்து விடுகின்றோம். சுய நலமே பெரிதெனக் கருதுகின்றோம். இன்பம் வரும்போது மகிழ்வடைகின்றோம். துன்பம் வரும்போது சோர்வடைந்து விரக்தி பாவத்தை அடைகின்றோம். பொருள் இழக்கும்போது துன்பமும், பொருட் பேற்றின்போது அளவுகடந்த மகிழ்வும் அடைகின்றோம். வெற்றிபெறும்போது நமக்கிணை ஒருவருமில்லையென்று இறுமாப்படைகின்றோம். தோல்வியடையும்போது அனைத்தையுமே இழந்தாற்போன்ற சோகநிலை எய்துகின்றோம். இதனையே கண்ணனும் அர்ச்சுனனுக்கு எடுத்துரைத்து அவனது மனத்தை மாற்றுகிறான். "அர்ச்சுனா! இன்ப துன்பம், இழிவு பேறு, வெற்றி தோல்வி, இவற்றை நீ நிகரென எண்ணிப் போர்புரி, அப்பொழுது நீ செய்யும் கடமையினால் உனக்கு ஒருவித இழிவும் இல்லை." இவற்றை நாம் நமது வாழ்வுடன் பொருத்திப் பார்ப்போமாக.

நாம் நமது வாழ்வை நடத்தும்போது பல பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றோம். முயற்சிகளைச் செய்கின்றோம். ஆனால், சிலவேளைகளிற் பயன் கிடைப்பதில்லை. இவ்வேளைகளில் தோல்வி மனப்பான்மையினால் மனஞ்சோர்ந்து வாழ்வினையே வெறுத்து விடுகின்றோம். இதற்கும் கண்ணனது புத்திமதியே வழிகாட்டுகிறது. "தொழில் செய்யவே உனக்கதிகாரம் உண்டு; அதன் பயன்களில் உனக்கதிகாரம் இல்லை. பணிபுரி; பலனை எதிர்பாராதே" என்று கூறுகின்றார். இதையே நாவுக்கரசரும், "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்று கூறியுள்ளார். எமது வாழ்வில் மனஉறுதி முக்கியமானதாகும். மன உறுதி எது? அதுதான் துன்பங்களால் மனங்கெடாத் தன்மையை அளிப்பதும், இன்பங்களால் உந்தப்படும் நிலையை நீக்குவதும், அச்சம் சினம் முதலிய அற்பகுணங்களைப் போக்குவதுமாகும். அந்த மன உறுதியுடன் கலந்த அறிவொன்றே இந்திரியங்களை அடக்கும் வழியாகும். இவ்வழியைக் கண்ணன் எமக்குக் கீதையிற் கூறியுள்ளான்.

சைவசமய வளர்ச்சி குன்றியபோது நால்வர் பெருமக்கள் போன்றோர் தோன்றினர். இதுபோலவே உலகம் அதர்மத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் கூறுவதாவது: சாதுக்களின் பாதுகாப்பின் பொருட்டும், துஷ்டர்களின் அழிவின்பொருட்டும், தர்மத்தைப் பாதுகாக்கும் நோக்கமாக யானும் யுகங்கள்தோறும் தோன்றுகின்றேன். எனவே, பாவிகள் அழிவர்; நல்லோர் வாழ்வர்; தர்மம் பாதுகாக்கப்படும்; சத்தியமே வெல்லும் என்னும் உண்மை நெறியும் இத்தால் புலப்படுத்தப்படுகின்றது.

எவன் ஒருவன் தன்னிலே இன்புறுகிருனே, தன்னிலே தான் திருப்தியடைகிருனே, தொழிற்பற்றின்றி இறைவனே செய்தான் என்று எண்ணுகின்ருனே, அவன் பற்றுக்களாற் பீடிக்கப்படுவதில்லை. 'நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானே இதற்கு நாயகமே?' என்னும் மணிவாசகர் நிலை இதற்குச் சான்ருகும். அளவுகடந்த துயராற் பிரலாபித்தல் இழிந்தோர் செயலாகும். அதேபோல அளவுகடந்த மகிழ்வாற் குதூகலித்தலும் அற்பர் தம் செயலாகும். துக்கம், சுகம் ஆகிய இரண்டையும் சமமாகப் பாவிப்பவன் எவனே அவனே வீரன். அவனே புத்திமான். ஒருவன் பெருஞ் சிறப்பெய்தும்போது 'இது என்னுல் ஆனது' என்று தருக்குறுகின்ருன். அதே மனிதன் தாழ்வுநிலை உறும் போது இறைவனை நோகின்ருன். இவ்விரு தன்மையுமின்றித் தாமரையிலையில் நீர்போல் எல்லாம் இறைவன் மயம் என்றிருப்பின் வாழ்வு இணையற்றதாகும். அவனுக்கு வாழ்வின் துன்பங்கள் வந்தடையா. இத்தகைய சிறந்த வழியினை உபநிடதங்களும் கூறுகின்றன. இதையே கண்ணனும் கூறி, அர்ச்சுனனை வழிப்படுத்துகின்ருர்.

அஞ்ஞானத்தின் காரணமாக நெஞ்சத்து வேரூன்றிய ஐயங்களை அறிவாகிய வாளினுல் அறுத்துவிடுவோமேயானுல் யோக நிலை தானுகவே வந்தெய்தும். சஞ்சலம் பொருந்தியதாகிய மனதைக் கட்டுப்படுத்தக்கூடிய இறையருளை உடையது உறுதியேயாகும். எவன் ஒருவன் சமமான பார்வை உள்ளவனே அவன் தன்னுயிரில் பிற உயிர்களையும் பிற உயிர்களுள் தன்னையுங் காண்கின்ருன்.

இவ்வாறு, இவற்றை எல்லாம் புத்தியூட்டப்பெற்ற அர்ச்சுனனுக்குத் தன் விசுவரூபத்தை உணர்த்திய கண்ணன் உலகம் முழுவதும் இறைமயம் என்பதை உணர்த்துகின்ருன். நாமும் இவ்வுலகனைத்தும் இறைவன்மயம் என்பது உணர்வோமாயின் ஒருவருக்குத் தீங்கு புரியவோ ஒருவரை இகழவோமாட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற எண்ணம் உண்டாகும்.

இறுதியாகக் கண்ணன் கூறுகின்ருன்: "எல்லாத் தர்மங்களையுங் கைவிட்டு என்னையே சரணுக அணை. யான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன். இதில் உனக்குக் கவலைவேண்டாம்".

இதுகாறும் கண்ணன் கூறியவற்றுள் அங்கொன்றிங்கொன்ருகச் சில எடுத்தாராயப்பட்டன. கீதை என்பது உபதேசம். எனவே, கீதை முழுவதுமே வழிகாட்டியாகும். வாழ வழியின்றித் தேம்பித் திரிவோர்க்கு மருந்தென விளங்கும் இந்நூலை நாம் மதித்துப் போற்றுவோமாக! கண்ணன் காட்டிய நல்வழியின் சுவட்டில் யாமும் செல்வோமாக!

> உனது குற்றங்களை அல்லது குறைகளை ஒருவன் எடுத்துக் கூறினுல் உன்மனம் வருந்துகின்றதன்ருே? ஆதலினுல் நீ இன்னெருவன் குற்றங் குறைகளைக் கூருதே; குணங்களைக் கூறு. குற்றங்களுக்குத் தண்டனை தருபவர் கடவுளே யாவார்.
>
> —திருமுருக கிருபானந்தவாரியார்

Donated by:-
PROF. K. KAILASAPATHY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியியற் பண்புகளை ஆரம்ப பாடசாலை மாணவரிடம் வளர்ப்ப தெங்ஙனம்?

—திருவாட்டி. ப. வேலுப்பிள்ளை,
விடுகை வருடம்.

ஓர் அரசாங்கத்தின் ஆட்சிக்குட்பட்டு வாழும் பிரசை ஒருவன் குடியியற் பண்புகளை உடையவனுய் இருத்தல் அவசியம். தன்னைத் தான் ஆட்சி செய்யும் சனநாயக முறையில் நம்பிக்கை கொண்ட சனநாயகச் சமூகத்தின் உறுப்பினராய் உள்ள ஒருவர் தானும், குடியியற் பண்புகள் அற்றவராயின், அவரின் சமூகம் உருக்குலைந்து ஊழல்களுக்கு இருப்பிடமாக மாறிவிடும். அச்சமூகத்தின் அடிப் படையில் எழுப்பப்பட்ட அரசியல், நிலைகொள்ளாது நலிவுறும். எனவே, சிறந்த ஒரு சனநாயக சமூகத்திஞல் நிறுவப்பட்ட ஒரு சனநாயக ஆட்சி நம் நாட்டில் நிலைபெற வேண்டுமாஞல், பாட சாலைகளிலே வருங்காலப் பிரசைகளாகிய மாணவர்கள் குடியியற் பண்புகள் உடையவராய் வளர்தல் அவசியம்.

இப்பண்புகளை அளிப்பதில் குடியியல், அரசியல் போன்ற பாடங்கள் முதலிடத்தை வகிப்பதாக இருப்பினும், குடியியல் ஆசிரியர்களும், குடியியற் பாடமும் தான் இப்பண்புகளை மாணவ ருக்கு அளிக்க முடியும் என்று எண்ணுதலும், ஏனையோர் இதைப் பற்றிய அக்கறை இல்லாத நிலையில் இருப்பதும் வருந்துதற் குரியது. ஆரம்பவகுப்பில் குடியியற் பாடம் நடத்தப்படுவதில்லை. அப்படியாயின் மாணவர் குடியியற் பண்புகள் அற்ற நிலையிலே வளர்வதா? அன்றி குடியியலை ஒரு பாடமாக நடத்தாதவிடத் தும் குடியியற் பண்புகளை அவர்களிடம் புகுத்துதற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதா? ஆரம்பபாடசாலைக் கல்விக்கிரமத் தில் இடம் பெற்றுள்ள சகல பாடங்களும், முயற்சிகளும், இப் பண்புகளை வளர்க்கும் வகையில் அமைதல் விரும்பத்தக்கது. வகுப்பறையிலும், வகுப்பறைக்குப் புறத்தேயும் மாணவன் பெறும் அனுபவங்கள் அவனிடத்தே பல சனநாயகப் பண்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தக் கூடியதாக இருப்பின் பாடசாலைகள் ஆற்றும் பணி போற்றுதற்குரியதாகும்.

ஒருவரிடம் காணப்பட வேண்டிய குடியியற் பண்புகள் பல உண்டு. தன்னையும் தன் அயலானையும் பேணுதல், பிரமாணங்களுக்கு அமைந்து ஒழுகுதல், பொறுப்புணர்ச்சியுடைமை, தலைமைதாங்குதல், ஒரு தலைவரின் கீழ் தனித்தும் குழுவாகவும் இயங்குதல், சரிபிழை அறிதல், கலந்துரையாடி நியாயித்துத் தீர்ப்பளித்தல், மற்றவர்களின் திறமை, ஆற்றல் ஆகியவற்றைக் கணித்தல் போன்ற பண்புகள் எல்லா மாணவரிடத்தும் காணப்படக்கூடிய வகையில் மாணவருக்குப் பயிற்சி அளிக்கப்படுவது சிறந்தது. இந்நிலை கிட்டுமாயின் வருங்காலத்தே பாராளுமன்றத்திலோ, உள்ளூர் ஆட்சி மன்றங்களிலோ அல்லது அரசியல் சமூக அரங்குகளிலோ, பொதுக் கூட்டங்களிலோ கருமங்கள் சுமுகமான தீர்மானங்களுடன் ஒழுங்கான சீரான முறையில் நடைபெறும்.

பாடசாலைகளில் மாணவர்கள் பல முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். ஆரம்ப பாடசாலை மாணவர்கள் இதற்கு விலக்கானவர்கள் அல்லர். மாணவர் மன்றங்கள் கூட்டப்படலாம். இம்மன்றங்களுக்குத் தலைமை வகித்தல், நிர்வகித்தல் போன்ற பொறுப்புக்கள் மாணவருடையதாக இருக்கலாம். தலைவர்கள் அடிக்கடி மாற்றப்படலாம். அப்பொழுது தான் பலருக்குத் தலைமை தாங்கும் வாய்ப்புக் கிடைக்கும். தலைமை தாங்குவதினல் மாணவர் பொறுப்புணர்ச்சி யுடையவராய்க் கருமம் ஆற்றும் சிறப்புத் தன்மை யுடையவராய் மாறுகின்றனர். இன்னும் தலைவர்களேயும் மற்றும் உத்தியோகத்தர்களையும் ஆசிரியரே நியமித்து விடாமல் மாணவர் தெரிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். தேர்தல் நடைபெறும்போது மாணவர் சிறியவர்களாயினும், விருப்பு வெறுப்புக்களுக்கு இடங்கொடாமல் ஆற்றலை மதிப்பிட்டு வாக்குகளை அளிக்கும் திறனுடையவர்களாய் இருக்கப் பயிற்சி கொடுக்க வேண்டும். அடிக்கடி தேர்தல் இடம்பெறும்போது மாணவர்களுக்குப் பலதடவை வாக்களிக்கும் சந்தர்ப்பம் கிட்டுகிறது. தேர்தலின் முக்கியத்துவத்தை ஆசிரியர் விளக்கவேண்டும். இவ்விதமான தேர்தல் வகுப்பறையிலும் இடம்பெறலாம். வகுப்புத் தலைமை மாணவர் பதவி, வகுப்பறை விளம்பரப் பலகைப் பொறுப்பாளர் போன்ற சில பதவிகளைத் தேர்தலுக்குப் பின்னர் அளிப்பது நன்று. மாணவர் சரிபிழை அறியவும், நியாயித்துத் தீர்ப்பு அளிக்கவும் தேர்தல் பயிற்சி கொடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்ற நிகழ்ச்சிகளிற் பங்கு கொள்ளும்போது மாணவர் சில பிரமாணங்களுக்கு அமையப் பழகுகின்றனர். விடயங்கள் நன்கு நடைபெற வேண்டுமாயின் ஒருசில பிரமாணங்களுக்கு அமைவது எவ்வளவு முக்கியமான தெனவும், அதனுல் விளையும் பயன் எவ்வளவு என்பதையும் உணருகின்றனர். அத்துடன் மன்ற நிகழ்ச்சிகளில் மாணவர்கள் பங்கு கொள்ளும்போது ஒருவர் மற்றவரின் திறமையையும் ஆற்றலையும் அறிந்து அவற்றைக் கணிக்கவும், போற்றவும் பழகிக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. ஒருவன் தன்னையே வியந்து கொள்ளாமல் தன்னைச் சூழ்ந்தவரின் பெருமையை வியந்துகொள்ளக் கற்பதினுல் அவன் புனிதம் அடைகின்ருன். அவன்மீது அவனுக்கு இருந்த பற்று பிறர்மீதும் பரவத் தொடங்குகிறது. சுருங்கிய அவனது உலகம் விரிவடைந்து காலப்போக்கில் சர்வதேச விளக்கம் (International understanding) உடையவனுக வளர்ந்து விடுகிருன்.

தற்போது எங்கு பார்த்தாலும் நான், நான் என்ற பாசம் அனைவரையும் அடிமைகளாய், விலங்குகளாய் ஆக்கிவிடுகின்றது. கோவிலுக்குச் சென்ருலும் சரி, பொது வாகனங்களிற் பிரயாணம் செய்தாலும் சரி, ஒரு படமாளிகையிற் புகுவதற்குக் காத்து நின்ருலும் சரி, ஒருவரை ஒருவர் முட்டி மோதுவதும், பிந்தி வந்து முந்தி இடம்பெற முயற்சிப்பதும், மெலிந்தோர், இளையோர் என்ற பேதம் காணமுடியாது, தாம் வசதியாக இருந்தாற் போதும் என்ற எண்ணமுடையவராய் இருத்தலும், கற்றவர் என்று கருதப்படுகின்ற— நாகரிக உடையுடன் காணப்படுகின்ற எமது மக்களிடம் காணப்படும் சர்வ சாதாரணமான இயல்புகளாகும். இக்குறை நிலைத்து நின்று நமது சமூகத்தை நலிவடையச் செய்யாமல் இருக்க வேண்டுமாயின் ஆசிரியர்கள், மாணவரின் உளம் பண்படக்கூடிய வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளித்தல் வேண்டும்.

வகுப்பறையிலே மாணவன் தனது பொருள்களையும், உடன் மாணவரின் பொருள்களையும், பாடசாலைப் பொதுப் பொருள்களையும், கவனமாகவும், சேதம் விளைக்காத வகையிலும் உபயோகிக்கப் பயிற்சி அளித்தல் நன்று. தனது மேசை, நாற்காலி ஆகியவற்றைச் சுத்தமாக வைத்திருப்பது போல, தனது நண்பர்களின் மேசை நாற்காலிகள் சுத்தமாகவும், ஒழுங்காகவும் இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்ளும் பழக்கம் உடையவனுகச் செய்தல் வேண்டும். இன்னும் தான் சந்தோஷமாக இருப்பது போன்று தனது சக மாணவர்களும் சந்தோஷமாக இருக்க வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் என்ற எண்ணம் அவனிடத்து வளரவேண்டும். வகுப்பில் தனக்கு எவ்வளவு உரிமைகள் உள்ளனவோ அவ்வளவு உரிமைகள் மற்றையோருக்கும் உண்டு என்பதை உளமார ஏற்றுக்கொண்டு, இந்நிலை என்றும் நிலைத்திருக்குமாறு உழைக்கும் பண்புடையவனாக அவனை ஆக்குதல் ஆசிரியர் கடனாகும். அப்போதுதான், மாணவர் பரந்த சமூகத்தில் வாழும்போது நூல்நிலையங்கள், சனசமூகநிலையங்கள், வீதிகள், வாகனங்கள், மலசலகூடங்கள் போன்ற பொதுவிடங்களை, நன்கு பேணிப் பொதுமக்களின் நல்வாழ்வுக்கு உதவும் பண்புடையவராய் விளங்குவர். இது சொல்முறையால் நிகழ்வதன்று. நாளாந்தம் செய்து பழகல் மூலம் இப்பண்பைப் பெற்றுக்கொள்ள முடியும். தன்னைப் போலத் தன் அயலானையும் நோக்கும் இப்பண்பு மாணவரிடம் வளருமேயானால் நாட்டில் எழும் பிரச்சினைகள் பகலவன் முன் பனியென மறைந்துவிடும்.

அடுத்து, வகுப்பறையிலும், வகுப்பறைக்குப் புறத்தேயும் மாணவர்கள் தனியாகவும் குழுவாகவும் இயங்குவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். உதாரணமாக, ஒரு நாடகத்தை நடிப்பதானால் அதைத் திறம்படச் செய்வதற்குத் தேவையான சில உபகரணங்களை மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து, குழுத் தலைவர்களின் வழிகாட்டுக் குட்பட்டுச் சேகரிக்கலாம். இன்னும் ஓர் ஆரம்பபாடசாலை மாணவரை வரவேற்று விருந்தளிக்க வேண்டிய ஒரு வாய்ப்பு இவர்களுக்கு ஏற்படுகின்றது என்று வைத்துக் கொள்வோம். இந்தவிடத்து வகுப்பில் உள்ளவர்களைக் குழுக்களாக வகுத்து, ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு பொறுப்பை அளிக்கலாம். உபசரித்தலும், உணவு பரிமாறுதலும் ஒரு குழுவின் பொறுப்பாக இருக்கலாம். தங்குவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் இன்னொரு குழுவின் வேலையாக இருக்கலாம். இருபாடசாலை மாணவர்களும் சேர்ந்து கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்குப் பொறுப்பாக ஒரு குழு கடமையாற்றலாம். இப்படியான வகையில் மாணவர் இயங்குவதினால் மாணவர் தமது வாழ்வை வளம்படுத்துவதற்கு உதவக்கூடிய பண்பைப் பெற்றுக் கொள்கின்றனர்.

ஒரு குறிக்கோளை அடைவதற்கு எல்லோரும் சேர்ந்து உழைத்தல், வேண்டியவிடத்துத் தனியாக உழைத்தல் ஆகிய இவற்றிற்குப் பயிற்சி அளித்தல் சிறந்தது. ஏனெனில், தற்போது கற்றவர்கள் என்று கருதப்படும் ஒரு சிலர், ஒரு தலைவரின் கீழ் குழுவாக இயங்க முடியாது கஷ்டப்படுகின்றனர். ஐந்தில் வளையாதது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பதில் வளையுமா? இல்லை. எனவே ஆரம்ப வகுப்புகளில் உள்ள பிள்ளைகளிடத்து இவ்வித பண்புக்குரிய வித்திட்டு அது வளர்வதற்குரிய சூழலையும் ஏற்படுத்தி விட்டால் அவர்கள் சிறந்த பிரசைகளாய் நாட்டின் நிலையான காவலர்களாய் விளங்குவர் என்பதற்கும், வாய்ப்பு ஏற்படின் கூட்டுப் பொறுப்பு வகிக்கும் கபினெற் மந்திரிகளாவார்கள் என்பதற்கும் ஐயமில்லை.

இதுகாறும் கூறியவற்ருல் நாம் அறிந்துகொள்ள வேண்டியது யாது? ஆரம்ப பாடசாலை வகுப்புகளிற் குடியியற் பாடம் நடாத்தப்படாவிடினும் குடியியற் பண்புகளை மாணவர்கள் தம்மிடத்து உடையவராய் வளர்வதற்கேற்ற முறையில் அவர்களுடைய பாடசாலை முயற்சிகளும், அவர்கள் பெறும் அனுபவங்களும், ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளும் அமைதல் வேண்டும் என்பதேயாம்.

---

**உண்மையைக் கடைப்பிடிப்பதென்பது ரோஜாப் பூக்கள் பரப்பிய படுக்கையாயிருந்தால், அதனுல் எவ்வித சிரமமும் இல்லையென்ருல், சுகமாகவும் சுலபமாகவும் இருந்தால் அதில் அந்த உண்மையைக் கடைப்பிடிப்பதில் அழகேயிராது.**

---

# இசையில் ஒன்றிய எருமை

—திருவாட்டி. ல. கணேசு,
முதலாம் வருடம்.

எருமையாவது! இசையில் ஒன்றியதாவது! என்று வியப்படைகின்றீர்களா? ஓரறிவு முதல் ஆறறிவு உடைய உயிர்களிருக இசையில் ஒன்றித் தஞ்செயல் இழந்து நின்ற செய்திகளை, நம் பழந்தமிழ் நூல்கள் எடுத்தியம்புகின்றன. எனவே, எருமை இசையில் ஒன்றியதென்பது பற்றி வியப்பொன்றுமில்லை.

கோடைகாலம். எங்கும் வெயிலின் கொடுமை தாங்கமுடியாது. ஆடு, மாடுகள் தவிக்கின்றன. புல்வெளி சுடுகாடாய்த் தோன்றுகின்றது. இவ்வாறுன கோடைகாலத்தில், ஒருநாள் நண்பகல் புகழேந்தியார் ஒரு தெருக்கோடி வழியே போனுர். அவ்வேளையில் தாகத்தினுல் அலைந்துதிரிந்த எருமைக்கடாஒன்று, ஒரு குளத்தைக் கண்டது. தாகத்தினுலும், பசியினுலும் தவித்த அஃது அக்குளத்தையெட்டிப் பார்த்தது. அதில் குவளைச்செடிகள் ஏராளமாக இருந்தன. இயல்பாகவே எருமைகட்குத் தண்ணீரிற் கிடப்பதில் தனிவிருப்பம். அத்துடன் அதற்குவேண்டிய உணவும் அங்கே கிடைத்துவிட்டால் அதன் மகிழ்ச்சி இருமடங்காகுமன்ருே! நீரையும் பச்சைப் பசேலெனக் கிடந்த குவளைக் கொடியினையும் கண்ட எருமை, ஆனந்த மேலீட்டினுல் குளத்துள் இறங்கியது. அழகுடன் விரிந்துள்ள பூங்கொத்துக்கள் அடங்கிய குவளைக்கொடியை ஆவலுடன் வளைத்து வாய்நிறையக் கௌவியெடுத்தது.

அவ்வேளையில் அம்மலர்களில் தேன் எடுத்துக்கொண்டு சில வண்டுகள் மொய்த்திருந்தன. சாதாரணமாக வயிறு நிறைய உண்ட வண்டிக்காளை, மீண்டும் தீன் தின்னும்போது மூச்சுவிடுவது வழக்கம். அதுவே அங்ஙனமாயின், பசியால் தவித்த எருமையின் மூச்சும், குவளைக்கொடியைத் தின்னும் முயற்சியால் உண்டான அசைவும் எப்படியிருக்குமென்பதை நாம் கற்பனை செய்துபார்க்கலாம். இவற்ருல் மலரில் இருந்த வண்டுகள் 'ஞொய்' என்ற ஒலியுடன் வேகமாகப் பறந்தன. தேனீக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலி கடாவின் செவியிற் படுதலும், அது வாய் உணவை மறந்து, கௌவிய குவளைச்செடியை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் சிலையாய் நின்றுவிட்டது. இவ்வேளையில், "செல்வத் துட் செல்வம் செவிச்செல்வம்", "செவிக்குணவு இல்லாதபோழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்" என்ற வள்ளுவர் வாய்மொழியை இவ்வெளிய எருமையும் உணர்ந்துகொண்டதோ! என எண்ணி வியந்தவர்களாய்ப் புகழேந்தியார் பின், சிறிது தூரம் செல்கின் றோம்.

இக்காட்சி புகழேந்தியாரின் மனத்தை நன்கு ஈர்த்துவிட்டது. இக்காட்சியை அமைத்து, சொல்லோவிய மொன்றைத் தீட்டுவ தற்கு அவர் தக்கதோர் சமயத்தை எதிர்பார்த்திருந்தார்.

அக்கால வழக்குப்படி தமயந்திக்குச் சுயம்வரம் நடக்க ஏற் பாடாகியிருந்தது. ஐம்பத்தாறு நாட்டு மன்னர்களும் அங்கு வீற்றிருந்தனர். இவர்களைத்தவிர நளன் உருவில் தேவர்களும் வந்திருந்தனர். சுயம்வரத்திற்காய நேரம் அண்மியது. தோழி ஒவ்வொருவரையும் அறிமுகஞ்செய்ய ஆயத்தமானாள். அவள் உலகியல் அறிவுந் திறனும் ஒருங்கே அமைந்திருந்தவளாதலால், ஆங்கு வந்திருந்தார் அனைவரின் இயல்புகளையும் நன்குணர்ந்து உள்ளவாறு எடுத்துரைக்கின்றாள். முதலில் தென்னாட்டு மன் னர்களை அறிமுகப்படுத்தியபின் வடநாட்டு அரசர்களை அறிமுகஞ் செய்கின்றாள். அவந்திநாட்டு அரசனை அறிமுகஞ்செய்யும் வேளை வந்தது. அவ்வேளையிற்றான் நம்புலவரும் எருமைக் கடாவின் காட்சியை எமக்குமுன் கொண்டுவந்து நிறுத்துகிறார்.

வண்ணக் குவளை மலர்வெளவி வண்டெடுத்த
பண்ணிற் செவிவைத்துப் பைங்குவளை—உண்ணா
அருங்கடா நிற்கும் அவந்தி நாடாளும்
யிருங்கடா யானை யிவன்.

என்பது அவர் நமக்குக் காட்டும் சொல்லோவியமாகும். இக் காட்சியில், வாயுணவை அனுபவிக்க விரும்பிய எருமைக் கடா வுக்குச் செவியுணவு கிடைத்தது. அதனால் அது வாயுணவை மறந்து அசையாது சித்திரப்பாவையென நிற்கின்றது. அத் துணையின்பமாக இசைச் சுவையை நுகர்கின்றது அவ்வெருமைக் கடா என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயறிவுடைய விலங்கே இசையில் மயங்கியதென்ருல் அந் நாட்டு மக்கள் இசையுடன், மற்றும் வெவ்வேறு கலைகளிலும் எத்துணை மேம்பாடுடையவர்களாய் இருப்பார்கள் என்பதையும், நாட்டு மக்களின் கலையுணர்ச்சி இங்ஙனம் அமையின், நாட்டை ஆளும் மன்னனின் அறிவும், திறமையும், கலையுணர்வும் எத்த கையதாக இருக்குமென்பதையும், ஒன்றன்பின் ஒன்ருக இச்சிறு நிகழ்ச்சியால் எடுத்துக்காட்டும் புகழேந்தியார் திறமையை, நாம் வியக்காமல் இருக்கமுடியாது. இது கவிஞனின் திறமையன்றி வேறென்ன ?

---

சொல்வதனுல் குறைந்து போகும் பொருள்கள் இரண்டு; அவைகளாவன : புண்ணியமும் பாவமுமாகும். நீ செய்த புண்ணியங்களை — தருமங்களை நீயே எடுத்துச் சொல்வதனுல் புண்ணியம் குறையும். ஆதலினுல் நீ செய்த புண்ணியத் தைக் கூருதே; பாவத்தைக் கூறு.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Story Telling as a Speech Device in the Teaching of English as a Second Language

— Miss. Seethathevy Kanapathipillai,
Final Year.

Speaking a language is a skill which has to be acquired and mastered by the learner. In any language, speech precedes reading and writing. The child who speaks well can also read and write well. Therefore it is the duty of the teacher to help her pupils to speak well by adopting various types of speech devices. Picture reading, story telling, dialogue, describing incidents, miming and dramatisation are some of the speech devices which are of a great value to the teacher who attempts to teach her pupils how to speak a language.

Children are fond of stories. They sit and listen to stories without the least sign of fatigue. They are also fond of telling stories. A good and able teacher will never fail to base her methods of teaching on the natural inclination of the children. Stories satisfy the children in many ways. There are different types of stories. Stories about other children, about animals, birds, moving things etc. will create interest. Historical stories may also be used. These may be of more use for the upper classes.

Stories must suit the age, standard and environment of the pupils. The teacher should have in mind the nature of the pupils and their individual differences, while selecting the stories. The structure of the story is very important. The words used should be within the limited vocabulary of the pupils. The sentence pattern should be familiar to the children. Sentences should be simple and short. The incidents narrated should be familiar to the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

children and related to their previous experiences. There should be ample scope for imagination too. Repetition of sentences and phrases should be a special feature in the stories that are used for beginners, as the children are fond of repeating certain things in chorus. Sentences in the form of direct speech help the children to acquire fluency in speech.

The success of the lesson depends mainly on the nature of the story and on the ability of the teacher who narrates it. To be a successful story teller the teacher must have a knowledge of literature suitable for children of various ages. The teacher needs some dramatic talents too. The teacher's facial expression should convey to the pupils the content of the story. The teacher can mime and use gestures wherever necessary. She herself should enjoy the story. Then only the children will enjoy it.

Before presenting the story the class may be suitably arranged. The pupils may sit around the teacher in a semi-circle. The teacher too may be seated while narrating the story. Long introductions should be avoided. The teacher should draw the attention of the pupils, by her modulated voice and expressions. Gestures used sparingly may help the teacher to become a successful story-teller. Gestures used unnecessarily will distract the attention of the pupils. The teacher can draw the attention of the pupils who disturb the class by mentioning the names of those pupils who are up to mischief. For example, if the teacher sees a boy's attention wandering, she can say, "The little boy had a shirt like yours Rama".

When the pupils have acquired or learnt a fair number of words, they will begin to narrate stories. At this stage the teacher should not fail to encourage the pupils to shape their thoughts, into stories.

After the story has been narrated the pupils can be made to repeat certain parts of the story in chorus. When chorus repeti-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tion takes place the teacher should not think that it is the time for her to relax. At this stage the teacher has to be alert and sharp. She should guide the pupils to repeat without mistakes what they have learnt.

Story telling helps to develop the pupils constructive ability. There is ample scope for pupil-teacher relationship when story telling takes place. Stories help the children to clarify their thoughts and they also help to shape their thoughts into language. They help development of imagination, memory, moral and social traits and promote a liking for literature.

"To see a world in a grain of sand and Heaven in a wild flower ; Hold infinity in the palm of you hand and Eternity in an hour".

—*William Blacke*.

* * * *

"O Little Child' Be thou our teacher. Let us walk humbly with thee and with hushed heart—beat listen to thy silences and learn of Freedom as thou knowest it—all unaware but sure".

—*Vida*.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் திருவடி நீழலை எய்திய எம்விடுதி மேற்பார்வையாளர்
திருவாட்டி, கிறேஸ் ஞானரத்தினம்மா மேதர் அவர்கள்.
சேவைக் காலம் : 5-5-49 — 10-8-66.



தோற்றம் : 20-6-11

மறைவு : 10-8-66

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. — வள்ளுவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடியை வீழ்த்திவிட்டுப் பிரிந்ததேனே!

—திருவாட்டி. ந. மனோன்மணி,
விடுகை வருடம்:

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தாறும்
ஆண்டாவணித் திங்கள் பத்தாம்நாளில்
தாயினிலுமினிய எங்கள் தரளமெம்மைத்
தவிக்கவிட்டு விண்ணுலகு சென்றடைந்தார்
தூயமனம் படைத்த எங்கள் அன்னையாரின்
தூலஉடல் தனையேனும் காணுதுள்ள
நோயினால் நலியுமெங்கள் துன்பந்தன்னை
நுவல்வதற்கு மொண்ணுது நோகின்றேமே.

அணைந்த எங்கள் மணிவிளக்கே அன்னையாரே
ஆறாத துயரையெமக் கீந்ததேனே?
கணையை எமன் நும்மீது வீசும்போது
கருத்தினிலே எமையெண்ணிக் கலங்கினீரோ?
துணையகன்று துடிதுடிக்கு மெங்கள் துன்பம்
தூரநிற்கும் நும்செவிக்குக் கேட்டுவிட்டால்
இணையில்லா எழிலமுதே எங்கள் முன்னால்
ஓடிவர மாட்டீரோ உரைப்பீர் நீரே!

நொந்தஉளத் தோடொரு நாள்வந்து, "எந்தன்
நோய்தீர்க்கச் செல்லுகின்றேன் சீக்கிரத்தில்
வந்துவிடு வேனெ"ன்று சொன்ன உந்தன்
வாக்கை மறந்தேகியது நீதியாமோ?
நைந்து நைந்து உருகுகின்றேம் நாங்களுந்தன்
நளினஉடல் தனையேனும் காணுதற்குப்
பிந்தி விட்டோம் பெரும்பாவம் செய்துவிட்டோம்
பேரிடியை வீழ்த்திவிட்டுப் பிரிந்ததேனே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றலர்ந்த கமலமுகம் மறப்போமோ நாம்?
ஆதரவு காட்டுவதை மறப்போமோ நாம்?
முன்றிலிலே உலவுவதை மறப்போமோ நாம்?
முறுவலித்துப் பேசுவதை மறப்போமோ நாம்?
சென்றிடும் போதொவ்வொரு வரிடமும் வந்து
செல்லவிடை பெற்றதனை மறப்போமோ நாம்?
வென்றுவிட்டான் எமனென்னும் பாவியெம்மை
விம்மி விம்மி அழுகின்றோம் வெதும்புகின்றோம்.

'திருவாட்டி மேதர்' எமைப்பிரிந்தார் என்ற
திடுக்கிடச் செய்யும் செய்திகேட்ட காலை
உருகாத நெஞ்சமில்லை யெனிலத் தாயோ
டொருமித்து வாழ்ந்த எங்கள்நிலை என்னுமோ?
அருகாமை அவரிருக்கு மதிட்ட மற்றோம்
அழுதுமாய் வதைத்தவிர வழியேயில்லை
முருகா! எம்மாதாவுக் கருள் பாலித்து
முத்தியின்பங் கொடுத்தருள்வாய் முதல்வன்
மைந்தா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கற்பித்தல் அனுபவங்கள்

— திருவாட்டி. செல்வம் இராசதுரை,
பழைய மாணவி.

பாதை ஓரத்திலே கிடந்த பாறுங்கல்லை உடைத்து உயிருள்ள உருவந் தருகின்றான் சிற்பி. வண்ணச் சுண்ணங் கலந்து கண்ணைக் கவரும் காட்சிகளை வரைகின்றான் ஓவியன். நிலத்தை உழுது, விதையை விதைத்து நமது உயிரைக் காக்க உணவு தருகின்றான் உழவன். ஆற்றை மறித்து மேட்டை உயர்த்தி, திட்டங்கள் வகுத்துக் கட்டிடம் அமைக்கின்றான் பொறியியல் வல்லுநன். இவ்வாறாக ஒவ்வொரு தொழிலைச் செய்வோரும் உயிரற்ற பொருள்களுடன் உறவாடித் தொழிலாற்ற, ஆசிரியனோ உயிருள்ள உள்ளங்களுடன் உறவாடி, உள்ளங்களை உருவாக்கும் மேலான புனிதத் தொழிலைச் செய்கின்றானன்றோ. ஆதலினால் ஆசிரியத் தொழில் மேன்மை பெற்றது என்றால் மிகையாகாது.

இத்தகைய ஒரு புனிதப்பணிக்கு என்னை உருவாக்கிய எனது கலாசாலைக்கு, ''போய் வருகிறேன் அம்மா; நீ காட்டிய வழியில் நின்று பணிபுரியத் தவறேன்'' எனக் கூறிப் புறப்பட்ட என் கண்ணிற்பட்ட இலட்சியங்கள்.

பாடசாலை என்பது பாடசாலைக் கட்டிடமுமன்று; பாடத் திட்டமுமன்று; பாடசாலையிலிருந்து மாணுக்கருக்குப் பாடஞ் சொல்லியும், வழிகாட்டியும், வாழ்க்கையை நடாத்திக் காட்டியும், வரும் ஆசிரியர்களும் அவரிடம் பயிலும் மாணுக்கருமே யாகும்.

ஆசிரியருடைய தகுதி அல்லது நிலைமையும் ஒழுக்கமும் மிக முக்கியமானது. எல்லாத் துறைகளிலும் மாணுக்கனுக்கு ஆசிரியர் வழிகாட்டக் கூடியவராய் இருத்தல் வேண்டும். இதற்கு ஆசிரியருடைய அறிவு வளர்ச்சி மிக முக்கியமானது. என்றும், வற்றாமல் புதிது புதிதாய்த் தெளிந்த பயனுடைய குளிர்ந்த நீரைக் கொண்டு தருகின்ற ஜீவநதிபோல் ஆசிரியர் இருத்தல் வேண்டும். நீர் தேங்கிக் கிடக்கின்ற குட்டை அல்லது குளம் போல் இருக்கக் கூடாது. குளத்தின் நீர் பயனுடையதே. ஆனாலும் தேங்கிக் கிடக்கின்ற காரணமாக அழுக்கடைந்து விடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடும். மாணுக்கர்—இளம்பிள்ளைகள் விரைவாக வளர்ந்து வருப வர்கள். அவர்களுக்கேற்ற வளர்ச்சி ஆசிரியரிடமும் காணப்படல் வேண்டும். ஜீவநதியானது தான் பிறக்குமிடத்தில் புதிது புதிதாய் ஊற்றெடுத்துப் பெருகிவரும் நீரைச் சுமந்து வருகின்றது. தேங்குவதில்லை. சதா ஓடிக் கொண்டிருக்கின்றது ஆகவே, என்றும் புதியது. இத்தகைய புதுமையும், ஓட்டமும் ஆசிரிய ரிடம் காணப்படுதல் வேண்டும்.

அநுபவமே ஓர் ஆசிரியனைப் பூரணனுக்குகின்றது. கல்வித் திறமை, படிப்பித்தல் திறமைகளால் மாத்திரம் ஆசிரியத் தொழிலில் வெற்றியீட்டிவிட முடியாது. இத்திறமைகளுடன் மாணவனை முன்னேற்றும் ஊக்கம்— அவா— வாஞ்சை ஆசிரிய ரிடம் ஏற்படல் வேண்டும். ஆரம்பத்தில் ஓர் ஆசிரியர் முதல், இடை, கடை என முப்பிரிவினரையே வகுப்பில் எதிர்பார்க்கிருர். ஆயின் 'சீனு' என்ருல், மீனே, கருவாடோ (அவன் சிலாமீன் என்று கருதிவிடுகிருன்) என்று கேட்கும் மாணவன் தொடங்கி, படிப்பித்தல் மும்முரமாக நடக்கும் பருவத்தில் கணக்குப் பாடத் திற்குக் கணக்குவிட நினைக்கும் பாலன் ஒருவன், தன்னை ஆசிரிர் கேட்கப் போகிருர் என்ற கட்டத்தில் ''ரீச்சர் எங்கள் வீட்டில் கப்பல் வாழையும் குலை போட்டுவிட்டது'' என்று கதையை மாற்றும் அளவிற்கும் மாணவர் உண்டு என்பதை அறிகிருர். இத்தகைய மாணவனை ஆசிரியர் தமது கவனத்தால் வசப்படுத்து கிருர். இவன் படியான், படியான் என்று பாரம்பரியமாக ஒவ் வொரு வகுப்பிலும் கடைசி வாங்கிற்கு என்று கழித்து வையா மல் வகுப்பின் முன்னிலைக்குக் கொண்டு வருகிருர். அவனும் சரி யான விடையளிக்கக்கூடிய வகையில் இலகுவான விஞக்கள் கொடுத்து விடை பெறுகிருர். தன்னை மாணவர் நிலைக்குத் தாழ்த்தி— தான் எல்லாம் கற்ற பண்டிதன் என்பதை மறந்து ஒரு புதுப்பாஷையைக் கற்கும்போதுள்ள நிலைக்கு வந்து பாடத் தைக் கற்பிக்கிருர். குறைவான மாணவரைக் குறைகூருமல் தட்டி உற்சாகப்படுத்துகிருர். அவன் முன்னேற்றத்தைக் கண்டு 'சான்றேன்', எனக் கேட்ட தாயினும் சாலக்கழிபேருவகை அடைகின்ருர்.

ஆண்டுத் தொடக்கத்தில் ஆனந்தமாகத் தனது வகுப்பைக் கையேற்கின்ருர் ஆசிரியர். அவரது மூச்சு, பந்தபாசம், பற்று யாவும் அவ்வருடம் முழுவதும் தனது வகுப்பு மாணவரிலேயே. அவர்களின் குறையைக் கண்டு குமுறுகிருர். திறமையைக் கண்டு திடங்கொள்கிருர். வருட முடிவிலேயே நிம்மதிப் பெருமூச்சு விடுகிருர். இதை விடுத்து அநேகர், '' ஆசிரியர்களுக்கு என்ன !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடத்தில் மூன்றுமாத லீவு; என்னே சுகம்!'' என்றாற்போல் பேசுவதையும் நாம் அடிக்கடி கேட்கின்றோம். ஆயின், மற்றை யோரைப் போல ஒருநாள் வேலையை அன்றுடன் முடிப்பவரல்லர் ஆசிரியர். விடுமுறையிலும், வீட்டிலும், வீதியிலும், இரவிலும், பகலிலும் தமது மாணவர்மேற் பொறுப்புடையவர் ஆசிரியர் என்பதை அறிவார் யார்? அதிலும் மாணவனின் கல்வித்திறனி லும் ஒழுக்கத்திறனிலேயே முதற்கண் பொறுப்புடையவர் என் பதை நாம் மறந்துவிடக்கூடாது. தன்னுடைய ஆசிரியர் கற்பிப்ப தையே மாணவன் மெய்யென நம்புகிறான்—ஏற்றுக்கொள்ளுகின் றான். யாருக்கும் வீட்டிலே பயப்படாத ஒரு மாணவன் ஆசிரிய ரைக் கண்டவுடன் (பயத்தினாலல்ல) ஒருவித அன்பினால்— மரி யாதையால் பணிகின்றான்— கட்டுப்படுகின்றான். சிறுவயதில் ஒரு மாணவன் ஆசிரியருக்குக் கொடுக்கும் மதிப்பை வேறெவருக் குமே கொடுப்பதில்லை. இது இயற்கை நியதியாக இறைவனால் கொடுக்கப்பட்ட ஒரு குணமாக அமைந்து விடுகிறது இதனா லேயே ''எழுத்தறிவித்தவன் இறைவன்'' என்றனர் போலும்! ஏன்? அந்த இறைவனே நேரில் வந்து சொன்னால் கூட இல்லை. ஆசிரியர் சொன்னதுவே சரி என்று சொல்லக்கூடிய மாணவரை நாம் அநுபவத்தில் காணவில்லையா? இத்தகைய சிறந்த பணியை ஆற்ற நம்மைப் பணித்த ஆண்டவனை வாழ்த்தி நற்பணி புரிவோம்.

> மெய்ப்பொருளை நாடிய வள்ளுவரும், நால்வரும், பன் னிருவரும், அருணகிரிநாதரும், தாயுமானாரும் இன்று அம ரத்வம் பெற்று ஒவ்வொருவர் உள்ளத்திலும் உலவி வரு கின்றனர். உலகுக்கு இன்றும் நின்று அவர்களுடைய ஞான வாக்குகள் வழி காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் பாடமும் கற்பிக்கும் ஆசிரியரும்

— செல்வி வி. சிவபாக்கியம்,
விடுகை வருடம்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" எனக் கூறினர் நம் ஆன்ருேர். மனிதன் தன் வாழ்க்கையைச் சரியாகத் திட்டம்போட்டு வாழ வழிகாட்டுவது இவ்விரு பாடங்களாலும் பெற்ற அறிவேயாகும். மனிதனை மனிதப் பண்புடன் வாழ வழி வகுப்பது இவ்விரு பாடமாயினும், இரண்டினும் சிறப்புடையது எண்பாடமேயாகும். எதையும் ஒரு குறித்த நோக்கத்துடனும் திட்டத்துடனும் செய்யும் ஒரு (எண்ணத்தை) பழக்கத்தை உருவாக்குவதுடன் எப்பிரச்சினை முன்வந்தாலும் அதை ஏற்று ஏன்? எப்படி? எனப்பல வினுக்களைத் தன்னுள் வினவி அப்பிரச்சினைக்கு முடிவு காணக்கூடிய அறிவைக் கொடுப்பது எண் பாடமாகும். மனிதனின் மனவிருளை நீக்கி அறிவென்னும் ஒளி விளக்கு ஏற்றுவதுடன், அவ்வொளி மேலும்மேலும் சுடர்விட்டுப் பிரகாசமாய் எரியச்செய்வது எண்ணுகும். எண்ணை மயிற் பீலிக்கும் அரவின் படத்திலுமுள்ள மணிக்கும் ஒப்பிட்டுள்ளார்களென்ருல் எண்ணின் மதிப்பை எடுத்துரைக்கவும் வேண்டுமா? எண்பாடம் தெய்வத்தன்மைபொருந்திய பாடமென்ருல் மிகையாகாது.

எண்பாடம் இலகுவான ஒருபாடம். ஆனல் பலர் மனதில் இது கடினமான ஒரு பாடம் என்னும் எண்ணம் உள்ளது. சிலர் எண்பாடம் என்ற சொல்லைக் கேட்கவே வெறுக்கின்றனர். "எண்ணுக்கும் எனக்கும் எட்டாப் பொருத்தம்" என்று கூறுவோர் பலரை நாம் கண்டிருக்கிருேம். மனிதனை மனிதனுக்கும் ஒப்பற்ற இப்பாடத்தின்மேல் இத்தகைய பழிகளைச் சுமத்துபவர் பலர். இவ்வண்ணம் பாடத்தின்மேல் பழி சுமத்துவது எய்தவனிருக்க அம்பை நோவது போலாகும். சிலர் எண்பாடம் என்றதும் குதூகலத்துடன் படிக்க ஆயத்தமாக இருப்பர். இத்தகைய ஆயத்த நிலையில் இருக்கும் மாணவரை எண்பாட நேரத்தில் உற்று நோக்குவோமாயின், உண்மையாகவே மாணவரின் முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரண பொலிவுடன் விளங்குவதைக் காணலாம். அத்துடன் தேவையான ஒரு பொருளைத் தேடுபவர்போலத் தம்மைத்தாமே மறந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பர். இத்தகைய கற்றல் நிலையே சிறந்த கற்றல் எனலாம். மாணவரின் இயல் பூக்கங்களாகிய ஆராய்வூக்கம், விடுப்பூக்கம், திரட்டூக்கம், போன்ற ஊக்கங்களின் வளர்ச்சிக்கு உதவும் பாடமாக அமைந்துள்ளது. எண்பாடத்தில் விருப்பமும் ஆர்வமும் உள்ள மாணவர் எப்பொழுதும் சுறுசுறுப்பும் எதையும் நிதானத்துடனும், திட்டத்துடனும் செய்யும் திறமையும், உற்சாகமும் உடையவர்களாகத் திகழ்வது ஆசிரியராகக் கடமை ஆற்றும் நாம் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். இத்தகைய எண்பாடத்தை மாணவரின் விருப்புக்கும் வெறுப்புக்கும் உள்ளாக்குபவர் எண்கற்பிக்கும் ஆசிரியரே.

குழவியானது தன் அறிவு தோன்றுப் பருவத்திலே "மூன்று பென்சில் தா", "அஞ்சு இனிப்புத்தா" என்னும் இவைபோன்ற வேறு வினக்களையும் தன் தாயிடமோ வீட்டிலுள்ள வேறு எவரிடமோ கேட்கின்றது. அச்சமயத்தில் ஐந்து இனிப்புக் கொடுத்தாலும் மகிழ்கிறது, இரண்டு இனிப்புக் கொடுத்தாலும் மகிழ்கின்றது. அக்குழவிக்கு எண்ணின் பெறுமதி தெரியாமையே காரணமாகும். இக்குழவி பாடசாலைக்கு வந்தபின் முக்கண்ணுகிய எண்பாட ஆசிரியராலேயே, எண்ணின் பெறுமதியை அறிதலாகிய ஆரம்ப விளக்கு ஏற்றிவைக்கப்படுகின்றது. ஏற்ற உபகரணங்களைக்கொண்டு கவர்ச்சிகரமான முறையில் ஆசிரியர் கற்பிப்பாரேயானல் ஆரம்பத்தில் ஏற்றிய விளக்கு அணையாமல் மேலும் மேலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் என்பதற்குச் சிறிதளவும் ஐயமில்லை. எனவே, இத்தகைய நிலையை ஏற்படுத்துவதில் ஆரம்ப வகுப்பு ஆசிரியர் பெரும்பங்கு வகிக்கவேண்டும்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" எனக் கூறிப் போந்தார் நம் ஔவை மூதாட்டி. நவ நாகரிக உலகில் எவ்வளவு புதுமை தோன்றினும் நம் மூதாதையர் கூறிப் போந்த ஒவ்வொரு வார்த்தையும் உண்மையின் தத்துவத்தை உணர்த்தா நிற்கின்றது. ஆரம்ப வகுப்பில் மாணவர் தம்வாழ்க்கைக்குத் தேவையான எண் அறிவைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகப் பாடத்திட்டம் அமைந்துள்ளது. மேல் வகுப்புகளில், கீழ் வகுப்புகளில் படித்தவற்றை விரிவாகப் படிப்பதோடு இன்னும் சில புதிய விடயங்களையும் கற்கவேண்டியிருக்கும். இதனாலேயே தம் சிறுர்கள் 5-ம் வகுப்புவரை கற்றல் போதும் என்ற எண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணம் நம் முற்காலப் பெற்றேரிடம் நிலவியது. எனவே, எண் பாடத்தில் விருப்பு வெறுப்பாகிய விதைகளை மாணவர் மனதில் விதைப்பவர் ஆரம்ப வகுப்பாசிரியரேயாவர்.

சாதாரண கல்வி அறிவுபெற்ற மக்கள் தம் வாழ்க்கையில் கலன், போத்தல், யார், அடி, அங்குலம், ரூபா, சதம், இலாபநட்டம், கால அளவு, மணித்தியாலம் என்னும் சொற்களைப் பிரயோகிப் பதை நாம் காண்பதுண்டு. எனவே, மாணவர் தம் பெற்றே ரிடம் அளவைகள், இலங்கை நாணயம், இலாபநட்டம் என்பவற் றைப்பற்றி ஓரளவாவது அறிந்திருப்பர். இவைகளை ஆசிரியர் ஒலிகளைத் துலக்கமாகச் சேர்க்கச்செய்யவும், ஒலிபெருக்கி போலவோ, அல்லது சிறிய பொருட்களையும் பார்த்துப் புரிந்து கொள்ளக்கூடியமுறையில் பெருப்பித்துக் காட்டும் உருப்பொருள் போலவோ ஏற்ற கவர்ச்சிகரமான உபகரணங்களைக் கையாண்டு இலகுவான முறையில் வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி விபர மாக விளக்கவேண்டும்.

ஒருவர் எத்தொழிலை மேற்கொண்டாலும் முதலில் அவருக்கு அத்தொழிலிற் கவர்ச்சி, இயைபு அமைந்தாற்றன் அவர் அத் தொழிலைத் திறமையுடன் செய்யலாம். எண்பாடம் கற்பிக்கும் ஆசிரியர் கையாளும் திறமை, எடுத்துக்கொண்ட விடயத்தை விளக்குமாற்றல், அனுபவம், ஆசிரிய மாணவத்தொடர்பு, விரும் பும் மனப்பான்மை ஆகிய அனைத்தும் பொருந்தியவராக இருக்க வேண்டும். உபகரணங்களைத் தவறுதலாகக் கொண்டுவர மறந்து விட்டால், அதை மாணவர்களுக்குக் காட்டிக்கொள்ளாமல் 'வல்ல வன் கையில் துரும்புமாயுதம்' என்பதுபோல வகுப்பறையில் இருக்கும் உபகரணங்களையே உபயோகித்துப் படிப்பிக்கக்கூடிய திறமை பெற்றிருக்கவேண்டும். எண்பாடத்தில் விருப்பமுடைய மாணவனையும் விருப்பமற்றவனுக்குவது ஆசிரியர் கையாளும் முறைகள். பாடத்தில் மனஞ்சலிக்காது மாணவரின் மனே வளர்ச்சிக்கும், சிந்தனைக்கும் உரியமுறைகளைக் கையாண்டு கற் பித்தால் எண்பாடம் மிகவும் எளிதான பாடமாக அமையும் என் பதற்கையமில்லை.

ஆசிரியர் விளக்கும்போது விரிவாக மாணவர் பின்பற்றக் கூடிய முறையில் விளக்கவேண்டும். மாணவர் விடயத்தைப் பூரணமாக விளங்கிக்கொண்டார்கள் என்று அறிந்தபின் இக் கணக்கை இன்னும் ஒரு வழியிற் செய்யலாம் என்று சுருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையை உபயோகிக்கலாம். இன்றேல் எண்பாடத்தின் முக்கிய இலக்கே அற்றுவிடும். இம்முறைகளை ஆசிரியர் பின் பற்றுவாராயின் எண்பாடம் சிரமப்பட்டுப் படிக்கவேண்டிய ஒரு பாடமாயிராது. இப்பாடம் புவியியல், குடியியல், சரித்திரம், சுகாதாரம், மொழி முதலிய பாடங்களுடன் தொடர்புகொண்டது. சுருங்கக் கூறின் சகல பாடங்கட்கும் எண்பாட அறிவு மிக முக்கியமாகும்.

எண்பாடம் கற்பிக்கும் ஆசிரியர் எடுத்துக்கொண்ட ஒரு விடயத்தை விளக்குவதற்குமுன் பிரச்சினையை மாணவர் முன் வைத்து அவர்கள் சிந்தனையைத் தூண்டவேண்டும். ஒரு தாயானவள் தன் குழந்தையை நடக்கச்செய்வதற்காக ஓர் அழகான பொருளைக்காட்டி விரும்பியபடி அழைத்து குழந்தை வரும்போது எங்கே தடுமாறி விழுகின்றதென்பதை எவ்வளவு கரிசனையோடு பார்த்துக்கொண்டிருப்பாளோ அவ்வளவு கரிசனையோடு ஆசிரியர் மாணவரை அவதானிக்க வேண்டும். பிரச்சினையை விடுவிக்கும் நேரத்தில் தடைஅல்லது சிக்கல் ஏற்படுமாயின், ஆற்றோடையில் ஓடும் நீரைத்தடுக்கும் தடையை எடுத்துவிடுபவர்போலத் தடையை நீக்கவேண்டும். தேவையான இடத்தில் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து, உதாரணமாக வாய்ப்பாடு ஆக்கல் எல்லாம் கவர்ச்சிகரமான முறையில்ஏற்ற உபகரணங்களைக் கொண்டு ஆக்கவேண்டும். இம்முறையைக் கையாள்வதனுல் உண்மையை உணர்தல், கற்றலின் திட்டம், விரைவு, தன்னம்பிக்கை, பாடத்தில் ஆர்வம், கவர்ச்சி, கற்ற விடயம் சிலைபோல், மாணவர் மனதிற் பதித்தல், ஆசிரியரின் நம்பிக்கையும் பற்றும் ஆகிய அனைத்தையும் மாணவரிடையே ஏற்படுத்திவிடும். எனவே, ஆசிரிய பயிற்சி பெறும் நாம் மேலே கூறப்பட்ட பண்புகள் யாவும் நிரம்பப்பட்ட நல்லாசிரியர்களாகத் திகழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கலாசாலை நினைவுகள்

— திருவாட்டி. ப. சிவானந்தம்,
பழைய மாணவி.

ஆலது அடர்த்தியெங்கே அதிபரை நிகர்ப்பதெங்கே
சாலவுங் கல்வியெல்லாஞ் சரளமாய்த் தருவதெங்கே
போலவும் புள்ளினங்கள் பூவையர் பயில்வதெங்கே
மாலவன் நடனமெல்லாம் மரங்களும் உவப்பதெங்கே?

பொன்னலரி பூப்பதெங்கே பொலிவுறநாம் தொடுப்பதெங்கே
கன்னலொடு பல்பழங்கள் கடவுளர்க்குப் படைப்பதெங்கே
இன்னலின்றி வாழ்வதற்கு இறைபதம்நாம் பணிவதெங்கே
தன்னலமும் பிறர்நலமும் சமநோக்காய்க் களிப்பதெங்கே?

துயில்வது விழிப்பதெங்கே துரிதமாய் நடப்பதெங்கே
பயில்வது கொடுப்பதெங்கே பஸ்வண்டி செல்வதெங்கே
மயில்மயி லாகநின்று மண்மிசை குதிப்பதெங்கே
அயில்வது வேண்டாமென்று அழுதழு திருப்பதெங்கே?

தமிழது ஓர்வதெங்கே சட்டமாய் வாழ்வதெங்கே
தொழுவது திளைப்பதெங்கே தொன்மைக ளாய்வதெங்கே
வழுவது தீர்ப்பதெங்கே வண்ணங்கள் செய்வதெங்கே
அமிழ்தது வெறுப்பதெங்கே அதிபர்சொற் கேட்பதெங்கே?

எண்ணிணை யாய்வதெங்கே எழுத்திணை இசைப்பதெங்கே
மண்மிசை ஞானமெல்லாம் மகிழ்ந்துபின் கேட்பதெங்கே
எண்ணிய துறுவதெங்கே எந்திழை நடனமெங்கே
பண்ணிசை மலர்களெல்லாம் பரந்தொன்றாய் மணப்பதெங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், பேராசிரியருடன் முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்பல விழாக்களெங்கே பகிரங்கப் பேச்சதெங்கே
நற்பொரு வாதமெங்கே நவமணி யுரைகளெங்கே
கற்பது நினைப்பதெங்கே கனிவுரை யுவப்பதெங்கே
பற்பல வதனங்கண்டு பயில்வது மெங்கேயெங்கே?

ஆலய ஒலியதெங்கே அரிவையர் ஓட்டமெங்கே
சாலவுங் கல்விகற்றுச் சளைப்பது மெங்கேயெங்கே
காதலன் இன்பங் காணக் கடுகிடும் பெண்களெங்கே
நாலதால் இசைத்துநிற்குஞ் சற்குண மணியுமெங்கே?

பொன்னம்மை யுரையதெங்கே பூம்பந்தர் மகிழ்வதெங்கே
என்னம்மை போல்மடவார் இசையது கேட்பதெங்கே
அன்னம்மை வாழ்வதெங்கே அரிவையர் பிதற்றலெங்கே
தன்னம்மை போலெமக்குத் தயவுரை யளிப்பதெங்கே?

சந்தையிற் கூட்டமென்னச் சணத்தினிற் பிரிவதெங்கே
தந்தையர் போல்வரெல்லாந் தளர்வுரை பகர்வதெங்கே
எந்தையே எந்தையேயென் றேங்கிநாம் அரற்றலெங்கே
விந்தைகள் மறந்துபின்னர் வீடுநாம் செல்வதெங்கே?

> இப்போது சிறியவிஷயங்களைச் செய்; காலகதியில் பெரிய காரியங்கள் தங்களையும் செய்யுமாறு உன்னிடம் கேட்டுக்கொண்டு உன்னை வந்தடையும்.
>
> —பாரசீகப் பழமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னிலை விளங்க உரைப்பீர்!

—செல்வி. வள்ளி மாரிமுத்து,
பழைய மாணவி.

காதற் கன்னியின் கடிதம் கிடைத்தது
பிரித்துப் படித்தேன் பெருமிதம் கொண்டேன்
காதற் கன்னியின் கடிதம் அல்லவா ?
சும்மா விடுமா ? சுறுசுறுப் பளித்தது
என்ன எழுதுவேன் என்றது உள்ளம்
கன்னற் கடிதம் வரைய நினைத்தேன்
சிந்தனை யென்ற சின்னப் பறவை
என்னை விட்டு எங்கோ பறந்தது
இரண்டு ஆண்டுகள் இணைந்து வாழ்ந்து
இன்புற் றிருந்த இனிய நினைவுகள்
சங்கிலித் தொடர்போல் சாலவும் வந்தன
துணைவனாய் இருந்து தொட்டு மகிழ்ந்து
புதுமையாய் வாழப் புதுவழி காண்பேன்
அனுபவம் இல்லா அந்தக் குறையினால்
சிறுசிறு பிழைகள் செய்தும் விடுவேன்
பெற்றோர் என்ற பேர்பெறு அறிஞர்
பெண்ணிற்கு நேரும் சிறுபிழை பொறுக்காது
சினந்து பேசுவர் நொந்து அழுவேன்
கலையின் செல்வியென் காதற் கன்னி
கண்ணீர் பொறுக்காது கனிந்து தேற்றுவள்
அவள் கைச் சுகத்தில் அல்லல் களைவேன்
அவள் முகப் பொலிவில் ஆறுதல் காண்பேன்
அவளுடல் அழகில் என்னை மறப்பேன்
அவள்வாய்ச் சொல்லில் அனைத்தும் காண்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுசால் உரைக்கு அவளோர் இருப்பிடம்
அறவுரை தனக்குக் கண்ணகி நிகர்ப்பாள்
பல்கலை பயின்ற பாவை தன்னிடம்
எல்லை இல்லாக் காதல் பிறந்தது
இன்ப சுகத்தில் ஈராண்டு கழிந்தது
துன்பம் சூழ்ந்தது ஆட்சி யாளரால்
காதலி தன்னைக் கடிதே பிரிந்து
கண்ணீர் சோரக் கவலை பெருக
உயிரைப் பிரிந்த உடலே போல
தலை நகருக்குத் தளர்ந்தே போனேன்
கொடிது கொடிது பிரிவு கொடிது
என்று உணர்ந்து வாடும் நாளில்
அவள்கை வரைந்த அஞ்சல் கண்டு
மகிழ்வாய் அதனை அள்ளி யெடுத்து
கண்ணில் ஒற்றிக் கவலை தீர்ந்தேன்
காதலி பெயரை அறிந்திட வேண்டின்
களிப்புடன் சொல்வேன் விருப்புடன் கேளும்
கலைமலர் என்பது அவள் பெயரம்மா
கண்டால் என்னிலை விளங்க உரைப்பீர்.

*ஒரு தீய நூலைப் போன்ற கொடுமை வாய்ந்த கொள்ளைக்காரன் உலகில் இல்லவேயில்லை.*

**—இத்தாலியப் பழமொழி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்காப்பியரின் இலக்கணக் கொள்கைள்

— கலாநிதி ஆ. சதாசிவம்,
விரிவுரையாளர்,
இலங்கைப் பல்கலைக் கழகம்.

இலக்கணம் என்றால் என்ன என்பதுபற்றிய போராட்டங்கள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலே கிரேக்க நாட்டிலே நடந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. மொழிவழக்கை யடிப்படையாக வைத்தே இலக்கணவிதிகள் இயற்றப்படுகின்றனவாதலின் மாறும் வழக்கிற்கேற்ப இலக்கணமும் மாறும் என்ற கொள்கையையுடையவர் ஒருசாரார். ஒரு பொருளுக்கும் அதனைச் சுட்டும் சொல்லுக்கும் அடிப்படையான ஒப்புமையுணர்வு உண்டு ஆகையால், இலக்கணம் என்றுமே மாறாதது என்ற கொள்கையையுடையவர் மறுசாரார். நூறுவருடங்கள் வரையும் நடந்த சொற்போரின்பின் இலக்கணம் என்றுமே மாறாதது என்ற கொள்கையையுடைய பிளாட்டோ ஞானியின் கொள்கையினரே வெற்றி பெற்றனர். இக்கொள்கையை ஆதாரமாகக் கொண்டு தியோனிசியசு திராசு (Dionysius Thrax) என்பவர் கி. மு. முதலாம் நூற்றாண்டில் கிரேக்க மொழியின் முதலாவது இலக்கணநூலை எழுதினர்.

இலக்கணம் என்றுமே மாறாதது என்ற கொள்கை பதினெட்டாம் நூற்றாண்டுவரையும் மேல்நாடுகளில் எதுவித ஆட்சேபமும் இன்றி ஏற்கப்பட்டு வந்தது. இலக்கணம் என்றால் என்ன என்ற சொற்போர் மறுபடியும் ஆங்கில நாட்டிலே தோன்றியது. இலக்கணவாசிரியர் பலர் இச்சொற்போரிற் கலந்து கொண்டனர். இவற்றின் பயனாகப் பல கொள்கைகள் வலியுறுத்தப்பட்டன.

1. திருந்திய பண்படுத்தப்பட்ட மொழிக்கு வகுக்கப்படும் இலக்கணம் அம்மொழியின் தனிச்சிறப்பியல்புகளை அடிப்படையாகக்கொண்டு நியதியான விதிகளைக்கொண்டு வகுக்

1. Robert C. Poley—Teaching English Grammar, New York 1957. P. 7.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படலாம். பல நூற்ருண்டுகளாக இலக்கிய வழக்குப் பெற்ற பண்பட்ட மொழிகளின் தனிச்சிறப்புக்கள் இவை யென்பது மொழியின் மாருப் பண்புகளிலிருந்து தெரிய வரும். எனவே, அப்பண்புகளை ஆதாரமாகக்கொண்டு அம் மொழிக்கு வகுக்கப்படும் இலக்கணம் என்றும் மாருத பண்புடையது.

2. பேச்சு வழக்கிலிருந்து மாறி இலக்கிய வழக்குப் பெறும் மொழிகள் வளர்நிலையில் உள்ளன ஆகையால், அம்மொழி களுக்கு வகுக்கப்படும் இலக்கணங்கள் உலகியல் வழக்கை ஆதாரமாகக்கொண்டு வகுக்கப்படுதல்வேண்டும். மக்கள் தம் பேச்சைத் திருத்தியமைப்பதற்கு இலக்கண விதிகள் வழிகாட்டவேண்டும். மொழியின் தனிச் சிறப்புக்கள் புலப் படும்வரையும் நியதியான இலக்கண விதிகள் வகுக்கக் கூடாது. இவர்களின் கருத்துப்படி திருந்தாத மொழிக்கு வகுக்கப்படும் இலக்கணவிதிகள் வருங்கால மக்கள் திருந் திய மொழி பேசுவதற்கு வழிகாட்டவேண்டும்.

3. மக்களின் தேவையின் நிமித்தம் மக்களால் மொழி பண் படுத்தப்படுகின்றது. ஒரு மொழியைப் பேசும் மக்களுட் சிறுபான்மையினரே மொழியின் தத்துவத்தையும், அதன் தனிச் சிறப்பையும் அறிந்தவர்கள். தமது சுயதேவையின் காரணமாய்க் கட்டுப்பாடற்றவகையில் மொழியைப் பேசுப வர்களே பெரும்பான்மையினர். மக்களால் பண்படுத்தப்படும் மொழிகள் நேராக வளர்ந்து செல்வதற்கும் தனிப்பட்ட சிறப்பியல்புகளைக்கொண்டு விளங்குவதற்கும் காரணராய் விளங்குபவர்கள் மொழியின் தத்துவத்தையும் இயல்பினை யும் அறிந்த சிறுபான்மையினரே. எனவே, இவர்களின் பேச்சுமொழியையும் இலக்கியமொழியையும் ஆதாரமாகக் கொண்டு வகுக்கப்படும் இலக்கணங்கள் மொழியின் வளர்ச் சியை நேரியவழியில் நிறுத்த உதவும்.

4. ஒரு மொழியின் வளர்ச்சியையும் போக்கையும் நிர்ணயிப்ப தில் இலக்கணவாசிரியன் மிகுந்த கருத்துக் கொள்ளுகிருன். திருந்தாத மொழிக்கு இலக்கணம் வகுக்கும் ஆசிரியன் பேச்சுவழக்கை முக்கிய ஆதாரமாகக்கொள்ளும்போது தன் கொள்கைகளை ஆணித்தரமாக வலியுறுத்தி மொழியின் வளர்ச்சிக்கு இயைந்த வழிவகுக்கின்ருன். மக்களின் மொழி உபயோகத்துள் எது சரியானது, எது பிழையானது என்ப தைத் தானே நிர்ணயித்து, அபிப்பிராயம் கூறுகின்ருன். அவ்வண்ணம் கூறும்போது கற்ருேர் வழக்கையும் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழித் தத்துவ, தருக்க அறிவையும் பயன்படுத்துகிருன். இதற்கு மாருகத் திருந்திய மொழிக்கு இலக்கணம் வகுக்கும் ஆசிரியன் மொழியின் தனிச் சிறப்புக்களையும் அதன் மாருத பண்புகளையும் அடிப்படையாகவைத்து இலக்கணம் வகுக்கின்ருன். இவ்வித இலக்கணங்கள் என்றும் மாறுவதில்லை; மாறுமாயின் மொழி மாறும். ஆனுல் காலத்துக்குக் காலம் மொழி வளர்ச்சியில் உண்டாகும் மாற்றங்கள் மொழியைச் சுற்றியுள்ள அழுக்குகளாகவே கருதப்படுகின்றன. இவ்வழுக்குகளைத் துடைத்துத் தூய்மை செய்வோர் காலத்துக்குக் காலம் தோன்றும் இலக்கணவாசிரியர்.

இன்று இருபதாம் நூற்ருண்டில் மொழியின் இலக்கணம் பற்றிய இருவித கொள்கைகள் உலக அரங்கில் நடமாடுகின்றன. உலகமொழி விற்பன்னருட் பெரும்பான்மையோர் மொழியின் இலக்கணம் என்னும்போது பேச்சு மொழியின் இலக்கணத்தையே கருதுகின்றனர். ஏனெனில், இவர்களின் ஆராய்ச்சிகளெல்லாம் இதுவரையும் திருந்தாத மொழிகளைப்பற்றியனவாகவே உள்ளன. பேச்சு வழக்கில் உள்ள மொழிகள் எழுத்து வழக்கில் உள்ள மொழிகளைக் காட்டிலும் பன்மடங்கு கூடியவை. எனவே, பேச்சுமொழிகள் இறந்துபடாமற் பாதுகாக்கப்படவேண்டுமென்ற அவாவினையுடைய மொழிவிற்பன்னர் ஒலிப்பதிவுக் கருவிகளின் மூலம் அவற்றைப் பதிவுசெய்து பேச்சுமொழியில் நிலவும் அத்துணை வேறுபாடுகளையும் அறியமுடிகிறது. பேச்சு மொழி காலத்துக்குக் காலம், இடத்துக்கிடம் வேறுபடுகின்றமையின் பேச்சு மொழியை மாத்திரம் ஆதாரமாக வைத்து இலக்கணம் வகுக்க முற்படுவது வீண் நேரச்செலவும் பயனற்றதுமாகு மெனப் பழுத்த அனுபவம் வாய்ந்த மொழிவிற்பன்னர் கருதுகின்றனர். எழுத்து வழக்கில் இல்லாத மொழிகளின் இலக்கணம் பேச்சுவழக்கை மாத்திரமே அடிப்படையாகக்கொண்டு வகுக்கப்படலாம். எனவே, திருந்தாத மொழிகளிற் கருத்தைச் செலுத்தும் மொழி விற்பன்னர் பேச்சுவழக்கு இலக்கணத்தை மாத்திரமே குறிப்பிட முடிகிறது.

இதற்கு மாருக, நீண்டகால வரலாறும் இலக்கிய வழக்கும் பெற்ற பண்படுத்தப்பட்ட மொழிகளின் இயல்புகளை ஆராய்ந்து இலக்கணம் வகுப்போர் அவ்வம் மொழிகளின் இலக்கிய வழக்குகளைத் துறைபோகக் கற்றவரே. தங் காலம்வரையும் எழுந்த இலக்கிய வழக்குகளையும் அவ்வழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களோடு பெரிதும் முரண்படாத கற்றோரது பேச்சு வழக்கு களையும் ஆதாரமாகக்கொண்டே இலக்கணங்களை வகுக்கின் றனர். கற்றோரின் பேச்சுவழக்கில் உள்ள புத்தம் புதிய சொற்களெல்லாம் இலக்கியவழக்குச் சொற்களின் இயல்பு களோடு முரண்படாதவிடத்து இலக்கணவாசிரியர் தழுவிக் கொள்வர். முரண்படும் சொற்களுள் முக்கியமானவை மொழியின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை எனக் காணு மிடத்து, இலக்கணவிதிக்கு விலக்காகக்கொண்டு அவற்றை ஏற்றுக்கொள்வர். இவ்வித கட்டுப்பாடான முறையில் மொழியின் இலக்கணம் வகுக்கப்படும்போதுதான் மொழி யின் வளர்ச்சிக்குத் தேவையற்ற பலசொற்கள் தள்ளிவிடப் படுகின்றன. மொழியும் பலகிளை மொழிகளாகப் பிரிந்து வளராது, நேரிய வழியிற் சென்று வளர ஆற்றலுள்ள இலக் கணவாசிரியரால் வழிப்படுத்தப்படுகின்றது. இருபதாம் நூற்றுண்டுத் தமிழ்மொழியின் போக்கை ஆய்ந்துணர்ந்த சூரியநாராயண சாத்திரியார் (பரிதி மாற் கலைஞன்) கூறும் பின்வரும் கூற்றுக்கள் கருத்திற் கொள்ளத்தக்கன:

'தமிழ் மொழியிலோ யார் என்ன செய்தபோதிலும் கேள்வி முறையில்லை. அவரவர் தத்தமக்குத் தோன்றிய வாறும், வாய்க்கு வந்தன வந்தவாறும் எழுதுகின்றனர். இவ்வாறு செல்லவிடுதலுங் கேடே. தமிழிலக்கணமுடையார் முற்புகுந்து இதனைச் சிறிது அடக்கியாளலும்வேண்டும்'. 1.

இலக்கணத்தின் தன்மை, அதன் தேவைபற்றிய உலகக் கருத்துக்களை இதுவரையுங் கண்டோம். இனித் தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியனுர் கொண்டுள்ள கருத் துக்களை ஆராய்வாம்.

பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு இலக்கிய வழக் குப் பெற்ற பண்படுத்தப்பட்ட தமிழ் மொழிக்கே தொல் காப்பியர் இலக்கணம் வகுத்தார். அவர் காலத்துத் தமிழ் ஒரு திருந்திய மொழி. அகம், புறம் என்ற இருவகை இலக்கியங்களுள் மக்கள் வாழ்க்கை அனைத்தையுந் தழுவிக் கொண்ட மொழி. 'என்மனுர் புலவர்', 'என்ப', 'மொழிப' முதலிய சொல்லாட்சிகளை ஆசிரியர் எடுத்தாளுதற்கேற்ப இலக்கண நூல்கள் பல வகுக்கப்பட்டிருந்த மொழி. இத் தகைய பண்பினையுடைய தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியனுர் தம் நூலுக்கு ஆதாரமாகக்

1. தமிழ் மொழியின் வரலாறு பக். 103





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவை வழக்கும் செய்யுளுமாகும்: 'வழக்குஞ் செய்யுளுமாயிரு முதலின்' என்ருர் பனம்பாரனாரும்.

> **வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே**
> **நிகழ்ச்சி யவர்கட்டாக லான**
>
> (மரபியல் 93)

என்ற சூத்திரத்தில் ஆசிரியர் 'வழக்கு' என்ற சொல்லாற் றழுவிக் கொண்டது உயர்ந்தோராகிய கல்விமான்களினதும், புலவர்களினதும் பேச்சு வழக்கையே. 'செய்யுள்' என்ற சொல்லாற்றழுவிக் கொண்டது தொல்காப்பியனார் காலம் வரையும் தமிழ்மொழியில் யாக்கப்பட்ட இலக்கியங்களையாகும். எனவே, தொல்காப்பியர் தங்காலம் வரையும் தமிழில் யாக்கப்பட்ட இலக்கியங்களின் வழக்கையும், அவ்விலக்கிய வழக்கோடு என்றும் ஒரு நெறிப்பட்டுச் செல்வதாகிய கற்ருேர் பேச்சையும் ஆதாரமாகக் கொண்டு இலக்கணம் வகுத்தார்.

> **'எள்ளினுள் எண்ணெய் எடுப்பதுபோல**
> **இலக்கியத்தி னின்று எடுபடும் இலக்கணம்'**

என்ற ஆன்ருேர் கூற்றுக்கேற்ப, இலக்கிய வழக்கை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இலக்கண நூல் எழலாமா? எனப் பலர் கேட்கலாம். ஆம். எழலாம். அப்படியாயின் மொழியின் மாறுபடாப் பண்புக்கு வகுக்கப்பட்ட இலக்கணமாக அது முடியும். ஏட்டு வழக்கில் ஏறிய சொற்கள் மாற்றத்தைப் பெருவாகலின், அவ்வழக்குக்கு மாத்திரம் வகுக்கப்படும் இலக்கணம் 'இறந்த' அல்லது 'பேச்சு வழக்கற்ற' மொழிக்கு வகுக்கப்பட்ட இலக்கணமாக முடியும். ஆசிரியர் தொல்காப்பியனார் இவ்வுண்மையை நன்குணர்ந்திருந்தனர். வளர்ந்து வருவது எதுவும் மாற்றத்தைப் பெறும் என்னும் நியதியை உணர்ந்த மகாமுனிவர், இலக்கிய வழக்கோடு உலக வழக்கையும் தழுவிக் கொண்டார். 'இலக்கணம் அதன் ஆசிரியன் வாழ்ந்த காலத்திற்கும் அதற்கு முன்பும் உள்ள மொழி வழக்கு அனைத்தையும் வகைப்படுத்திக் கூற முயல்வதாகும்' என வையாபுரிப்பிள்ளையவர்கள் கூறுவதுபோல ஆசிரியர் தொல்காப்பியனார் தங் காலத்து வழக்குக்கு மாத்திரம் இலக்கணஞ் செய்தாரல்லர்; தங்காலம் வரையும் வந்த பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளின் தமிழ் மொழி வழக்குக்கே அவர் இலக்கணஞ் செய்தார். இக் கருத்தை அறியாதவர் சிலர், தொல்காப்பியர் தங்கால வழக்குக்கே இலக்கணம் எழுதினர்; அது இக்காலத்திற்குப் பொருந்தாது என அழிவழக்காடுவது அவர்களது அறியாமையைக் காட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி என்பது ஒரு காலத்துக்கு மாத்திரம் உரியதன்று. எனவே, மொழிக்கு வகுக்கப்படும் இலக்கணமும் ஒரு காலத்திற்கு மாத்திரம் பொருந்துவதன்று. இக்கருத்தினாலேயே, என்றும் மாறிச் செல்வதாகிய பொதுமக்களின் பேச்சுவழக்கை ஆதார மாகவைத்து இலக்கணவாசிரியர் இலக்கணம் எழுதுவதில்லை. கி. மு. முதலாம் நூற்றாண்டில் முதலாவது கிரேக்கமொழி இலக் கணத்தை வகுத்த 'தியோனியசு திராசு' மக்களின் பேச்சுவழக்கை ஆதாரமாகக் கொள்ளாது புலவரதும் கதாசிரியரதும் மொழி வழக்கையே ஆதாரமாகக் கொண்டார். 1 ஆனால் தொல்காப்பி யரோ உலக வழக்கைத் தழுவியே இலக்கணம் எழுதவேண்டு மென்ற கோட்பாடுடையவர். இக்கோட்பாட்டுக் கிணங்கவே கற்றோரின் பேச்சுவழக்கை உலக வழக்குக்கு எடுத்துக்காட்டா கக் கொண்டார். இலக்கணம் என்றுமே மாறாது என்ற கொள் கையைத் தீவிரமாகக் கைக்கொண்ட கிரேக்க இலக்கணவாசிரி யர் இலக்கிய வழக்குக்கு மாத்திரம் இலக்கணம் எழுதுவது மூலம் பேச்சு மொழியை அசட்டை செய்தனர். இக்காரணத் தால் கிரேக்கம் உலக வழக்கிறக்க, அதனினின்றும் பல கிளை மொழிகள் இன்று கிளைத்து வளருகின்றன. எனவே, இலக்கிய வழக்கைமாத்திரம் அடிப்படையாக வைத்து இலக்கணம் எழுது வது வளரும் மொழிக்குப் பொருந்தாதென்பது இனிது விளங்கும்.

இனி, உலகவழக்கையும் ஆதாரமாகக்கொண்டே இலக்கணம் வகுக்கப்படவேண்டுமென்ற கோட்பாடுடைய ஆசிரியர் தொல் காப்பியனார், ஏன் கல்லாதார் பேச்சைப் புறக்கணித்து விட்டுக் கற்றோர் பேச்சை மாத்திரம் தழுவிக்கொண்டார்? இதற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

1. கற்றோரின் பேச்சுநடையில் இலக்கியவழக்குச் சொற் கள் பல பயின்றுவரும். கல்லாதாரின் பேச்சுநடையில் குறிச் சிச் சொற்களும் பிராந்தியச் சொற்களும் பெரிதும் விரவிவரும். ஆசிரியர் தொல்காப்பியனார் 'வடவேங்கடம் தென்குமரி யாயி டைத் தமிழ்கூறும் நல்லுலகத்து' வழக்கைப் பொதுவாகவும், 'செந்தமிழியற்கை'யைச் சிறப்பாகவும் தழுவிக் கொண்டா ராகையாற், செந்தமிழ் வழக்குக்கு முரணான குறிச்சிச் சொற் களைத் தழுவ விரும்பவில்லை. ஆசிரியர் ஒரு பொதுமொழிக்கே இலக்கணம் வகுக்கிறார். பொதுமொழி என்றால் என்ன? பெரும் பான்மை மக்களால் விளங்கிக் கொள்ளப்படும் தகையது பொது

1. Harold B. Allen — Readings in Applied English Linguistics. 1958. P. 43.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி. செந்தமிழே அப்பொதுமொழி. தமிழ்கூறும் நல்லுலகத்தின் எல்லாப் பாகங்களிலும் வாழும் கற்றோரால் ஒருங்கே கைக்கொள்ளப்படும் மொழியே செந்தமிழாகிய பொதுமொழி. செந்தமிழைப் பெரும்பான்மையோரின் மொழியெனக் கூறுதல் பொருந்துமோ எனிற் பொருந்தும். குறிச்சி மொழிகள் தனிப்பட்ட குழுவினராலேயே விளங்கிக் கொள்ளக் கூடியவை. வைத்தியக் கல்லூரி மாணவர் கூட்டத்திலே பேசப்படும் தமிழ் மொழி ஒரு குறிச்சிமொழி. அதுபோலப் பல்கலைக்கழக மாணவர் தம்மிடையே பேசிக்கொள்ளும் மொழி ஒரு குறிச்சி மொழியே. ஒவ்வொரு குறிச்சிமொழியும் மக்கள் பண்பாட்டிற்கு ஏற்ப வேறுபடும். இக்குறிச்சி மொழிகளில் அவ்வச் சூழலில் வாழ்வோரால் ஆக்கிக் கொள்ளப்பட்ட புதுப்புதுச் சொற்கள் பல. இவை குறுகிய கால வாழ்வுடையன; அன்றியும், சூழலைத் தெரியாத புறத்தாரால் இலகுவில் விளங்கிக் கொள்ளப்பட முடியாதவை. தமிழ்மொழியில் ஆயிரக்கணக்கான குறிச்சி மொழிகளோ, குழுமொழிகளோ, பிராந்திய மொழிகளோ உண்டு. தனிப்பட்ட இக்குறிச்சி மொழி பேசுவோரைக் காட்டிலும் தமிழ்கூறும் நல்லுலகத்தில் வாழும் செந்தமிழ் பேசுவோரின் தொகை மிகக் கூடவாம். எனவே, செந்தமிழாகிய பொதுமொழிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியனார் இலக்கிய வழக்கோடு கற்றோரின் பேச்சு வழக்கைத் தழுவிக்கொண்டார்.

2. பொதுமக்களின் பேச்சுமொழியில் வழங்கிவரும் புதுப் புதுச் சொற்கள் மிகத்தொகையாகும். அதுபோன்று வழக்கு வீழும் சொற்களும் மிகத் தொகையாகும். மொழியின் வளர்ச்சியும் தேய்வும் பிராந்தியங்களிலும் குறிச்சிகளிலும் மிக விரைவில் நடைபெறும். பண்படுத்தப்பட்ட செந்தமிழ் மொழியில் மாற்றம் சிறிது சிறிதாகவே நிகழும்: ஏனெனில், அஃது இலக்கிய மொழியாகையாற் புலவர்களால் ஆக்கிக் கொள்ளப்படும் மொழியாகும். இலக்கியம், காலதேச எல்லையைக் கடந்து வாழும் அமரத்துவம் பெற்ற ஒரு பொருளாகையின், அஃது எழுதப்படும் மொழி மக்கள் சமுதாயத்திலே படிமுறைக் கிரமமாக வளர்ந்துவரும் மொழியாக இருக்கவேண்டுமென்பது நியதி. இந்நியதி கற்றோரின் பேச்சுவழக்கிலேயே உண்டு. அவர்கள், தம் பேச்சு மொழியிலேயே இலக்கியம் எழுதுகின்றனர். அத்தகைய இலக்கியத்திலே வழக்குக்கு வரும் புதுப்புதுச்சொற்கள் மிகச்சிலவாகவே இருக்கவேண்டுமென்பது ஆங்கிலப் புலவோரின் கருத்துமாகும். 'உறொபேட்டு இலிண்டு' என்னும் ஆங்கிலப் புலவர் பின்வருமாறு கூறுகிறார்: 'ஆங்கிலநாடு முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிற் பேச்சுமொழி எக்காலத்திலாவது நல்ல இலக்கியத்தின் மொழிநடையாக ஆகமாட்டாது.... பெருந்தொகையான பேச்சு வழக்குச் சொற்கள் ஒரேகாலத்தில் இலக்கியத்தில் புகுவதை ஒரு கல்விமான் மிக வெறுக்கிறான். ஏனெனில், தன் காலம் வரையும் வளர்ந்துவந்த மொழியின் வழக்குச் சொற்கள் பல வாழ்வு இழப்பதற்குப் புதுச்சொற்களின் வருகை காரணமாகிறது. எனவே, இலக்கிய வழக்குப்பெறும் எந்தப் புதுச்சொல்லோ சொற்றொடரோ மொழிப் பண்பிற்கேற்க இலக்கியத்தில் மரபுநிலை பெறும் வரையும் எதிர்க்கப்படவேண்டும்'1

3. தமிழ்மொழி பண்படுத்தப்பட்ட மொழியாகையாற் பேச்சு வழக்கினின்றும் வேறுபட்ட இலக்கியவழக்குத் தொல்காப்பியர் காலத்திற்கு மிக முன்பே நடைமுறையிலிருந்து வந்தது. பண்படுத்தப்பட்ட இலக்கிய மொழியை முற்றிலுங் கைவிட்டுப் பண்படுத்தப்படாப் பேச்சுமொழியை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் எழுதினால் முன் எழுந்த இலக்கியங்கள் காலப்போக்கிற் பொருள் விளங்காதனவாகிவிடும். அன்றியும் பேச்சுமொழியென்பதொன்றில்லை. ஏனெனில், அஃது எவராலும் ஆக்கப்பட்டதன்று. செந்தமிழாகிய இலக்கிய மொழியோ புலவர்களால் ஆக்கப்படுவது; காலத்துக்குக் காலம் மொழிபெறும் மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பெறுவது; இன்ன தன்மை யுடையது என்ற வரைவிலக்கணத்தை அவ்வக்காலப் புலவர்களின் கோட்பாடுகளுக்கேற்பப் பெறுவது. எனவே, இன்னது என்னும் வரைவிலக்கணம் கூறமுடியாத கல்லாதாரின் குழுமொழிகளை நீக்கிவிட்டு வரைவிலக்கணம் கூறக் கூடியதான கற்றோர் பேச்சாகிய செந்தமிழையே தொல்காப்பியனார் தம் நூலுக்கு ஆதாரமாகப் பெற்றுக்கொண்டார். 'குழுவின் வந்த குறிநிலை வழக்குச் சான்றோர் வழக்கின் கண்ணும், அவர் செய்யுட் கண்ணும் வாராமையின் அமைக்கப் படாவாகலானும் ... அவர்க்கது கருத்தன்றென்பது[2]' எனச் சேனாவரையர் கூறுவது ஈண்டுக் கருத்திற் கொள்ளத் தக்கது.

1. Colloquial speech, however, can never be the standard of good writing, especially in a country like England ... Even in his use of words, the man of letters recents the continuous flood of new speech that threatens to swamp the language that has been handed down to him. All new words or phrases should be challenged until they can show certificates of naturalization.
RobertLynd—Books and writers, London 1952
page 249—250.

2. தொல்காப்பியம்—சேனாவரையம் கணேசையர் பதிப்பு: 1938. பக். 35.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றோரின் பேச்சுவழக்கும், இலக்கிய வழக்குமாகிய செந் தமிழ் வழக்கை ஆதாரமாகக் கொண்டு இலக்கணம் வகுத்த தொல்காப்பியனுர், காலத்துக்குக் காலம் மாறிமாறி வளர்ந்து வரும் மொழியின் மாருப் பண்புகளை அடிப்படையாக வைத்து இலக்கணம் யாத்தார். திருந்திய மொழிகளில் இம் மாருப் பண்பு தெற்றெனப் புலப்படும் என்பதை முன்னர்க் கண்டோம். தமிழ்மொழியின் தனிச்சிறப்பியல்புகள்எல்லாந் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே மொழியில் நிலேத்து விட்டன. இப்பண்பு களை அடிப்படையாக வைத்து இலக்கணம் அமைக்கும்போது மொழியானது வழக்கிலிருக்கும் வரையும் மாருத நிலைபேற் றுத் தன்மையை அது பெற்றுவிடுகிறது. இலக்கணம் என் றும் திரிபில்லாத தென்பதை 'மரபுநிலை திரியிற் பிறிது பிறி தாகும்'– (மரபியல் 92) என்ற சூத்திரமூலம் தொல்காப்பிய ஞர் விளக்கியுள்ளார். 'இலக்கணம் என்பது திரிபில்லாத தாகலின் —'1 எனப் பேராசிரியர் கூறுவதும் இலக்கணத் தின் மாருவியல்பைப் புலப்படுத்தும்

தமிழ்மொழிக்குத் தனிச்சிறப்பினைக் கொடுக்கும் இரண்டு பண்புகள் தொல்காப்பியனுரால் விளக்கப்பட்டுள்ளன. அவை யாவன: (1) மெய்ம்மயக்கம். (2) புணரியல்.

தமிழ் மொழியின் தனிப் பண்பினைக் காட்டும் ஒலிக்கண வியல்புகளைத் தொல்காப்பியர் ஆராய்ந்தது போன்று வேறு மொழிகளில் எவரும் ஆராய்ந்திலர். உதாரணமாக, க ச த ப ஆகிய நான்கு எழுத்துக்களுள் ஏதாவ தொன்றன் பின் அதே எழுத்தே மொழியிடையில் வரும் என அவர் சூத்திரஞ் செய்தார். அக்கா, பச்சை, கத்தி, அப்பன் ஆதியன இவற் றிற்கு உதாரணங்கள். சக்தி, யுக்தி முதலியன பிறமொழிச் சொற்கள் என நாம் கண்டறியக் கூடியதாயிருப்பது தமிழின் தனிப் பண்பினை யறிந்ததனுலே யாகும். திருந்திய மொழிக ளில் இத் தனிப் பண்புகள் நிலைத்து விடும் என்னும் கொள்கைக் கேற்ப ஆக்கப்பட்ட மொழியிலக்கணம் மாருதது இயற்கையே.

ஒரு மொழிக்கு ஒரேயோர் இலக்கணம் உண்டு: அஃது என்றும் மாருதது என்னும் தொல்காப்பிய இலக்கணக் கொள் கையை இன்று சிலர் ஆட்சேபிக்க முன்வருகின்றனர். மொழி களின் தத்துவ இயல்பினையும் வரலாற்றினையும் அறியாதோரே அழிவழக்காடுவர்.

---

1. தொல்காப்பியம்—பொருளதிகாரம்—பேராசிரியம் சூத். 165 உரை பக். 743. (கணேசையர் பதிப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிசொல் இல்லைக் காலத்துப் படினே — (எச்சவியல் 56)

என்ற சூத்திரத்தால் புதிய சொற்களைத் தழுவிக்கொண்டார் தொல்காப்பியர்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே — (நன்னூல் 462)

என்ற சூத்திரத்தாற் புதுமையை ஏற்றுக் கொண்டார் நன்னூலார். வளர்ந்து வரும் மொழி எதுவும் காலப்போக்கில் தேவையற்ற பழையனவற்றை நீக்கித் தேவையான புதியனவற்றைப் பெற்றுக் கொள்வது இயற்கையே. மொழிபெறும் மாற்றங்களுள் எவ்வெவற்றை இலக்கணவாசிரியன் தழுவிக் கொள்கிறான் என்பதே ஈண்டைய ஆராய்ச்சி. நன்னூலார் இதற்கு விடையையும் தருகின்றார்.

முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழி நூலாகும் (பொதுப்பாயிரம் 7)

ஒரு மொழிக்கு ஒரேயோர் இலக்கணமே உண்டு. அதுவே முதநூலிற் கூறப்படுவது. முதனூலை விடக் காலத்துக்குக் காலம் வழிநூல்கள் எழலாம். இவ்வழிநூல்கள் பின்வரும் மூன்றையும் தழுவிக்கொள்ள வேண்டுமென்பர் நன்னூலார்.

1. முன்னோர் நூலின் முடிபும் இந்நூலின் முடிபும் ஒத்திருக்க வேண்டும்;
2. வழிநூலாசிரியன் தான் வேண்டும் விகற்பங்களைக் கூறலாம்;
3. அவன் இயற்றும் வழிநூல் 'அழியா மரபினதாய்' இருக்க வேண்டும்;

இவற்றிலிருந்து தெரியவருவது யாதெனிற் புதுப்புதுச் சொற்கள் மொழியில் ஏறும்போது அவற்றைத் தழுவிக் கொள்ளும் இலக்கண வாசிரியன் மொழியின் முதனூல் வகுத்த முடிபுகளுக்கு இணங்காத சொற்களையும் தொடர்களையும் கடிந்து விடுதல் வேண்டும். முக்கியமெனத் தான் நுழைக்க விரும்பும் மாற்றங்களை நுழைக்கலாம். அம் மாற்றங்களும் பண்டுதொட்டு வரும் அழியா இலக்கண மரபின் வழியவாய் அமைய வேண்டும். அப்போதுதான் மொழி வேற்றுமொழியாய் நிலை திரியாது வாழும். இலக்கணக் கட்டுப்பாடற்ற மொழிகளெல்லாம் சிதைந்து பலவாகவும், தமிழ்மொழி கன்னியாக வாழ்வதற்குக் காரணம் பேச்சையும் எழுத்தையும் அடிப்படையாக வகுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்காப்பிய விலக்கணம் தான் சிதைதலின்றி இன்றுவரையும் போற்றப்பட்டு வருதலாலேயாம். தமிழ்மொழியின் இலக்கண நூல் தொல்காப்பிய மொன்றே. காலத்துக்குக்காலம் தமிழ் மொழியில் உண்டாகும் விகற்பங்கள் தொல்காப்பிய உரை யாசிரியர்களாற் சூத்திரங்களின் இலேசுகளினுலும் புறநடை களினுலுந் தழுவிக் கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முறை நீடித்து வரும்வரையும் தமிழ்மொழி பக்கஞ் சரிந்து வளர்த லின்றி நேரே உயர வளரும்.

> கற்பதும் கேட்பதும் இறைவனை யடைவதற்கே. கல்வி யின் பயன் அதுவே. பட்டம் பெறுவதற்கென்றும், சிறந்த அறிவாளி என்று பிறர் மெச்சுவதற்கென்றும், கூட்டத்தி னின்று மொழிக்கு மொழி தித்திக்க இனிமையாகவும் சது ரப் பாடாகவும் பேசுவதற்கென்றும் படியாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள் இனி வருமோ?

( 33-ம் பக்கத் தொடர்ச்சி )

ஆடித்திங்கள் பத்தொன்பதாம் நாள் கிறீத்தவதினம் வெகு விமரிசையாக நடைபெறுகின்றது. எல்லோரும் கிறீஸ்தவமாணவர்கள் தாமோ என்று வந்தவர்கள் எண்ணும்வகையில் இந்து மாணவர்களும் கலந்துகொள்ளுகின்றார்கள். இது நம்மிடையே வளர்ந்துவரும் சமரச மனப்பான்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகின்றது.

ஆடித்திங்கள் இருபத்திரண்டாம்நாள். இந்த நாளை ஆவலுடன் எதிர்பாராத உயிரினங்களே நங்கழகத்தில் இல்லையெனலாம். ஒருமாதத்துக்கு முன்பு தொடங்கியே தடல்புடலான ஏற்பாடுகள், இரகசியத் திட்டங்கள்; ஒருவர் முகத்தைநோக்க மற்றவருக்கு நேரமில்லாத நிலை; இவையெல்லாம் எதற்கென்று யோசிக்கின்றீர்களா? மெய்வல்லுனர்ப் போட்டியிலே தமது திறமையைக் காட்டிவிடத்தான் இவ்வளவு திட்டங்களும். ஒரே மண்டபத்தில் மூன்று திருமணங்களே நடத்துவதுபோல என் கற்பனை ஓடுகிறது. முதலிரவிலே வெறுந்தரையாக இருந்த இடத்திலே, அலங்கரிக்கப்பட்ட மூன்று மணவிழாப் பந்தர்கள் பொழுது விடிந்ததும் தோன்றுகின்றன. மஞ்சள், பச்சை, சிவப்பு நிறங்களால் அழகு செய்யப்பட்டு அலங்கரிக்கப்படுகின்றன. சுபவேளையும் வந்துவிடுகிறது.

ஒலிபெருக்கியினால் முடுக்கிவிடப்பட்ட மங்கையர்கூட்டம் மைதானத்தை நோக்கிப் படைஎடுக்கிறது. சற்றுமுன்பு வரிந்து கட்டிய சேலைகளுடனும், அள்ளிமுடிந்த கொண்டைகளுடனும் தோன்றிய மங்கையரா இவர்கள்! ஒலிபெருக்கியில் இசைஒலி எழுகின்றது; அணிவகுத்து நிற்கும் படைவீரரென மூன்று இல்ல மாணவிகளும் அணிவகுத்து நிற்கின்றனர். எங்கும் ஒரே ஆரவார ஒலி; தொடர்ந்து பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இடைவேளை நேரம்; இல்லங்களின் அலங்கரிப்பைப் பார்வையிட நடுவாளர்கள் வருகின்றார்கள். இதற்கிடையில் சதங்கை குலுங்க, பின்னணி இசையுடன் பாட்டொலியும்கூடி எழுகின்றது.

"காசில் பொற்சிலம் பின்சிக ரத்தை
கால்பறித் தேயெ றிந்திட வந்த
மாசில் தென்கோண மாமலையைச் சூழும்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்ந்த மங்கையர் அனே
என்ன ஆச்சரியம்! வீரமணிகளாகத் காட்சிதருகின்றனர். முன்
வரும் நடன மகளிராகவல்லவா சிந்தையராய்க்
பிருந்த போட்டி மனப்பான்மையை மறந்த அதனையடுத்து, 'லீவர்
கூடிக் கும்மியடிக்கின்றனர் கோதையர். தமது பற்பசை வியாபாரத்
பிரதர்ஸ்' நிலையத்தார் திடீரெனத் விழாக்காண வந்தவர்
தைத் தொடங்குகின்றார்கள். போட்டி நடைபெறுகின்றது.
கள் நடுவில் அமோகமாக வியாபாரம் அசைந்துவரு
அடுத்த இல்லத்திலிருந்து தென்னைமரமொன்று உலகின் அதி
கின்ற விநோதக் காட்சியைக் காண்கின்றனர். அதிசயமென்று
சயங்களையெல்லாம் வென்ற எத்தனையாவது 'எலிஸபெத்' மகா
திகைப்பில் நான் பிரமித்து நிற்கையில், நன்கு அலங்கரிக்
ராணியார் மைதானத்தில் தோன்றுகிறார். "வாழ்க
கப்பட்ட குதிரையில், போர்வீரர் மூவர் பக்கலில்வர, ஆங்கில நாட்டுக்
நம் அரசி" யென்ற வாழ்த்தொலி முழங்க, அவர் இவர்ந்து
கொடியை அசைத்து மாணவர் ஆரவாரிக்க மறந்துவிடுகின்றனர்.
வருங்காட்சியிலே பார்வையாளர் தம்மை ஏற்றமும் ஒரு பயிற்
"ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் குதிரை
சியா"? இது எல்லோர் உள்ளத்திலும் எழும் ஒரு கேள்விக்குறி.

தவணை இறுதிக்கட்டம் அண்மிக் கொண்டிருக்கின்றது. வழமைபோல் பரீட்சைகளை எழுதுகின்றோம். எம்மைப் பேரிடி ஒன்று காத்திருக்கின்றது. எமது விடுதி மேற்பார்வையாளரின் மறைவுதான் அது. பதினெட்டு ஆண்டுகளாக எத்தனையோ குழந்தைகளுக்குத் தாயாக விளங்கிய முழுமதி மறைந்துவிட்டதென அறிந்து கவலைக்கடலுள் ஆழ்கின்றோம். "நேற்றிருந்தான் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைய உலகின்கண் வாழ்கின்றோம்" என்ற உண்மையை உணரினும், பிரிவுத் துயர் என்னும் பிடியினின்றும் விடுபடுதல் இலகுவானதன்றோ! எனும் உண்மையை ஓர்கின்றோம்.

கழக விடுமுறைநாள். கோட்டைப் புகையிரத நிலையமாக மாறுகின்றது நங்கழகம். மோட்டார் வாகனங்கள் ஒன்றின் பின்னொன்றாக வருவதும் போவதுமாகக் காட்சியளிக்கின்றன. நாடோறும் மனிதமுகங்களைக் காணும் இக்கழகக் கட்டிடங்கள் எங்ஙனம் தனிமையைச் சகித்துக்கொள்ளப் போகின்றனவோ! ஆவணித்திங்கள் இருபத்திமூன்றும் நாள். இக்கழகப் பழைய மாணவிகளுக்கு ஒரு நல்ல திருநாள். தம்மைச் சிறந்த ஆசிரியர்களாக உருவாக்கிய கழக அன்னையை நாடிவருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே".

என்பதை இவர்களன்பு உண்மைப்படுத்துகின்றது. உணவூட்ட வரும் தாய்க்குருவியைக்கண்டு சிறகடித்து மகிழ்வுகொள்ளும் சேய்க்குருவிகள் போலல்லவா சிறகடித்துப் பறக்கின்றார்கள் இந் தச் சிந்தனைச் சிற்பிகள். வெளிநாட்டுக் கொடியுடன் தூதுவர் ஒருவரின் மோட்டார் வாகனமொன்று கலாசாலை முன்றிலில் காட்சிகொடுக்கின்றது. பட்டுப்பூச்சிகளெனப் பறந்து வரும் பாவையர், கழகவாயிலிலிருந்து மண்டபத்திற்குச் செல்லும் வீதிவரை இருமருங்கும் அணிவகுத்து நிற்கின்றனர். வண்டியில் வந்திருப்பவர் வேறு யாருமல்லர். இலங்கையிலிருக்கும் இந்தியத் தூதுவர் டாக்டர் பீம்சென் சச்சார் அவர்களே. தன் பாரியாருடன் வருகை புரிந்த இவர் 'ஆசிரியப்பணி' பற்றி அழகாக எடுத்துக் கூறுகின்றார். கடமையைச் சீருறச்செய்வதிலே உரிமையைப் பெறலாம் என்று கூறிய இவர் தன் கடமையைச் சீருறச் செய்யும்பொருட்டு ஏகிவிடுகின்றார். விருந்துண்டு நாமும் வீடு திரும்புகின்றோம்.

எங்கெங்கு சென்று தமிழ்ச் சுவைபெற முடியுமோ அங்கெல்லாம் செல்ல நாம் என்றும் பின்னிற்பதில்லை. தமிழ்ச் சுவை மிக்க இலங்கை கம்பன் கழகத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட கம்பராமாயண வகுப்புக்களிலும், விழாவிலும் நம் நங்கையர் பலர் கலந்து, அவர்கள் நடாத்தும் கழகத்தை ஊக்குகின்றனர். எங்கழகத்தில் கொண்டாடிவரும் இத்துணை நிகழ்ச்சிகளுக்கு மிடையே உலகில் என்றும் விளங்கும் ஒளிவிளக்காம் காந்தியண்ணலின் சர்வோதய, ஜயந்தி தினங்களையும் கொண்டாடத் தவறினோமல்ல. தைத்திங்கள் முப்பத்தோராம் நாள் சர்வோதய தினத்தையும், ஐப்பசித்திங்கள் இரண்டாம் திகதி ஜயந்தி விழாவையும் கொண்டாடுகின்றோம். காந்தி வழிநின்று வாழும் உயரிய நோக்குடைய பெரியார் பலரை நாம் அழைக்கின்றோம். அவர்கள் நம் அறியாமையிருளை அகற்றி ஏகுகின்றனர்.

நவ நவமான நவராத்திரி விழாவைக் கொண்டாடுவதற்கு நாரியர்கள் நல்ல திட்டங்களைத் தீட்டுகின்றனர். முப்போதும் சிறப்புடன் பூசனை நடைபெறுகின்றது. கலைஞரளிக்கும் முத்தமிழ் விருந்தில் திளைத்து நம்மை மறக்கின்றோம். மின் விசிறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களெனச் சுழல்கின்றார்கள் நம் இரண்டாம்வருட மாணவிகள். ஆம், அவர்களின் இறுதிப் பரீட்சையும் தொடங்குகின்றது. எல்லோரும் ஏதோ விரதம் அனுட்டிப்பவர்கள்போல் காணப்படுகின்றனர். பரீட்சையின் இறுதிநாள். இவர்கள் முகத்தில் கவலைக்குறி காணப்படுவதேன்?

கலாசாலையைவிட்டு வெளியேறும் நாள் நெருங்குகின்றது. இரவு விருந்து வைபவத்தில் எல்லோரும் ஒன்றுகலந்து களிப்புறுகின்றோம். பிரியாவிடைபெற்றுச் செல்லும் நேரம் நெருங்குகின்றது. எல்லோர் முகங்களும் இருண்டு பொலிவிழந்து காணப்படுகின்றது. இந்நிலையில் பிரிந்தும் பிரியாதும் வீடு செல்கின்றோம்.

எங்கோ பிறந்தோம்; எங்கோ வளர்ந்தோம். சிலகாலம் ஒன்றாய் வாழ்ந்தோம். காலம்வந்ததும் கடிதிற் பிரிந்தோம். பிரிந்தவர் பிரிந்தவர்தான். "வாழ்க்கை என்பது சந்தையிற் கூட்டம்" என்ற முதியோர் கூற்றைக் கருத்திற்கொண்டு அமைதிகாண இன்றும் என்றும் துடிக்கின்றோம்.

சொல்வதனால் குறைந்துபோகும் பொருள்கள் இரண்டு; அவைகளாவன: புண்ணியமும் பாவமுமாகும். நீ செய்த புண்ணியங்களை — தருமங்களை நீயே எடுத்துச் சொல்வதனால் புண்ணியம் குறையும். நீ செய்த பாவங்களை நீயே பிறரிடம் கூறுவதனால் பாவம் குறையும். ஆதலினால் நீ செய்த புண்ணியத்தைக் கூறாதே; பாவத்தைக் கூறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கு இவ்வருடத்திலே

## முதலாம் பருவம்

7- 1-66 பாவையர் முப்பத்து மூவரைப் பண்புடைய பயிற்சி ஆசிரியர்களாகச் சமூகத்திற்கு அளித்துவிட்டு, அதே நோக்குடன் முதலாம் வருட மாணவிகள் ஐம்பத்து ஐவரை எங்கழகம் வரவேற்கிறது. புதிய பாராளு மன்றம் தன் பொறுப்பை ஏற்கிறது.

9- 1-66 புதிய சகோதரிகளுக்கு அன்புடன் தேநீர் விருந்தளிக் கின்றோம். அவர்கள் தம்மை அறிமுகஞ் செய் கின்றனர்.

29- 1-66 இன்று சர்வோதய தினத்தையொட்டிக் காந்திமகான் வாழ்வைப் பற்றிய பொதறிவுப் போட்டியையும், கட்டுரைப் போட்டியையுந் தமிழ் மன்றத்தினர் நடாத்துகின்றனர்.

30- 1-66 சர்வோதய தினத்தை நினைவு கூர்ந்து வழிபாட்டில் ஈடுபடுகின்றோம்.

2- 2-66 தமிழ் மன்றம் இல்லங்கட்கிடையே கதைப் போட் டியை நடாத்துகின்றது. எமது தமிழ்ப் பேராசிரியை செல்வி. க. சந்தனநங்கை, கொழும்புத்துறை அரசி னர் ஆசிரியர் கழக அதிபர் திருவாளர் சி. விசுவ லிங்கம், எங்கழகப் பழைய மாணவி திருவாட்டி. யோ. சபாரத்தினம் என்போர் நடுவாளர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

4- 2-66 எங்கழக எழுதுவினைஞர் செல்வி. சரவணமுத்து மல்லிகை அவர்களின் திருமணத்திற் கலந்து மகிழ் கின்றோம்.

5- 2-66 ஆசிரிய பயிற்சிக் கழகங்களின் வித்தியாதிபதி திரு. டி. ஜி. குலதுங்க அவர்களும், பலாலி ஆசிரியர் கழக அதிபர் திரு. சி. கந்தசாமி அவர்களும் கழகத்தைப் பார்வையிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7\. 2-66 ஆசிரிய கழகங்களின் விசாரணைக் குழுவினர், கழக அபிவிருத்தி சம்பந்தமாகவும், தற்போது இயங்கும் முறையைப் பற்றியும் அதிபர், விரிவுரையாளர், ஆசிரிய மாணவிகள் ஆகியோரைக் கொண்ட குழு வினருடன் கலந்தாலோசிக்கின்றனர்.

8- 2-66 இரண்டாம் வருட ஆசிரிய மாணவிகளின் படிப்பித் தற் பயிற்சி தொடங்குகின்றது.

18- 2-66 மகா சிவராத்திரித் தினத்தைக் கழிக்கத் திருக்கே தீஸ்வரத்திற்கு யாத்திரை செல்கின்றோம்.

8- 3-66 தமிழ் மன்றத்தினர் இல்லங்கட்கிடையே நாடகப் போட்டியை நடாத்துகின்றனர். கலையரசு சொர்ண லிங்கம், திருவாளர் இ. மகாதேவன், திருவாட்டி. இராசா என்போர் நடுவாளர்களாக வீற்றிருக் கின்றனர்.

10- 3-66 இராதா இல்லத்திற்கும், அருணா இல்லத்திற்கு மிடையே வலைப்பந்தாட்டப் போட்டி நடைபெறு கின்றது.

14- 3-66 அருணா இல்லமும், சுவர்ணா இல்லமும் வலைப்பந் தாட்டப் போட்டியில் ஈடுபடுகின்றன.

16- 3-66 முதலாம் பருவத்தேர்வில் ஈடுபடுகின்றோம்.

18- 3-66 தமிழ்மன்றம் பேச்சுப் போட்டியை நடாத்துகின்றது. வித்துவான் சி. குமாரசுவாமி, திருவாளர் சுப்பிர மணியம், திருவாளர் சண்முகநாதன் என்போர் நடு வாளராக வீற்றுளர். வித்துவான் திரு. சி. குமார சுவாமி அவர்கள் 'உங்களுக்கு' என்ற தலைப்பிற் சொற்பொழிவாற்றுகிறார்.

24- 3-66 திரு. 'ரிப்பிட்ச்', திரு. மாணிக்கவாசகர், திரு. சிவபாதசுந்தரம் என்போர் 'ஆங்கிலம்' கற்பிக்கும் முறைபற்றிச் சொற்பொழிவாற்றுகின்றனர்.

25- 3-66 நாமும், பேராசிரியரும் கைதடி குருடர், செவிடர் பாடசாலை மாணவர்களுக்கு அன்பளிப்பும், சிற்றுண்டி யும் வழங்கி மகிழ்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26- 3-66 ‘போளவிளானு’ அரசினர் ஆசிரிய கல்லூரிப் பேரா சிரியர்களையும், மாணவிகளையும் அன்புடன் வரவேற் கின்றோம்.

27- 3-66 இன்று காலை நல்லூர்க் கந்தன் அருள் பெற்று எமது நீண்ட கல்விச் செலவைத் தொடங்குகின்றோம்.

31- 3-66 முதலாம் பருவ இறுதிநாள்.

## இரண்டாம் பருவம்

6- 5-66 இரண்டாம் பருவந் தொடங்குகின்றது.

1- 6-66 தமிழ்மன்றம் இல்லங்கட்கிடையே செய்யுள் அபிநயப் போட்டியை நடாத்துகின்றது. திருவாளர். கனக செந்திநாதன், திருமதி. வேதவல்லி கந்தையா, திருவாளர். செ. சிவப்பிரகாசம் என்பவர்கள் நடு வாளர்களாக உள்ளனர். திரு. கனக செந்திநாதன் அவர்கள் ‘குழந்தைக் கவிதைகள்’ என்னும் விடயம் பற்றிச் சொற்பெருக்காற்றுகிறார்.

3- 6-66 திருவள்ளுவர் தினத்தைக் கொண்டாடுகின்றோம்.

9- 6-66 சமூகக் கலைமன்றச் சார்பில் உடுப்பிட்டிப் பாராளு மன்ற உறுப்பினர், திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் ‘நீதிமன்றங்களும் அவை இயங்கும் முறைகளும்’ என் னும் தலைப்பில் உரையாற்றுகின்றார்.

15- 1-66 இல்லங்கட்கிடையே இசைப்போட்டி நிகழ்கின்றது.

23- 6-66 மாணிக்கவாசகர் குருபூசையைக் கொண்டாடுகின் றோம்.

24- 6-69 தமிழுக்கு விழா எடுத்து மகிழ்கின்றோம். பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. ஆ. சதாசிவம் அவர்களும், கலையரசு சொர்ணலிங்கம் அவர்களும் நிகழ்ச்சிகளுக் குத் தலைமை தாங்குகின்றனர்.

3- 7-66 இரண்டாம் வருட ஆசிரியமாணவிகளின் படிப்பித்தற் பயிற்சி தொடங்குகின்றது.

19- 7-66 கிறிஸ்தவ தினத்தைக் கொண்டாடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22- 7-66 மெய்வல்லுனர்ப் போட்டி நிகழ்கின்றது. யாழ்ப் பாணப்பகுதி அரசாங்க அதிபர் திரு. வேணன் அபய சேகராவும், அவர்தம் பாரியாரும் பிரதம விருந் தினராகக் கலந்து பரிசில்கள் வழங்கி எம்மை மகிழ் விக்கின்றனர்.

4- 8-66 இரண்டாம் பருவத் தேர்வு.

11- 8-66 விடுதி மேற்பார்வையாளர் திருவாட்டி. ஜி. ஜி. மேதர் அவர்களின் மறைவை அறிந்து ஆற்றெணுத் துயரில் அமிழ்ந்துகின்றேம். இந்நிலையிலும் 'மியூசியஸ்' மகளிர் ஆசிரிய பயிற்சிக் கழக அதிபர், பேராசிரியர் கள், ஆசிரிய மாணவிகள் என்போரை அன்புடன் வரவேற்கின்றேம்.

13- 8-66 இரண்டாம் பருவ இறுதிநாள்.

25- 8-66 பழைய மாணவர்சங்கம் கொண்டாடப்படுகின்றது. இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திருவாளர். பீம்சென் சச்சாரும், அவர்தம் பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்து எம்மை மகிழ்விக்கின்றனர். திருவாளர். பீம்சென் சச்சார் 'ஆசிரியப்பணி' எனும் விடயம்பற்றி உரை நிகழ்த்துகிறர்.

## மூன்றும் பருவம்

8- 9-66 மூன்றும் பருவம் ஆரம்பமாகிறது.

11- 9-66 மறைந்த விடுதி மேற்பார்வையாளர் திருவாட்டி. ஜி. ஜி. மேதர் அவர்களின் ஆன்ம சாந்திக்காக அன்னாரின் உருவப்படத்தை வைத்து அதிபரும், பேராசிரியர்களும், மாணவிகளும் கூடி வழிபாடு செய் கின்றனர்.

12- 9-66 'உயன்வத்தை' ஆசிரியர் கழகப் பேராசிரியர்களும், மாணவிகளும் வருகை புரிகின்றனர். நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாவை எம்முடன் கண்டு களிக் கின்றனர்.

2- 10-66 அண்ணல் காந்தியின் பிறந்ததினம் கொண்டாடப்படு கின்றது. அகில இலங்கைக் காந்தீய சேவா சங்கத் தலைவர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி ஆசிரியர் திருவாளர். சிவபாதசுந்தரம் அவர்களும் உரை நிகழ்த்துகின்றனர்.

7- 10-66 இரண்டாம் வருட ஆசிரிய மாணவிகளின் படிப்பித்தற்றேர்வு தொடங்குகின்றது.

14-10-66 நவராத்திரி விழா கோலாகலமாக ஆரம்பமாகிறது.

15-11-66 இரண்டாம் வருட ஆசிரிய மாணவிகள் இறுதித் தேர்வில் ஈடுபடுகின்றனர்.

18-11-66 முதலாம் வருட மாணவிகள் மூன்றும் பருவத் தேர்வில் ஈடுபடுகின்றனர்.

29-11-66 கழக இரவு விருந்துபசாரம் நடைபெறுகிறது.

30-11-66 கிறிஸ்துபெருமானின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறோம்.

1- 12-66 மூன்றும் பருவ இறுதிநாள். இரண்டாம் வருட மாணவிகள் முப்பத்துமூவர் பயிற்சி பெற்று வெளியேறுகின்றனர்.

> மனிதன் பொறுப்பாளனுயிருந்து நிகழ்த்திய தீங்குகளுள் மன்பதையின் ஒரு பகுதியாகிய பெண்ணினத்தைச் சிறுமைப்படுத்தியதும் ஒன்று. அது நம்மை இழிவுபடுத்துவது, நடுக்குறுத்துவது, விலங்காக்குவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கழக ஆளுமன்றம்

**ஆள்பதி**

திருவாட்டி. இ. ஆனந்தக்குமாரசாமி (அதிபர்)

**முதலமைச்சர்**

செல்வி. யோகசவுந்தரி கணபதிப்பிள்ளை

**கல்வியமைச்சர்**

செல்வி. செல்வமணி செல்லையா

**போக்குவரத்தமைச்சர்**

திருவாட்டி. செல்வரத்தினம் கணேசலிங்கம்

**சுகாதாரவமைச்சர்**

திருவாட்டி. விமலாதேவி கைலாயநாதன்

**கலாச்சாரவமைச்சர்**

செல்வி. சீதாதேவி கணபதிப்பிள்ளை

**உணவமைச்சர்கள்**

*1*–ந் தவணை திருவாட்டி. பரஞ்சோதியம்மா வேலுப்பிள்ளை

*2*–ந் தவணை செல்வி. மேரி பேர்ணண்டோ

*3*–ந் தவணை செல்வி. சிவயோகம் சின்னையா

எமது நாட்டின் நிர்வாகத்திற்குப் பாராளுமன்றம் எத்துணை அவசியமென அமைக்கப்பட்டதோ, அதே போன்று எமது கல்விக் கழகமுந் திறம்பட நிர்வகிக்கப்படல் வேண்டும் என்ற பெரு நோக்குடன் எமது ஆளுமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இம் மன்றம் கருமமே கண்ணுகச் செயலாற்றி வருவதையிட்டு நாம் பெருமைப்படுகிறேம். பல சமுகத்தவர் ஒன்றுகூடி வாழும் நம்மிடையிற் பற்பல பிரச்சினைகள் எழுவது இயல்பு. அந்நேரத்தில் முன்னின்று அப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு இம்மன்றத்தைச் சார்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு மைதானத்தில்...



பிரதம விருந்தினரான அரசாங்க அதிபர்
திரு: வேணன் அபயசேகரா அவர்கள் கழகக் கொடியை
ஏற்றி வைக்கின்றார்.



" மணி கொணர்ந்து மணிவிளக்கேற்றிடும் மாவலிகங்கை
நாடெங்கள் நாடே " எனக் கும்மியடித்துக்
குதூகலிக்கும் கோதையர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெய்வல்லுனர்ப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வந்த
அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா அவர்களையும்,
பாரியாரையும் அதிபர் வரவேற்று உரையாற்றுகின்றார்.




எஸ். ஆர். பற்பொடி விளம்பரகாரருக்கும், தெங்குப் பொருள்
விளம்பரகாரருக்குமிடையே, எலிசபெத் மகாராணியார்
எங்ஙனம் காட்சி தருகின்றாரோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கழக நிகழ்ச்சிகள், விழாக்கள் போன்ற விடயங்களில் இம்மன்றம் முக்கிய ஒத்துழைப்பை அளித்துள்ளது. எம்மன்ற ஆள்பதியும், அதிபருமான திருவாட்டி. இ. ஆனந்தக்குமாரசாமி அவர்கள் எமக்கு உற்சாகமளித்து ஆக்கமும், ஊக்கமும் தந்து வருவதே எம்மன்றம் திறம்படச் செயல்புரியக் காரணமாகும்.

மேலும், மேலும் இம்மன்றம் ஓங்கி வளர்ந்து செயலாற்ற வேண்டுமென்று இறைவனை வாழ்த்துகிறேன்.

செல்வி. க. யோகசவுந்தரி,
(தலைமை மாணவி).

---

# தமிழ் மன்றம்

காப்பாளர் : செல்வி. க. சௌந்தரம் சந்தனநங்கை
தலைவர் : திருவாட்டி. சி. மங்கையர்க்கரசி
செயலாளர் : செல்வி. க. யோகேஸ்வரி
பொருளாளர் : செல்வி. க. தேவரத்தினம்

பண்டைத் தமிழ் மன்னரின் தமிழன்பும் ஆதரவும், புலமை மிகு புலவர்களின் குன்றாஊக்கமும், சீர்மைமிகு செந்தமிழைச் சங்கத்தில் சிறந்தோங்க வழிவகுத்தன. கங்கை வேணியானை நிற்க விட்டு ஆசனத்தமர்ந்திருந்த வண்ணமே, சங்கப்புலவர்கள் வாது செய்ய முடிந்ததென்ருல், இத்தமிழின் பெருமை சொல்லுந் தரத்ததோ! இத்தகு செம்மைசால் மொழியைச் செழித்தோங்கச் செய்வதே தமிழ்மன்ற உறுப்பினரின் உயரிய குறிக்கோளாகும்.

இற்றைக்கு இருபது ஆண்டுகட்கு முன்னர் இக்கழகத்தில் நிறுவப்பட்ட நந்தமிழ் மன்றம், இன்றுவரை எம்மைப் பல துறைகளிலும் திறமைபெற்று விளங்க உறுதுணை புரிகிறது. சொல்லளவோடமையாது, செயற்கருஞ் செயல்களைச் செய்யும் இம்மன்றம் காலத்துக்குக்காலம், பல்லான்ற கேள்விப் பயனுணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரையும், முத்தமிழ் வன்மையுடையோரையும் வரவழைத்து, அவர்தம் வாயிலாக அறிவையும், உணர்வையும் பெருக்கிக் கொள்ளச் சிறந்த வாய்ப்பளிக்கின்றது. விவாதம், செய்யுள், கதை, நாடகம், அபிநயம் என்பவற்றை இல்லங்கட்கிடையே போட்டியாக நடாத்துவதில் இம்மன்றம் தலைசிறந்து விளங் கியதை எண்ணி இறும்பூதெய்துகின்றும். இன்னும் ஆண்டு தோறும் தமிழன்னைக்கு விழா எடுப்பதுடன், காந்திமகான், வள்ளுவனர், பாரதியார் போன்ற பெரியார்கள் கவிஞர்களின் நினைவு தினங்களையும், விழாக்களையும் கொண்டாடும் பெருமையை யும் உடையது எம்மன்றம்.

இம்மன்றத்தைத் தோற்றுவித்ததோடு, அதன் வளர்ச்சியிற் கண்ணுங்கருத்து முடையவராய் அயராதுழைத்து எம்மைப் பல துறைகளிலும் மேலோங்க வழிநடத்தும் பேராசிரியை, செல்வி. க. சௌந்தரம் சந்தனநங்கை அவர்கட்கு இம்மன்றம் நன்றியும், கடப்பாடும் உடைத்து. அவர்தம் தொண்டு மேலும் நிலைபெற வேண்க இறைவனை வழுத்துகின்றும். எமது மன்ற நிகழ்ச்சிகளில் ஆர்வமும், ஊக்கமும் காட்டி உதவி கோரிய இடத்து உவந்தளிக் கும் மதிப்புமிக்க அதிபர் அவர்கட்கும், ஏனைய பேராசிரியர் அவர் கட்கும், மன்ற நிகழ்ச்சிகளிற் பங்குகொண்டு சிறப்பிக்கும் உறுப் பினர்க்கும் எம்மன்றத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

இக்கழகத்திற் பயிற்சி பெற்று வெளியேறும் ஆசிரியமணிகள் தாம் சென்றவிடங்களிற் பெறும் புகழுரைகட்கு இம்மன்றம் ஆற் றுஞ் சிறந்த பணி முதலிடந்தந்துதவுமென்பதிற் பெருமை அடை கின்றும்.

இம்மன்றம் மென்மேலும் உயர்வடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேம்.

க. யோகேஸ்வரி,
(மன்றச் செயலாளர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கலை மன்றம்

காப்பாளர் : திருவாட்டி. பொ. பத்துமநாதன்
தலைவர் : ,, வி. கைலாயநாதன்
உபதலைவர் : ,, கு. பொன்னுத்துரை

மனிதனின் சிறப்பாற்றலைத் தூண்டி, அவனின் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவன நுண்கலைகளே. உலகின்கண் நுண்கலைகட்கு அடிமைப்படாத உள்ளம் எதுவுமில்லை எனலாம். அகங்காரம் நிறைந்த உள்ளத்தை அன்பால் அடிமைப்படுத்துவது தெய்வீகக் கலைகளேயாகும். இவற்றை மனிதர் உள்ளத்தில் வித்திடுவது கல்விக்கூடங்களே.

தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித்தீஞ் சுவைகலந்து, உளங்கலந்து, உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பன நுண்கலைகளேயாகும். இத்தகைய கலைகளை எவ்வகையில் வளர்க்கலாமோ அவ்வகையில் எம்மைச் செலுத்தி எமது ஆர்வத்தை மேன்மேலும் வளர்ப்பதற்குத் துணைபுரியும் அதிபர், பேராசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எமது கலாசாலையிலிருந்து வெளியேறும் ஆசிரிய மணிகள் அனைவரும் நுண்கலைகளில் தேர்ச்சிபெற்று அவற்றை நம் நாடெங்கும் பரப்பவேண்டும் என்ற பெருநோக்குடன் இம்மன்றம் சிறப்புடன் தமது கடமையைச் செய்து வருகிறது.

இம்மன்றம் சங்கீதம், நடனம், ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. வருடந்தோறும் மாணவிகளிடையே இசைப்போட்டி, அபிநயப்போட்டி ஆகிய போட்டிகளின் மூலம் மாணவிகளின் கலையார்வத்திற்கு மேலும் மெருகூட்டப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

எமது கலாசாலைக்கு வரும் கலைச்செல்விகளை உள்ளத்தில் நடனக்கலையிலும், இசைக்கலையிலும் இனம்புரியா ஈடுபாடுடையவர்களாக்கக்கூடிய வல்லமை வாய்ந்தவர் எமது நடனப் பேராசிரியர் திருவாளர். வீரமணிஐயர் அவர்கள். அன்னார் எமது கலாசாலையில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகள் யாவும் சிறப்புடன் விளங்குவதற்குத் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒருங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணித்து அருந்தொண்டு புரிந்தவர். அவர் தற்பொழுது, தமது கலைநுட்பங்களை எமது கலாசாலையில் மட்டுமல்லாது நாட்டின் எல்லாப்பகுதியும் பெறவேண்டுமென்னும் பெருநோக்குடன் மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் கடமையாற்றுகின்றூர். அவரது கலைச்செல்வம் மென்மேலும் பெருக வேண்டுமென்று வாழ்த்துகின்றோம். அன்னருக்கு எமது மன்றத்தின் சார்பாகவும், அதிபர், பேராசிரியர் அனைவரது சார்பாகவும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

வி. சிவபாக்கியம்,
(செயலாளர்.)

---

# சமூக இயல் மன்றம்

காப்பாளர் : திருமதி. சு. செல்லத்துரை

தலைவர் : திருமதி. ம. நடராசா

உதவித்தலைவர் : திருமதி. க. கணேசரத்தினம்

மாணவர்களிடையே சமூகப் பண்புகளை வளர்ப்பதையே பெரு நோக்காகக் கொண்டது எம்மன்றம். தம் குறிக்கோளை நிறைவேற்றுமுகமாகக் காலந் தவறுது இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. சமூக பொருளாதார அரசியலடிப்படையிற் பேச்சுக்கள், விவாதங்கள், கருத்தரங்குகள் முதலியன இடம் பெற்றுள்ளன. பெரியார்களை அழைத்து அவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கும் இச்சங்கம் தவறுவதில்லை. பாராளுமன்ற உறுப்பினரும் சிம்மக்குரலோனெனப் பெயர் பெற்ற வருமான திருவாளர். மு. சிவசிதம்பரம் அவர்கள் இம்மன்றம் சார்பில் வருகை தந்து இலங்கையிலுள்ள நீதிமன்றங்களின் வகைகளும், அதன் கடமைகளும் என்ற விடயம்பற்றி அரிய பெரிய சொற்பொழிவாற்றினர். சமூகப்பாடங்கள் தனிப்பாடங்களாகக் கற்பிக்கப்படுவது சிறந்ததா ? அல்லது ஒரே பாடமாகக் கற்பிக்கப்படுவது சிறந்ததா என்னும் விடயம்பற்றி விவாதம் நடந்தேறியது. இம்மன்றம் சிறப்புடன் வளர்ச்சியடைய ஆக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கும் அறிவுசால் அதிபர் அவர்கட்கும், இம்மன்றக் காப்பாளராகவிருந்து இம்மன்ற வளர்ச்சிக்காக, எம்மைப் பல துறைகளிலும் மேலோங்க வழிநடாத்தும் பேராசிரியர் திருமதி. சு. செல்லத்துரை அவர்கட்கும், மற்றும் பேராசிரியர்கட்கும் எம்மன்றம் என்றென்றும் கடப்பாடுடையதாகும்.

இம்மன்றம் இன்றுபோல் என்றும் ஓங்க வேண்டுமென்பதே எமது அவா.

ச. தனலட்சுமி,
(மன்றச் செயலாளர்.)

---

# இந்து சமய மகளிர் மன்றம்

காப்பாளர் : செல்வி. க. சௌ. சந்தனநங்கை

தலைவர் : திருவாட்டி. நே. தம்பிமுத்து

உபதலைவர் : திருவாட்டி. யோ. குமாரரத்தினம்

கற்றதனாலாய பயன், எந்தையீசன் இணையடியை இறைஞ்சுதலே. பிறவிப்பிணியை நீக்கும் அவ்வைத்தியநாதரை, காதலாகிக் கசிந்துருகிக் கைதொழப் பிறவிப் பெருங்கடலை வேரறுக்கும் முத்திநிலை கிட்டுகிறது. இந்நிலைக்கு வித்திடுவது எம் சீரிய இந்து மகளிர் மன்றமாகும்.

எம்மன்றம் நித்திய பூசை நிகழ்த்தியும், பத்திப்பாசுரங்களைப் பரவசத்துடன் பாடியும், பரமனடி போற்றத் தவறுவதில்லை. அவனருளாலேயன்றி அவனை அடையமுடியாதென்பதை உணர்ந்த எம்மன்றம் சிவனிரவையும் சிந்தையிற்கொண்டு நான்குகாலப் பூசைகளையும் நிகழ்த்திச் சிறப்பாகக் கொண்டாடுகின்றது. மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் பரவ அவதரித்து இறைவன்திருவடியெய்திய நாயன்மார்களின் குருபூசைத் தினங்களையும் கொண்டாடிச் சைவ நன்மக்களுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றது எம் மன்றம். உலகினை இயக்கும் சத்தியின் தினமாகிய நவராத்திரிக் காலங்களிற் சத்தியைப் போற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிப் புனையத் தவறுவதில்லை: இன்னும் இம்மன்ற உறுப்பினர் கிடைத்த வாய்ப்பினைத் தவறவிடாது பல ஆலயங்கள்தோறும் சென்று பூசிப்பதுடன் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்த்தியும் வருகின்றனர் என்பதனைக் கூறிப் பெருமைப்படவேண்டியிருக்கிறது.

இம்மன்றம் பல்லாற்றுலும் மேன்மை கொண்டோங்கக் காரணமாக விளங்குபவர் நம்மன்றக் காப்பாளரும் தமிழ் விரிவுரையாளருமான செல்வி. க. சௌ. சந்தனநங்கை அவர்களே. அன்னர் சமயத்தில் ஆழ்ந்த பற்று உடையவராக இருப்பதுமல்லாது தம்மைப்போல் மற்றவர்களையும் ஆக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் மன்றத்தை ஊக்குவித்து வேண்டிய வேண்டியாங்கு உதவிபுரிகின்ற அன்னர்க்கு எமது மன்றம் என்றும் நன்றியுடையதாக இருக்கின்றது. அன்றி எங்கல்விக் கூடத்தினை இயக்கி, மாணவிகளின் நலனே தம் நலமென மதித்தும் உற்றுழி உதவிவரும் எம் அன்னையாம் அதிபர் திருவாட்டி. இ. ஆனந்தக்குமாரசுவாமி அவர்கட்கும், ஏனைய பேராசிரியர்கட்கும், மன்றத்திற்குத் தொண்டாற்றிய மன்ற உறுப்பினர்க்கும் எமது உள்ளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

வருங்காலச் சிறுர்கள் உள்ளத்திற் சமய உண்மைகளை உரிய முறையிற் போதிக்கவல்ல உத்தம ஆசிரியரை இம்மன்றம் மேன்மேலும் உருவாக்க வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றோம்.

திருவாட்டி. இ. துரைராசா,
மன்றச் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீத்தவ மகளிர் மன்றம்

காப்பாளர் : சங். சகோதரி, அன்ரனி யோசப்

தலைவர் : திருவாட்டி. மேரி குளோட்டில்டா.

செயலாளர் : செல்வி. எலிசபெத் பெர்ணுண்டோ

"உன்னைப்போல் உன் அயலானையும் அன்பு செய்" என்பது இயேசுபெருமானின் திருமொழி. மண்ணில் வதியும் மனிதன் நன்னெறியில் வாழ வழிகாட்டுவது மதங்களேயாகும். அன்பர் இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்வதே கிறீத்தவ சமயக் குறிக்கோளென்க.

எமது பயிற்சிக் கழகத்தில் கிறீத்தவ மாணவிகள் சிறுபான்மையினர். எனினும், ஏனைய மதத்தினருக்கான வசதிகளும், சலுகைகளும் எமக்கும் இங்கு அளிக்கப்பட்டுள்ளமையை நினைந்து நாம் பெருமிதம் அடைகின்றேம். மறைக்கல்வி கற்கும் சந்தர்ப்பம் எமக்கிருப்பதுடன் கிறீத்தவ தினம், கிறீத்துநாதர் பிறந்த தினம் என்னும் திருநாள்களை ஏனைய மாணவிகளுடன் இணைந்து, சிறப்புற நடாத்தும் வாய்ப்புடையேம். இவ்வரிய வாய்ப்புக்களை எமக்களித்துக் கொடுத்து எம்மை ஊக்குவிக்கும் எமது அதிபர் திருவாட்டி. இ. ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் பெருந்தன்மையைப் புகழாதிருக்கமுடியாது. அன்னருக்கு எம் மன்றம் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றது. பல சமய மாணவிகளும் எம்முடன் இத்தினங்களில் ஒத்துழைத்துக் கொண்டாடுகின்றமை ஐக்கிய இயக்கத்தின் நோக்கம் நிறைவேறுவதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையும்.

இம்மன்றம் மாண்பும், மலர்ச்சியுமுடையதாய் வளர, எமது சமய விரிவுரையாளர்களும், மற்றும் பேராசிரியர்களும் தமது ஒத்துழைப்பைத் தந்து உதவுகின்றமை எம் பாக்கியமே. எமக்குத் துணைபுரியுங் கலாசாலைக் காரிகைகட்கும் எம்மன்றம் மனமுவந்த நன்றியைக் கூறுகின்றது.

**இ. எலிசபெத் பெர்ணுண்டோ,**
செயலாளர்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு மன்றம்

காப்பாளர் : திருவாட்டி. டெ. தருமராசா

தலைவி : செல்வி. ச. தனலட்சுமி

உபதலைவி : செல்வி. இ. மனோரஞ்சிதம்

ஆசிரிய உலகில் பங்கு கொண்ட நாமனைவரும், விளையாட்டு, உடற்கல்வி ஆகியவற்றில் போதிய அறிவும், அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும். இந்த அறிவினை ஆசிரியர் பெற்றிருந்தாற்றான் வருங்காலச் சிறாரை உறுதியும், உரமும், வலுவும், வனப்பும் மிக்கவராகத் திகழச் செய்யலாம். இப்பெருநோக்கினைக் கொண்டே எமது கலாசாலை விளையாட்டிற்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

மாலை வேளைகளில் மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து விளையாட்டு மைதானத்தில் வலைப்பந்தாட்டம், எறிபந்து, வளையம் எறிதல், பற்மின்றன் ஆகிய விளையாட்டுக்களில் ஈடுபட்டு மனப் பூரிப்படைவர். அத்துடன் இல்லங்கட்கிடையேயும் காலத்திற்குக்காலம் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

முதலாம் பருவத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தை அருணா இல்லமும், இரண்டாம், மூன்றாம் இடத்தை முறையே இராதா, சுவர்ணா இல்லங்களும் பெற்றன. இரண்டாம் பருவத்தில் நடந்தேறிய உடற்பயிற்சிப் போட்டியிலும், அருணா இல்லம் முதலாம் இடத்தையும், இராதா, சுவர்ணா இல்லங்கள் முறையே இரண்டாம், மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இப்போட்டிகளை விட அதிக ஊக்கத்தையும், ஆர்வத்தையும் அளிப்பது எம்மன்றத்தால் நடாத்தப்பெறும் மெய்வல்லுனர்ப் போட்டியேயாகும். எங்கள் அரசாங்க அதிபரான திரு. வேணன் அபயசேகரா அவர்களைப் பிரதம விருந்தினராகக் கொண்டு இனிது நிறைவேறியது. இப்போட்டியில் அருணா இல்லம் முதலாவது இடத்தைப் பெற்று வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது. சுவர்ணா, இராதா இல்லங்கள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன. இப்போட்டியில் அருணா இல்லத்தைச் சார்ந்த செல்வி. வே. கமலாம்பிகை வீரரமணியாகத் தெரிவு செய்யப்பட்டார். அதே இல்லத்தைச் சார்ந்த செல்வி. ச. தனலட்சுமி இரண்டாம் இடத்தைப் பெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெய்வல்லுனர்ப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற 'அருணு' இல்ல உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளூர். குழு விளையாட்டுக்களிலும் முதலாம் இடத்தை அருணு இல்லமே பெற்றுக் கொண்டது.

எமது மன்றம் சிறப்புடன் வளர்ச்சியடைவதற்கு வேண்டிய காலத்தில் ஊக்கமும், ஆக்கமுமளித்து உற்சாகமூட்டினுர் அதிபர் அவர்கள். மெய்வருத்தம் பாராது தன் கடமையே கண்ணுக இருந்து அயராது உழைத்தனர் உடற்கல்விப் பேராசிரியர் அவர்கள். இல்லங்கட்குப் பேருதவிபுரிந்து அரும்பணியாற்றினர் இல்லத்தாய்மார்கள். எம்மன்ற நலனுக்காக இயன்ற உதவி புரிந்தனர் ஏனைய பேராசிரியர்கள். தம்மாலான உதவி புரிந்தனர் எம் சகோதரிகள். இவர்கள் யாபேருக்கும் எம்மன்றம் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

'வாழ்க விளையாட்டு மன்றம்'

ச. தனலட்சுமி,
(விளையாட்டு மன்றச் செயலாளர்.)

குச தர்ப்பையைத் தவருகப் பிடித்தால், அது பிடிக்கும் கையையே அறுத்துவிடும். இதைப் போன்றே துறவறத்தைத் தவருகக் கடைப்பிடிப்பதனுல் ஒருவன் நரகத்தையே அடைகிருன்.

— புத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணா இல்லம்

**இல்லத் தாய்மார்கள் :**

திருவாட்டி. சு. செல்லத்துரை
திருவாட்டி. பொ. பத்மநாதன்

இல்லத் தலைவி : திருவாட்டி. மி. இளையதம்பி

இல்ல உபதலைவி : திருவாட்டி. இ. அரசரத்தினம்

உலகம் உவப்ப உவகையுடன் கீழ்த்திசையிற் காலிக்கும் கதிரவனின் நாமம் பூண்டு, தாளுண்ட நீரைத் தலையாலே தரும் நன்றியினையுடைய தெங்கினைச் சின்னமாகப் பொருந்தி விளங்குவது, எமதில்லம். அன்றி அகிலத்திருளகற்றும் அருணனின் பெயரைக் கொண்டு விளங்கும் எமதில்லத்திற்குச் சிவப்பு நிறம் மிகப் பொருத்தமானது.

அன்புச் சோதரிகள் இருபத்தொன்பதின்மரைக் கொண்டிலங்குவதெமதில்லம். பல்வகை நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டு பகைமையகற்றி, வெற்றிவாகை சூடி, இல்லத்தினுறுப்பினரை இன்புறச் செய்தவர்கள், எமதில்லத்தவர்கள்.

மெய்வல்லுனர்ப் போட்டி, உடற்பயிற்சிப் போட்டி, வலைப் பந்தாட்டப் போட்டி என்பவற்றில் முதலிடத்தையும், பேச்சுப் போட்டி, செய்யுள் போட்டி ஆகியவற்றில் இரண்டாம் இடத்தையும், பெற்ற பெருமை எம் இல்லத்திற்கே உரியது.

அன்றி, வெற்றி வீரர்களுக்கென, அளிக்கப்பட்ட சகல வெற்றிக் கிண்ணங்களத்தனையையும், வெற்றிக் கேடயத்தையும் தவருது பெறும் பெருமையையும் நாம் ஈட்டியுள்ளோம்.

எமதில்ல அன்னையராகிய, பேராசிரியை, திருவாட்டி. சு. செல்லத்துரை அவர்களும், பேராசிரியை, திருவாட்டி. பொ. பத்மநாதன் அவர்களும், அல்லும் பகலும் அயராத ஊக்கத்தையும், உழைப்பையும் எமக்கு நல்கி வெற்றிக்கு உற்ற துணையாக இருந்துள்ளமையைப் போற்றுகின்றேம். அன்னருக்கு எம் மனங்கனிந்த நன்றி. வேண்டிய பொழுதெல்லாம் ஆதரவும், ஊக்கமும் அளித்த அதிபர், பேராசிரியர் அனைவர்க்கும் என்றென்றும் நன்றியுடையேம். சகல துறைகளிலும் எமதில்லம் சிறந்தோங்க ஒத்துழைத்த எமதில்ல உறுப்பினர்களுக்கும் எம் நன்றி உரித்தாகுக.

எமதில்லம் என்றும், சிறப்புடன் விளங்கி எங்கழகத்தின் மாண்பை உயர்த்துமாக.

**திருவாட்டி. இ. மின்னற்கொடி,**
(இல்லத்தலைவி.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விநோத உடைப் போட்டியிலும், இல்ல அலங்காரப் போட்டியிலும்
முதலாம் இடம் பெற்ற 'இராதா' இல்ல உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராதா இல்லம்

**இல்லத் தாய்மார்கள் :**

திருமதி. R. H. G. கூல்
திருமதி. J. D. பெரேரா

இல்லத் தலைவி : செல்வி. க. சீதாதேவி
உப தலைவி : செல்வி. இ. நேசம்மா

மாயவனின் மனதுக்கினியாளின் நாமத்தைப் பெயராகவும், மக்கள் மனத்திருளகற்றி ஒளியேற்றும் கதிரவனைச் சின்னமாக வும், பவப்பிணி நீக்கும் பசுமையை நிறமாகவும் கொண்டு இயற்கை ஒளிவீசுவது நமதில்லம்.

முன்வந்துதவும் உயர் உள்ளம் கொண்ட நங்கையர் முப் பதின்மரின் உழைப்பின் உறுதியால் கலாசாலையின் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டு இயன்றளவு வெற்றி களை யீட்டியுள்ளது நமதில்லம். பேச்சுப் போட்டி, கதைப் போட்டி, அபிநயப்போட்டி ஆகியவற்றில் முதலாம் இடத்தை யும், செய்யுள் போட்டி, இசைப்போட்டி, உடற்பயிற்சிப் போட்டி ஆகியவற்றில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது எமதில்லம். மெய்வல்லுனர்ப் போட்டியில், இல்ல அலங் காரத்திலும், விநோதஉடை அலங்காரத்திலும் முதலாமிடத் தைப் பெற்ற பெருமை நம் இல்லத்தையே சாரும்.

எமதில்லத் தாய்மார்களாகிய திருவாட்டி J. D. பெரேரா அவர்களும், திருமதி R. H. G. கூல் அவர்களும் அல்லும் பகலும் அயராதுழைத்து, அன்பும் ஆதரவும் நல்கியமையை நாம் மறக்க முடியாது. அவர்களுக்கு எமது இல்லச் சார்பில் எமது மன முவந்த நன்றி உரியதாக. பல்வேறு நிகழ்ச்சிகளையும் நாம் சிறப் புற நடத்த வேண்டிய ஊக்கம் நல்கிய அதிபர் அவர்கட்கும், ஏனைய பேராசிரியர்கட்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம். சகல நிகழ்ச்சிகளிலும் என்னு டன் ஒத்துழைத்த என் இல்லச் சகோதரிகள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்து வளர்பிறையென வளர்க நம் இல் லம் என வாழ்த்துகிறேன்.

செல்வி. க. சீதாதேவி
இல்லத்தலைவி.

UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர்ணு இல்லம்

**இல்லத் தாய்மார்கள் :**

திருமதி. மிதிலாதேவி தாஸ்
திருமதி. லூடிவிக்கா ஜேக்கப்

இல்லத் தலைவி : செல்வி. தா. பூலோகநாயகி

இல்ல உபதலைவி; செல்வி. சி. இராசேஸ்வரி

**"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவணதெய்த இருதலையும் எய்தும்"**

எனக் கூறுநின்றனர் சமணமுனிவரவர்கள். இத்தன்மைச் சிறப்புடைப் பொருள்களில் பொன்னினை யார்தான் விரும்பாதார். இப்பொன்னின் சோதியினுல் சுடர்விடுவது 'சுவர்ணு' எனும் பெயர்பூண்ட எம் இல்லம். மாற்றுத் தங்கத்தின் மறுவற்ற மாண்புறக் கொண்டிலங்குவதும், கருக்கு வாளேந்திக் காசினியைக் காக்கும் கற்பக தருவாம் நற்பனையினைச் சின்னமாகக் கொண்டு சீர்பெறுவதும் எமதில்லமேயாம்.

பண்புமிக்க நங்கையர் இருபத்தொன்பதுபேரின் ஊக்கத்தினுல் கலாசாலைப் பல்வேறு நிகழச்சிகளிலும் பங்குகொண்டு அவற்றில் தம்மாலியன்றளவு வெற்றிகளையீட்டியுள்ளனர் என்பதில் பெருமையுடையேம். இசைப்போட்டி, செய்யுள்போட்டி என்பவற்றில் முதலாமிடத்தையும், மெய் வல்லுனர்ப்போட்டி, நாடகப்போட்டி, அபிநயப்போட்டி, பேச்சுப்போட்டி, விஞேத வுடைப்போட்டி என்பவற்றில் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளது எமதில்லம்.

எமதில்ல அன்னையராகிய பேராசிரியர்கள் திருமதி. மிதிலா தேவி தாஸ் அவர்களும், திருமதி. லூடிவிக்கா ஜேக்கப் அவர்களும் எமக்கு வேண்டிய நேரத்தில் அயராத ஊக்கமும் உதவியும் அளித்தமைக்கு எமதில்லச் சார்பாக எமதுள்ளங்கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேம்.

இத்துடன் வேண்டிய நேரத்தில் வேண்டிய உதவிகளையெல்லாம் அகமும் முகமும் மலர்ந்த வண்ணம் எமக்களித்து எம்மை ஊக்குவித்த பண்புசால் அதிபர் அவர்கட்கும், எம் இல்லச் சார்பாக நன்றியைச் செலுத்துகின்றேம்.

மற்றும் எமது வெற்றிகளுக்குக் காரணமாயிருந்து ஒத்துழைத்த சகோதரிகளுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

மேலும் எம்மில்லம் அன்றுபோல் என்றும் நிலைபெற்று வளர இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

தா. பூலோகநாயகி,
இல்லத் தலைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெய்வல்லுனர்ப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற 'சுவர்ண' இல்ல உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1965-ம் ஆண்டு பயிற்சி பெற்று
# வெளியேறிய மாணவிகள்

| | |
|---|---|
| அன்னம்மா முருகேசு | அராலி |
| எலிசபெத்து சற்குணதேவி வேலுப்பிள்ளை | கரவெட்டி |
| ஞானேஸ்வரி மகாலிங்கம் | கோப்பாய் |
| ஞானம்மா கந்தையா | புங்குடுதீவு |
| ஞானாம்பிகை மிக்கேற்பிள்ளை | அளம்பில் |
| ஜேட்றூட் விசயகுமார் | சுருவில் |
| கமலாதேவி இராசசுந்தரம் | மாதகல் |
| கனகம்மா அருணாசலம் | மிருசுவில் |
| கண்மணி தாமோதரம்பிள்ளை | புத்தூர் |
| குகானந்தநாயகி தம்பித்துரை | உடுவில் |
| லில்லி கார்த்திகேசு | உசன் |
| லோகநாயகி வல்லிபுரம் | முள்ளியவளை |
| மனோன்மணி சுப்பிரமணியம் | பூநகரி |
| நாகம்மா சின்னையா | முள்ளியவளை |
| பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை | கொழும்புத்துறை |
| பவளராணி பரமசாமி | சாவகச்சேரி |
| புஷ்பராணி கந்தசாமி | சங்கானை |
| புவனேசுவரி ஆறுமுகம் | புங்குடுதீவு |
| இராசம்மா சின்னத்தம்பி | சாவகச்சேரி |
| இரத்தினம் சின்னத்துரை | நீர்வேலி |
| இரத்தினபூபதி கந்தையா | இடைக்காடு |
| இரத்தினேசுவரி செல்வத்துரை | அச்சுவேலி |
| செல்வராணி வேலுப்பிள்ளை | மட்டுவில் |
| சிவபாக்கியம் சிதம்பரப்பிள்ளை | மந்துவில் |
| சிவசோதி முத்துக்குமாரசாமி | சுன்னாகம் |
| தவமணிதேவி சுவாமிநாதர் | வவுனியா |
| தெய்வயானை கந்தப்பு | கரவெட்டி |
| திலகாம்பாள் சண்முகநாதன் | உடப்பு |
| யோகம்மா சுப்பிரமணியம் | மீசாலை |
| விசாகபூஷணம் முருகையா | தொல்புரம் |
| இராசம்மா வல்லிபுரம் | மானிப்பாய் |
| நாகம்மா தேவராசா | வேலணை |
| பரமேஸ்வரி சிவானந்தம் | கரவெட்டி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1966-ம் ஆண்டு பயிற்சிபெற்று
# ஆசிரியராக வெளியேறும் மாணவிகள்

| | | |
|---|---|---|
| திருவாட்டி. | விஜயலட்சுமி தம்பியையா | பண்டத்தரிப்பு |
| ,, | அன்னப்பிள்ளை ஆறுமுகம் | கொடிகாமம் |
| செல்வி. | செல்வமணி செல்லையா | நுணாவில் |
| திருவாட்டி. | இராஜலட்சுமி துரைராசா | கம்பர்மலை |
| ,, | மாகிறெற் யோசவ் எஸ்பீரியர் | யாழ்ப்பாணம் |
| ,, | மின்னற்கொடி இளையதம்பி | மட்டுவில் |
| செல்வி. | சிவக்கொழுந்து இளையதம்பி | மீசாலை |
| ,, | மேரி பெர்னாண்டோ | கொச்சிக்கடை |
| திருவாட்டி. | செல்வரத்தினம் கணேசலிங்கம் | கம்பர்மலை |
| செல்வி. | தேவரத்தினம் கனகசபை | சரசாலை |
| ,, | யோகசவுந்தரி கணபதிப்பிள்ளை | முள்ளியவளை |
| ,, | யோகேஸ்வரி கணபதிப்பிள்ளை | வேலணை |
| ,, | சீதாதேவி கணபதிப்பிள்ளை | புலோலி |
| ,, | இராதாதேவி குமாரசாமி | மட்டுவில் |
| ,, | கரியற்மிராண்டா பெர்னாண்டோ | கோட்டப்பிற்றியா |
| ,, | மகேஸ்வரி முருகுப்பிள்ளை | இடைக்காடு |
| ,, | கோகிலம் நாகலிங்கம் | கற்கோவளம் |
| திருவாட்டி. | விமலாதேவி கைலாயநாதன் | கோண்டாவில் |
| ,, | மனோன்மணி நடராசா | கரணவாய் |
| ,, | எட்வேட் யோசேப்பின் றெவல் | வங்காலை |
| செல்வி. | ஸ்ரீரங்கநாயகி சண்முகநாதன் | உரும்பிராய் |
| திருவாட்டி. | நாகேஸ்வரி சிவபாதசுந்தரம் | துன்னாலை |
| செல்வி. | தனலட்சுமி சங்கரப்பிள்ளை | சங்கானை, மேற்கு |
| ,, | பூலோகநாயகி தாமோதரம்பிள்ளை | முள்ளியவளை |
| திருவாட்டி. | நேசமலர் தம்பிமுத்து | கோண்டாவில் |
| ,, | பரஞ்சோதியம்மா வேலுப்பிள்ளை | கைதடி |
| செல்வி. | சிவபாக்கியம் வியாளரத்தினம் | நாவற்குளி |
| திருவாட்டி. | மகேஸ்வரி வீரகத்தி | குடமியன், வரணி |
| ,, | டெய்சி சின்னத்தம்பி | சாவகச்சேரி |
| ,, | சிவஞானபதி தியாகராசா | கட்டுவன் |
| ,, | மேர்சியா அப்புகாமி | நீர்கொழும்பு |
| ,, | சந்திராவதி சாமியையர் | மருதங்குளம் |
| செல்வி. | எலிசபேத் பெர்னாண்டோ | கொச்சிக்கடை |



247164

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணமக்கள் மாண்புடன் இனிது வாழ்க

மனையறம் போற்றி மாயிரு ஞாலத்து
மாசறு வாழ்வில் மக்களைப் பெற்று
மனங்கவர் மலரும் மணமும் போல
மாண்புடன் இனிது வாழ்க.

1. செல்வி. சுப்பராயச் செட்டியார் அபயாம்பிகையம்மாள் –1963—1964
திருவாட்டி. அ. சுப்பிரமணியம்

2. செல்வி. கந்தையா ஞானம்மா –1964—1965
திருவாட்டி. ஞா. வரதராசசிங்கம்

3. செல்வி. வேலுப்பிள்ளை யோகம்மா –1964—1965
திருவாட்டி. யோ. சுப்பிரமணியம்

4. செல்வி. மிக்கேல்பிள்ளை ஞானும்பிகை–1964—1965
திருவாட்டி. ஞா. இம்மானுவேல்

5. செல்வி. பழனியாண்டி திலகாம்பாள் –1964—1965
திருவாட்டி. தி. சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிடும் தாள்கள் முதலியன
அப்பியாசப் புத்தகங்கள்
மலிபன் விஸ்கோத்து, தங்காஞ தேயிலை
மற்றும் ஏக விநியோகப் பொருட்கள்

எமது மொத்த விற்பனை நிலையத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
மொத்த விற்பனை நிலையம்
287, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

போன் : 281 தந்தி : 'ஜுவல்லர்ஸ்'

விஜயம் செய்யுங்கள்!

நம்பிக்கை! நாணயம் நயம்!!
மிக்க நவ நாகரிக ஆபரணங்களை
செய்தளித்து மக்கள் ஆதரவைப் பெற்ற
சிறந்த இடம்

எல். கே. எஸ்.
தங்க மாளிகை
யாழ்ப்பாணம்.

புகழ் எல். கே. எஸ். நகைகளை அணிந்து
ஆனந்தமடையுங்கள்.

UNIVERSITY OF JAFFNA LIBRARY
University of Jaffna
247164
Library
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ. கே. எஸ். அன் சன்ஸ்

வட இலங்கையின் மிகப் பெரிய

**நகை, வைர, வியாபாரிகள்**

## நகை மாளிகை

**யாழ்ப்பாணம்.**

---

# A. K. S. & SONS

**BIGGEST MENUFACTURING**

**JEWELLERS & DIAMOND MERCHANTS**

**TH CEYLON**

by:-

P. K. K. ILASAPAT

**OUSE**

**NA.**

ESTD: 1914

PHONE: 519


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித சூசைமாமுனிவர் அச்சகம்.
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org